உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம். 1266

# சிவஞானத்தெளிவுபதேசத்திரயம்.

X D. 9,

திருவாவடுதுறையாதீனத்து

## ஸ்ரீகச்சியப்பமுனிவர்

அருளிச்செய்த

திருவானைக்காப்புராணம்: ஞானோபதேசப்படலமும்

திருப்பேரூர்ப்புராணம்: காலவர்வழிபடுபடலமும

திருத்தணிகைப்புராணம்: நந்தியுபதேசப்படலமும்

கந்தபரம்பரை

சூரியனார்கோயிலாதீனத்து

ஸ்ரீ சிவாக்கிரயோகீந்திரஞான சிவாசாரியசுவாமிகளாய்

எழுந்தருளிய

ஸ்ரீலஸ்ரீ மஹாசந்நிதானம்:

## முத்துக்குமாரதேசிகசுவாமிகள்

அடியார்களுள் ஒருவராகிய

## சிதம்பரத்தம்பிரான்

இயற்றிய உரையுடன்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பெற்றன.

(Copyright Registered.)

மகாமகோபாத்யாய, டாக்டர்

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

அடையாறு, சென்னை-20.

உ

ஸ்ரீ மெய்கண்டமயம்.

சிதம்பரம், சிவஞானத்திருத்தளி,

மெய்கண்டதேவருரைமுகத்து மாணாக்கர்

# ஸ்ரீமத் சிதம்பரசுவாமிகளியற்றிய

# சிறப்புப்பாயிரம்.

எழுத்துச்சொற்பொருளேவேதமியலுலகங்கிமூர்த்தி
விழுத்தனித்தனியிங்கின்னவேறுகூறுருவமூன்றாய்
வழுத்துபதேசமூன்றுவருமன தமையுட்கொண்டு
கொழுத்திடுபடலமூன்றுகுலவுநூலவையுமூன்றே.

அன்னவைதணிகைபேரூரானைக்காமாலைசூதன் [றம்
சொன்னநூற்பொருள்கள்மூன்றுசொற்பொருள் பற்றித்தோன்
அன்னினரிதங்காய்வார்க்கப்பொருளெளிதினாகப்
பன்னினனுரையினன்றாற்பன்னுதமிழ்மன்னனென்றே.

எம்பெருமக்கள்பின்னோரீரறுவோருள்முன்னோர்
அம்பெருங்கவியாங்காளுசிய துமுணுமபிதுருஞ்ஞான
உமபரூர்பின்னர்மன்னுமுனியுமோருருவமாகி
இமபரிம்முனிவனானசிதமபரமுனியினானே.

திருச்சிற்றம்பலம்.

ஆதிபரமாப்தராகிய சிவபெருமானிடத்திலும் அவர் திருக்குமாரராகிய கந்தபரமாசாரியரிடத்திலும் சைவசித்தாந்த சாத்திரோபதேசம்பெற்றவர் திருநந்திதேவர். அவரிடத்தே சனற்குமார மகாமுனிவரும், அவரிடத்தே சத்தியஞான தரிசனிகளும், அவரிடத்தே பரஞ்சோதி மகாமுனிவரும், அவரிடத்தே மெய்கண்டதேவரும், அவரிடத்தே அருணந்திசிவாசாரியரும், அவரிடத்தே மறைஞானசம்பந்த சிவாசாரியரும், அவரிடத்தே உமாபதிசிவாசாரியரும் என இவர் முறையே ஞானோபதேசம் பெற்றனர். இவர்களுள் மெய்கண்டதேவர் அருணந்திசிவாசாரியர் உமாபதிசிவாசாரியர் என்னும் மூவரும் உய்யவந்ததேவநாயனார் இருவரும் திருவதிகை மனவாசகங்கடந்தாரும் ஆகிய அறுவரும் சிவாகமத்தின் ஞானகாண்டப்பொருளைப் பரிபக்குவர்கள் அறிந்து உய்யுமாறு தமிழிலே சைவசித்தாந்தசாத்திரம் பதினான்காகச் செய்தருளினார்கள். இவர்கள் பரம்பரை திருக்கைலாசபரம்பரை எனவும், சந்தானாசாரிய பரம்புரை எனவும் கூறப்படும்.

இத்திருக்கைலாசமலைச் சந்தானாசாரிய பரம்பரையில் ஞானோபதேசம்பெற்ற திருவாவடுதுறை தருமபுரம் சூரியனார் கோயில் முதலிய சைவசித்தாந்த ஆதீன மடங்களிலே கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்தோராய் ஞானோபதேசம்பெற்று ஆகமங்களையும் தமிழ்ச் சைவ சித்தாந்தசாத்திரங்களையும் சந்தேக விபரீதமறத்தெளிந்து சிவானுபூதிமான்களாய் வீற்றிருந்தோர் சிலரும் சைவசித்தாந்த சாத்திரப்பொருளைத் தமிழிலே ஒவ்வொருநூலாக இயற்றினார்கள்.

திருக்கைலாசபரம்பரைத் திருவாவடுதுறை மடத்திலே ஞானோபதேசம் பெற்றுச் சிவாகமங்களையும் சித்தாந்த சாத்திரம் பதினான்கையும் நன்குகற்றவரும், சிவஞானபோத திராவிட மஹாபாஷ்ய கர்த்தாவாகிய சிவஞானமுனிவருடைய மாணாக்கர்களுள்ளே முதல்வரும், "புறச்சமயப் பிணக்குநூல் வழியினைத்தும் பிழையெயன்றி—வாயன்மைதெளிந்து சைவ

சித்தாந்த வழிதேறி யதீதவாழ்விற்—போயண்மி"ய சிவாநுபவச்செல்வரும், கவிச்சக்கிரவர்த்தியுமாகிய கச்சியப்பமுனிவர் தாம் பாடிய திருவானைக்காப்புராணம் திருப்போரூர்ப்புராணம் திருத்தணிகைப்புராணம் என்னும் மூன்றினும் சைவசித்தாந்த சாத்திரப்பொருளை முறையே தொகைவகை விரியாகப் பாடினர். இம்மூன்றுபுராணங்களினும் முறையாகவுள்ள ஞானோபதேசப்படலம் காலவர்வழிபடுபடலம் நந்தியுபதேசப்படலம் என்னும் மூன்றும், தேவிகாலோத்தரமும் சர்வஞ்ஞானோத்தரமும் சிவஞானபோதமும்போலச் சைவசித்தாந்தப்பொருளை அதிகாரிகள் எளிதின் உணருமாறு கூறுவனவாம். ஞானோபதேசப்படலத்தில் திரிபதார்த்தலக்ஷணத்தைப் பெரும்பான்மையும் தொகையாகவும், காலவர்வழிபடுபடலத்தில் சுத்தாவத்தைக் கண்ணே பரமுத்திக்கு விக்கினமாகவருகின்ற புறச்சமய அகச்சமயக்கொள்கைகளை மறுத்துச் சீவன் முத்தி பரமுத்தி யிலக்கணங்களை வகையாகவும், நந்தியுபதேசப்படலத்தில் திரிபதார்த்த இலக்கணங்களையும் சுத்தாவத்தைக் கணிகமும் தசகாரியங்களையும் அவற்றுட் சிவபோகமாகிய சீவன் முத்தி பரமுத்தி நிலைகளையும் விரிவாகவுங் கூறுதலை யோர்ந்துணர்க.

சிவாகமங்களினும் தமிழ்ச் சைவசித்தாந்த சாத்திரங்களினும் பரந்துகிடக்கும் முப்பொருளினிலக்கணங்களை எளிதினுணருமாறு தொகுத்துக்கூறும் இம்மூன்று படலங்களுக்கும் சிவஞானத்தெளிவுபதேசத்திரயம் எனக் காரணக்குறிதந்து இந்நூலைத்தொகுத்து உரையெழுதி வெளிப்படுத்திய திருக்கைலாசபரம்பரைச் சூரியனார் கோயிலாதீனத்து ஸ்ரீமத் சிதம்பரத்தம்பிரானவர்களுடைய கைம்மாறில்லாதநன்றி சைவாபிமானிகளால் என்றும் போற்றற்பாலதாம்.

சிதம்பரம்.
சைவப்பிரகாசவித்தியாசாலை.
காலயுக்தி௵ ஆனி௴.

இங்ஙனம்,
ச. பொன்னம்பலவன்.

# குருவணக்கம்.

சீர்மேவு கயிலாய பரம்பரையிற் சிவஞான சித்திகாட்டும்
ஏர்மேவும வாமமுனி சந்ததிக்கோ ரிளஞானபானு வாகிப்
பார்மேவு பரிதிபுரி வாழ்சிவாக் கிரகுருவாம் பரமதேவன்
தார்மேவு கந்தகுரு மரபுடையோன் றிருமரபு தழைகமாதோ.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# சிவஞானத்தெளிவுபதேசத்திரயம்.

முதலாவது

## திருவானைக்காப்புராணத்து

## ஞானோபதேசப்படலம்.

### விநாயகவணக்கம்.

நிலம்போற்றும் பணிக்கிரண நிலாவணிந்த நாயகனார் நிருத்தர் வாழுஞ், சலம்போற்று மதில்பொடித்த ஞான்றினிய பூசனைகள் சால வாற்றிப், புலம்போற்று மெய்யடியார் விநாயகனென் றியம்புபதப் பொருளை நாட்டி, வலம்போற்று மணியிரந்த மூர்ந்தமழ விளங்களிற்றை வணக்கஞ் செய்வாம்.

---

திருக்கைலாசமலையிலே ஆன்மாக்கள் போகந்துய்த்துய்யுமாறு உமாதேவியாரோடு கூடி வீற்றிருக்குஞ் சிவபெருமான், முன்னொருகாலத்திலே, பக்குவான்மாக்களை யோகியற்றி வீடடைதற்பொருட்டு, உமையை நோக்காது தக்ஷிணாமூர்த்தியாய் நெடுங்காலம் வீற்றிருந்தருளினார். அதுகண்ட தேவியார் ஒருநாள், சூழ்ந்திருக்குங் கணங்கள் காணும்படி ஒரு திருவிளையாட்டாக இதுவென்ன யோகம்! என்னும் இழித்தற் குறிப்புத் தோன்றப் புன்னகைசெய்தார். அதனால் அவருக்குளதாகிய பாவநீங்குமாறு சிவபெருமான் சிறிது கோபங்காட்டி "நீ எம்மைப் பிரிந்து துன்புழந்திருக்கக்கடவாய்" எனச் சபித்தார். அக்கொடுமொழியைக் கேட்ட தேவியார் நடுநடுங்கிப் பெருங் கவலையுற்றுப் பெருமானை வணங்கி, "அடியவர் செய்யுங் குற்

றம் அநேகமாயிரங்களேயும் பொறுத்தருளும் பெருங்கருணைக் கடலே, என்னல் இது தாங்குந்தன்மைத்தோ" என்று வருந்தி நின்றார். சிவபெருமான் அதற்கிரங்கி "தேவியே, நீ வருந்தற்க சிலநாள் எம்மைப் பிரிந்து தென்றிசையிலுள்ள ஞான க்ஷேத்திரமாகிய ஆனைக்காவிற் சென்று தவநெறியினளாய் எம்மைப் பூசித்திருக்குதி; யாம் ஆண்டு வந்து உனக்கு ஞானோபதேசஞ் செய்வோம்; அதனல் தனித்த நீ எம்மோடுங் கலந்து எமது சத்தியாமுறையிற் பிரிப்பின்றி வாழ்வாய்" என்றருளினார். அதுகேட்ட தேவியார் அங்ஙனமே திருவானைக்காவை யடைந்து தவவேடம் பூண்டு சிவனைப் பூசித்துக்கொண்டிருந்தனர். நாயகியாருடைய தவத்திற்கிரங்கிய சிவபெருமான் அவர் எதிரே தோன்றினர். அவரும் நாயகரை வணங்கி, கன்மநெறிப்படரும் உயிர்களின்பொருட்டுப் பலவரங்களை வேண்டிப் பெற்று "இன்னஸ்தலத்தில் உனக்கு அநுக்கிரகிப்போம்" என்று கைலாசத்தில் அடியேனுக்கு உத்தரவளித்தபடி அந்த ஞானத்தையும் ஈண்டே உபதேசஞ் செய்தருளும் என்று பக்குவான்மாக்கள் உய்யுமாறு வேண்டி நின்றார். சிவபெருமான் அங்ஙனமே செய்வோம் என்று திருவாய்மலர்ந்து அங்கே நாவன் மரமாய் நின்ற சம்புமாமுனிவருக்கும் அரிபிரமேந்திராதி தேவர்களுக்கும் அவரவர் வேண்டிய வரங்களைக் கொடுத்தருளி, திருமுன்னே நிற்கின்ற திருநந்திதேவர்மீது திருக்கடைக்கண் சாத்தியருளினார்.

அக்கடவுளுடைய திருக்குறிப்பை யுணர்ந்த திருநந்திதேவர் சம்புமகாமுனிவரைத்தவிர அங்கே ஞானோபதேசம் பெறுதற்கு அருகரல்லாதவர்களாய் நின்ற பிரமா விட்டுணு முதலிய எல்லாரையும் அகற்றி, அம்முனிவருந் தாமும், சிவபெருமான் வீற்றிருந்து ஞானோபதேசஞ் செய்தற்குரிய மண்டபத்தை அடைந்தார். அம்மண்டபத்திலுள்ள ஞானசிம்மாசனத்திலே சிவபெருமான் தக்ஷிணமூர்த்தியாய் எழுந்தருளியிருந்து தேவியாருக்கும் நந்திதேவருக்கும் சம்புமுனிவருக்கும் ஞானோபதேசஞ் செய்வாராயினர். அந்த உபதேசமே ஈண்டு கூறப்படுகின்றது.

## நூல்.

சந்த வான்மதி மிலைச்சிய தாழ்சடை யழகர்
நந்தி வாண்முக நோக்கினர் நந்திதாழ்ந் தெழுந்து
முந்த னார்திரு வுளத்தெழு முன்னமிக் கறிந்திட்
டந்தின் மேயினா ரியாரையும் புடையகற் றினனால்.

இதன்பொருள். சந்த வால் மதி மிலைச்சிய தாழ் சடை அழகர் - ஞானோபதேசஞ் செய்யத்தொடங்கிய அழகிய வெண்மையாகிய சந்திரனையணிந்த தொங்குகின்ற சடையினையுடைய தக்ஷிணாமூர்த்த சிவபெருமான்,—நந்தி வாள் முகம் நோக்கினர் - திருநந்திதேவருடைய ஒளிபொருந்திய முகத்தை நோக்கியருளினார்.—நந்தி தாழ்ந்து எழுந்து முநதனார் திருவுளத்து எழும் முன்னம் மிக்கு அறிந்து - அந்நந்திதேவர் வீழ்ந்து வணங்கி எழுந்து சிவபெருமானார் திருவுளத்துதித்த திருக்குறிப்பை நன்குணர்ந்து,—அந்தில் மேயினார் யாரையும் புடை அகற்றினன் - உண்மையுபதேசம் கேட்கும் பக்குவமில்லாதவர்களாய அவ்விடத்து நின்ற பிரம விஷ்ணு முதலிய எல்லாரையும் அப்பாற்போக்கினார். என்பதாம். (௧)

சம்பு மாதவ னந்தியென் றிருவருந் தவங்க
ளும்ப ரார்க்கரி யனமிக வுஞற்றிய பேற்றா
லம்பர் மாதுமை யாளொடுங் கேட்கிய வருள்பெற்
றெம்பி ரானிருந் தருள்புரி மண்டப மிழைத்தார்.

இ - ள். சம்பு மாதவன் நந்தி என்று இருவரும் உம்பரார்க்கு அரியன தவங்கள் மிக உஞற்றிய பேற்றால் - சம்புமகாமுனிவரும் திருநந்திதேவரும் என்னும் இரு பெரியோரும் பிரமன் மால் முதலிய தேவர்களுக்கெல்லாம் அறிதற்கும் அரியனவாகிய பெருந்தவங்களை மிகவுஞ்செய்த பேற்றினாலே,—அம்பர் மாது உமையாளொடும் கேட்கிய அருள்பெற்று—அவ்விடத்தே உமாதேவியாரோடு தாங்களும் ஞானோபதேசங் கேட்கும்படி சிவபெருமானிடத்தே அநுக்கிரகத்தைப் பெற்று,—எம்பிரான் இருந்து அருள் புரி மண்டபம் இழைத்தார் - அச்சிவபெருமான் எழுந்தருளியிருந்து அநுக்கிரகஞ் செய்தற்குரிய ஞானோபதேசமண்டபத்தை இயற்றினார்கள். எ - ம். (௨)

இமைய மால்வரை யெனச்சிறந் தொளிருமண் டபத்தி
னமையு மாதனத் தங்கணன் வீற்றிருந் தருளி

யுமையை நோக்கிநீ யோகுழப் பதின்விஞு யினையாற்
சமைய மாறுமுய்ந் திடவது கேளெனச் சாற்றும்.

இ - ள். மால் வரை சிமையம் எனச் சிறந்து ஒளிரும் மண்டபத்தின் அமையும் ஆதனத்து அங்கணன் வீற்றிருந்தருளி - மகா மேருவின் சிகரம்போலச் சிறந்து விளங்கும் அவ்வுபதேசமண்டபத்திலே அமைத்திருந்த ஞானசிம்மாசனத்திலே அருட்கண்ணராகிய சிவபெருமான எழுந்தருளியிருந்து,—உமையை நோக்கி - உமாதேவியாரைத் திருநோக்கஞ் செய்து—நீ சமையம் ஆறும் உய்ந்திட யோகு உழப்பதின் விஞுவினை - தேவியே நீ அறுவகைச்சமைய பேதத்தோர்களும் சோபானக்கிரமமாக வந்து இவ்வுண்மை ஞானத்தை அடைந்துய்யுமாறு நாம் யோகஞ் செய்தலைக்குறித்து முன்னொருகாலத்திலே கைலாசத்தில் நம்மை விஞவிஞய,—அது கேள் எனச் சாறறும-அவ்வுண்மை ஞானத்தைத தெளிவுபொருந்த உபதேசிப்பாம கேட்பாயாக வென்று உபதேசிப்பாராயிஞர்.எ-ம்.

உலகமி யாவையு மோங்கிய நமதருள் வழியி
னிலவு நீர்மைய வாதலி னிழன்மணிப் பூணு
யிலக வாட்டுவா ஞடிமுன் காட்டுமா றென்னப்
பலவு நாம்பயின் றுலகினைப் பயிற்றுதல் வேண்டும்.

இ - ள். நிழல் மணிப் பூணும் - பலசத்திகளைத் தோற்றுவிக்கும் மாட்சிமைவாய்ந்த சாயைபொருந்திய தைவிக இரத்தினங்களமைந்த ஆபரணத்தை அணிந்த தேவியே,—உலகம் யாவையும் ஓங்கிய நமது அருள் வழியின் நிலவும் நீர்மைய ஆதலின் - எல்லா உலகங்களும் உயர்ந்த நமது ஆணையாகிய சத்தியின் வழிப்பட்டனவாகி விளங்குந்தன்மையவாதலிஞல்,—இலக ஆட்டுவான் முன் ஆடிக் காட்டுமாறு என்ன - விளங்குமபடி ஒருநாடக நடிபபிப்பவன் நடிக்க விரும்பிஞேர்க்குத் தான் முதற்கண் நடித்துக் காட்டுவதுபோல,—பலவும் நாம் பயின்று உலகினைப்பயிற்றுதல் வேண்டும்-எல்லாத் தொழில்களையும் நாம் முதற்கண்ணே செய்து காட்டி உலகத்தைப் பழக்குதல் வேண்டுமன்றே. எ - ம். (௪)

ஆகை யான்மல பந்தமா கியவுயிர் மாயா
போக மார்தர நிற்றழீஇப் போகியா யிருந்தும்
யோக மாற்றிமெய்ஞ் ஞானமுற் றுயர்சிவ யோகத்
தேக மாகிவீ டெய்திட யோகியா யிருந்தும்.

இ - ள். ஆகையான் - ஆதலிஞலே,—மலபந்தம் ஆகிய உயிர் மாயாபோகம் ஆர்தர நின்றழீஇப் போகியாய் இருநதும் - ஆண

வமலபந்தத்துட்பட்ட ஆன்மாக்கள் மாயாபோகத்தை அநுபவிக்கும்படி நாம் உன்னைக்கூடிப் போகரூபியா யிருந்தோம்,—உயர் சிவயோகத்து ஏகமாகி மெய்ஞ்ஞானம் உற்று வீடு எய்திட யோகம் ஆற்றி யோகியாய் இருநதும் - அவ்வான்மாக்கள் உயர்வாகிய சிவயோகத்தினாலே ஒற்றுமைப்பட்டு உண்மைஞான முறுதலாகிய இறைபணி நிற்றலை அடைந்து வீட்டின்பந் துய்க்குமாறு நாம் யோகரூபியாயிருந்தோம். எ - ம். (ரு)

விரைத்த மென்மலர் வாளியான் விளிந்தகா ரணமு
நிரைத்த வையகத் தியாவரு நேரிழை யவர்பால்
வரைத்த வின்னல நுகர்ந்தகா ரணமுமா னனையா
யுரைத்த வொண்பொரு ளிரண்டற்குஞ் சான்றென வுணர்தி.

இ - ள். மான் அனையாய - தேவியே,—நிரைத்த வையகத்து யாவரும் நேர் இழையவர் பால் வரைத்த இன் நலம் நுகர்ந்த காரணமும - வரிசையாக அமைக்கப்பெற்ற உலகினகணுள்ளார் யாவரும் நோமையாகிய இழையினையுடைய மகளிாகளிடத்தே அநுபவிக்க நியமித்த சிறநினபத்தை நுகர்ந்த காரணமும்,— விரைத்த மென மலர் வாளியான் விளிந்த காரணமும் - வாசனை பொருந்திய மெல்லிய புட்பபாணங்களையுடைய மன்மதன எரிந்தகாரணமும்,—உரைத்த ஒண் பொருள் இரண்டற்குஞ் சான்று என உணர்தி - எம்மாற் கூறப்பட்ட ஒளிாிய பொருளாகிய போகயோகங்களிரண்டற்கும் முறையே சான்றுமென உணாந்து கொள்ளக்கடவாய. எ - ம். (சு)

என்று கூறலு மகிழ்ந்துமை யிறைஞ்சியீ துரைக்கு
மொன்று மாமலந் தழுந்திய வுயிரெலா மாயைத்
துன்று போகமுற் றுனதருண் ஞானத்தாற் றுகடீர்
நன்று வீட்டினை நண்ணுமென் றுரைத்திநா யகனே.

இ - ள். என்று கூறலும் - என்றிங்ஙனம் சிவபெருமான் திருவாயமலாந்தருளுதலும்,—உமை மகிழ்நது இறைஞ்சி ஈது ஒன்று உரைக்கும் - உமாதேவியார் மகிழ்ந்து வணங்கி இஃதொன்றினைப் பிரார்த்திப்பார்:—நாயகனே - தலைவரே,—மாமலத்து அழுநதிய உயிரெலாம் - கரிய ஆணவமலத்திலுள்ளே அழுந்திய ஆனமகோடிகளெல்லாம்,—மாயைத் துனறு போகம் உற்று உனது அருள் ஞானத்தால் துகள் தீர் நன்று வீட்டினை நண்ணும் என்று உரைத்தி - மாயையினகட் கட்டுண்டு கிடக்கும் கருமபோகத்தை அநுபவித்துத் தேவரீருடைய அருள ஞானத்தினாலே

அம்மலக்குற்றம் நீங்கி நன்றாகச் சிவசாயுச்சியத்தை அடையும் என்று திருவாய்மலர்ந்தருளினீர். எ - ம். (எ)

இருளு மாமலம் யாதுயிர் யாதியா மாயை
கரும மியாதுமெய்ஞ் ஞானமியா தியாதுகாண் முத்தி
பொருவி லாவிவை யனைத்தையும் புகாற வடியேன்
றெருளு மாறரு ளுதியெனச் செய்யவாய் மலர்ந்தாள்.

இ - ள். இருளும் மாமலம் யாது - அவைகளுள்ளே மறைப்பைச் செய்கின்ற கரிய ஆணவமலம் எத்தன்மையது,—உயிர் யாது - ஆன்மா எத்தன்மையது,—மாயை யா - மாயை எத்தன்மையன,—கருமம் யாது - கருமமலம் எத்தன்மையது,—மெய்ஞ்ஞானம் யாது - உண்மை ஞானம் எத்தன்மையது,—முத்தி யாது - வீட்டின்பம் எத்தன்மையது,—பொருவு இலா இவை அனைத்தையும் - ஒன்றையொன்றொவ்வாத இப்பொருள்களின இலக்கணங்கள் யாவற்றையும்,—அடியேன் புகர் அறத்தெருளுமாறு அருளுதி எனச் செய்யவாய் மலர்ந்தாள் - அடியேன் ஐயந்திரிவின்றித் தெளிய உணருமாறு அநுக்கிரகஞ் செயதருளுவீர் என்று வினவினார். எ - ம். (அ)

சிலையு யிர்த்தவ ளின்னணம் வினவலுந் தெரிக்குங்
கலைம லர்க்கரத் தணிந்தருள் கண்ணுதற் பெருமா
னிலைமு கத்தபூ ணிளமுலை மாதரா யெல்லா
மலைவ றத்தெளிப் பாமதி யெனவிறை வழங்கும்.

இ - ள். சிலை உயிர்த்தவள் இன்னணம் வினவலும் - பார்ப்பதிதேவியார் இவ்வாறு பிரார்த்தித்தலும்,--தெரிக்குங் கலை மலர்க்கரத்து அணிந்தருள் கண்ணுதற் பெருமான் - உபதேசகலையாகிய சிவஞானபோதத்தை மலர்போலுந் திருக்கரத்திலே தரித்தருளும் பரமகுருவாகிய சிவபெருமான்,—இலை முகத்த பூண் இளமுலை மாதராய் - இலை ஆகிருதியாகிய ஆபரணத்தையணிந்த இளைய தனங்களையுடைய தேவியே,—எல்லாம் மலைவுஅறத் தெளிபபாம் மதி என இறை வழங்கும் - நீ வினவிய வினாக்களியாவற்றிற்கும் ஐயந்திரிவு நீங்க விடை அளிப்பாம் தேர்ந்துகொள்வாய என்று உபதேசிப்பாராயினார். எ - ம். (கூ)

சூள வன்மல மூலந்தங் காலவெல் லைகளின்
மீளு மெண்ணருஞ் சத்திக ளுடையதாய் விரவிக்
கோளு றும்பசு வறிவினைக் கூட்டொடு மறைக்கும்
வாளு றும்பல விழியினை மறைத்திடு மிருள்போல்.

இ - ள். காள வல் மூலமலம் - இருளினுங்கரிய வலிய மூலமலமாகிய ஆணவம் என்பது,—தம் கால எல்லைகளின் மீளும் எண்ணரும் சத்திகள் உடையதாய் - தத்தமக்குரிய காலவரையறைகளிலே நீங்குமியல்பினையுடைய அளவில்லாத சத்திகளையுடையதாய்,—வாள் உறும் பல விழியினை மறைத்திடும் இருள்போல் - ஒளிபொருந்திய பல கண்களையும் பலவேறு சத்திகளான் மறைக்கும் இருளைப்போல,—கோள் உறும் பசு அறிவினை விரவிக் கூட்டொடும் மறைக்கும் - தன்னைப்பற்றிக்கொண்ட ஆன்மஞானத்தைக் கலந்து அந்த ஞானமுழுவதையும் ஆவாரகஞ்செயயும். எ - ம். (௪0)

எண்ணி றந்தன சிற்றறி வினும்பல வியல்பி
னண்ணி நிற்பன சார்ந்ததன் வண்ணமாய் நவில்வ
வண்ணு சிற்றறி வினுஞ்சுதந் தரத்தன வல்ல
வுண்ண யந்தநா முணர்த்திடி னுணர்வன வுயிரே.

இ - ள். உயிர் - ஆன்மாக்களானவை,—எண் இறந்தன - எண்ணலளவைக்கடந்த அனேகமாயுள்ளன,—சிற்றறிவினும பல இயல்பின் நண்ணி நிற்பன - தூலவறிவுள்ளும் அவ்வறிவு நிகழ்வகையானே பற்பல இலக்கணங்களைப் பொருநதின,—சார்ந்த தன் வண்ணமாய நவில்வ - யாதியாதனைச் சேர்நதனவோ அதனதன்றன்மையவாய்ச் சொல்லப்படுவன,—அண்ணு சிறறறிவினும் சுதந்தரத்தன அல்ல - அங்ஙனம் பொருந்திய தூல அறிவுள்ளும் இயற்கையாயறிவனவுமல்ல,—உள் நயநத நாம் உணாத்திடின உணர்வன - அந்தரியாமியாய்க் கலந்து நிற்கும் நாம் அறிவிக்க அறியுந்தன்மையனவாம். எ - ம். (௧௧)

மாயை சுத்தமே யசுத்தமே யெனவிரு வகையா
மாயு மாயைக ளிரண்டுமெய் யறிவுரு வல்லாற்
றோயு றாதநம் மருளினாற் றொழிலுற்று றுயிர்க்கு
மேய சித்தனு வாதிக ணான்குமாய் விரியும்.

இ - ள். மாயை - மாயாமலமென்பது,—சுத்தமே அசுத்தமே என இருவகையாம் - சுத்தமாயையும் அசுத்தமாயையும் என இரண்டு வகைப்படும்.—ஆய மாயைகள் இரண்டும் மெய அறிவு உரு அல்லால் தோயுறாத நம் அருளினால் தொழிலுற்று - அவ்வகையவாய மாயைகளிரண்டும் சத்தியஞானாநந்த வடிவமேயன்றி வேறொன்றினுஞ் சம்பந்தப்படாத நமது அருட்சங்கற்பத்தினாலே தொழிற்படுத்தப் பட்டு,—ஆர் உயிர்க்கு மேய சித்தனு ஆதிகள் நான்குமாய் விரியும் - அநுபவித்தற்குரிய ஆன்மகோடிகளுக்குப

பொருந்திய சிறப்பினையுடைய தனு கரணம் புவனம் போகமென்னும் நான்குமாக விரிந்து நிற்கும். எ-ம். (கஉ)

கருமமென்பது மாயையே கருவிக ளாகத்
தெருள்வ ழங்குநம் மருளெனப் படுந்திரோ தானப்
பொருவில் சத்தியின் சகாயத்தாற் புல்லறி வுயிர்கண்
முருகு விம்மிய குழலினுய் முனைந்துசெய் தொழிலாம்.

இ - ள். முருகு விம்மிய குழலினாய் - இயற்கை மணங்கமழ்கின்ற ஞானப்பூங்கோதையே,—கருமம் என்பது - கருமமலம் என்பது,—தெருள் வழங்கும் நம் அருள் எனப்படும் திரோதானப் பொருவில் சத்தியின் சகாயத்தால் - தெளிவறிவைக் கொடுக்கும் நமது அருட்சத்தி என்கின்ற திரோதானமாகப் பொருந்திய ஒப்பற்ற சத்தியின் உபகாரத்தினாலே,—மாயையே கருவிகளாக - மாயைதானே தத்துவங்களாகப் பரிணமிக்க அவற்றையே கரணங்களாகக்கொண்டு,—புல் அறிவு உயிர்கள் முனைந்து செய்தொழிலாம் - அச்சிற்றறிவினையுடைய உயிர்கள் முயற்சித்துச் செய்யுந் தொழில்களாம். எ-ம். அருட்சத்திதானே மலநடைப்பட்ட உயிர்கட்கு உபகரிக்குங்கால் திரோதானசத்தி எனப்படும் எனக. (கரு)

புந்தி வாக்குரு வத்தினும் புரியுமன் னதுதான்
வந்து நல்லதுந் தீயது மெனவிரு வகையா
மந்த நல்லதுந் தீயதுஞ் சஞ்சித மாகிப்
பிந்தி யாருயிர்க் குணவுமாய்ப் பிறப்புக்கும் வித்தாம்.

இ - ள். புந்தி வாக்கு உருவத்தினும் புரியும் அன்னது-மனம் வாக்குக் காயங்களினாலே செய்கின்ற அக்கருமமலம்,—வந்து நல்லதும் தீயதும் என இருவகையாம் - காரியமாக வந்து நல்வினையுந் தீவினையுமென இருவகைப்படும்.—அந்த நல்லதும் தீயதும் சஞ்சிதம் ஆகி - அவ்விருவகை வினையும் மாயையிலே கட்டுண்டிருத்தலாகிய சஞ்சித வினையாகி,—பிந்தி ஆருயிர்க்கு உணவுமாய் - பின்னர்ப்பக்குவப்பட்டு ஆன்மாக்கட்கு அனுபவமாகவரும் பிராரத்தவினையுமாகி,—பிறப்புக்கும் வித்து ஆம் - அங்ஙனம் நுகருங்கால் முயலும் முயற்சிதானே மேற்பிறத்தற்கும் ஏதுவாகிய ஆகாமியவினையாம். எ - ம். (கசு)

உருவத் தாற்கரு மந்தவ வீட்டியு முருவங்
கருமத் தாற்றவ வீட்டியுங் காழ்த்தீவா ணவமே
மருவத் தாழ்ந்தகே வலத்திடை மன்னிய வுயிரிற்
றிருவத் தாஞ்சக லத்தியா னெனதெனச் செருக்கும்.

இ - ள். (அன்னது-அந்தக்கருமமலம்,—)காழ்த்த ஆணவமே மருவ தாழ்ந்த கேவலத்திடை மன்னிய உயிரில் - வலிய ஆணவ மலம் ஒன்றுமே தம்மைத் தழீஇக்கொள்ள அதனால் அறுதிகேவலத்திடைப்பட்ட ஆன்மாக்களினிடத்தே,—உருவத்தால் கருமம் தவ ஈட்டியும் - வடிவங்கள் காரணமாக வினைகளைப் பெரிதுஞ் சம்பாதித்தும்,—கருமத்தால் உருவம் தவ ஈட்டியும் - அங்ஙனஞ் சம்பாதித்த வினை காரணமாக வடிவங்களைப் பெரிதுஞ் சம்பாதித்தும்,—திருவ - இங்ஙனம் கொள்ளிவட்டமுங் காற்றாடியும்போல அவ்வான்மக்களைச் சுழற்ற,—தாம் சகலத்து யான் எனது எனச் செருக்கும் - அவ்வான்மாக்கள் தாம் யான் எனதென்று செருக்குறும். எ - ம். மேலைச்செய்யுளில் அன்னது என்றது ஈண்டும் வருவிக்கப்பட்டது. (௧௫)

இதமெ னப்படும் நல்வினை யின்பமே பயக்கு
மிதமெ னப்படாத் தீவினை யின்னலே பயக்கு
மதர்நெ டுங்கணாய் மற்றவை யறிந்துசெய் வினையுங்
கதுவு நெஞ்சறி யாதுசெய் வினையுமாய்க் கலவும்.

இ - ள். மதர் நெடுங்கணாய - காமாட்சியே,—இதம் எனப்படும் நல்வினை இன்பமே பயக்கும்-இதமென்றுரைக்கப்படும் நல்வினை இன்பத்தையே கொடுக்கும்;—இதம் எனப்படாத் தீவினை இன்னலே பயக்கும் - அகிதமெனப்படுந் தீவினை துன்பத்தையே கொடுக்கும்.—அவை - அவ்விருவினைகளும்,—கதுவும் நெஞ்சு அறிந்து செய்வினையும் அறியாது செய்வினையும் ஆயக் கலவும் - பற்றுகின்ற மனம் அறிந்து செய்கின்றவினையும் அறியாவகையானே செய்கின்ற வினையுமாகக் கலந்திருக்கும். எ - ம். (௧௬)

புடைபெ யர்ந்திடும் வினைபுடை பெயர்தரா வினையென்
றடைவி னோதிய வவ்வினை யிவ்விதத் திரண்டாந்
தொடைம லர்க்குழன் மாயையுங் கருமமுந் தொகுத்துத்
தடைசெய் யாணவத் தொடுமல மூன்றெனத் தகுமால்.

இ - ள். மலர்த் தொடைக் குழல்-மலர்மாலையணிந்த கூந்தலையுடையாளே,—புடை பெயர்ந்திடும் வினை புடை பெயர்தரா வினை என்று-மனமுதலியன தொழிற்பட்டுச் செய்யும் வினையும அஃதின்றிச் செய்யும் வினையும் என்று,—அடைவின் ஓதிய அவ்வினை இவ்விதத்து இரண்டு ஆம் - முறையே கூறிவந்த அவ்விருவினைகளும் இத்திறத்தான் இரண்டுவகைப்படும்.—மாயையும் கருமமும் தொகுத்துத் தடைசெய் ஆணவத்தொடும் மலம் மூன்று எனத்தகும் - மாயாமலத்தையும் கருமமலத்தையுஞ் சேர்த்து மறைக்கின்ற

ஆணவமலத்தோடுங் கூட்ட மலங்கள் மூன்று என்று சொல்லுந் தகுதியவாகும். எ - ம். (௧௭)

மாயை காரிய மானமா மாயையு நமது
தூய சீரரு ளெனுந்திரோ தாயியுந் தொகுத்திட்
டாயு நூன்மல மைந்தென வறைவது முண்டால்
தேயு நூலிடை வருத்திய திதலைமென் முலையாய்.

இ - ள். தேயும் நூல் இடை வருத்திய திதலை மென்முலையாய் - தேயந்திடும் நூல்போன்ற இடையை வருத்திய பொற்றேமல் படர்ந்த மிருதுவாகிய சுந்தரகுசாம்பிகையே,—மாயை காரியம் ஆன மாமாயையும் - மாயையினின்றுந் தோன்றிய மாயேயத்தையும்,—நமது தூயசீர் அருள் எனும் திரோதாயியும் தொகுத்து - நம்முடைய சுத்தஞானமேயான அருள் என்கின்ற திரோதசத்தியையும் கூட்டி,—ஆயும் நூல் மலம் ஐந்து என அறைவதும் உண்டு - முமுக்ஷுக்களாலாராயச்சிசெய்யப்படும் உண்மை நூல்கள் மலம் ஐந்து என்று கூறுவதும் உண்டு. எ - ம். (௧௮)

இனைய வைம்மல பந்தமு மிரண்டெனும் பழைய
வினையும் வன்மல வேருமான் மாவினுக் கல்லாற்
றினையு நந்தமக் கில்லைநந் திருவரு ளொழிய
வனைய மாயையுங் கருமமு மாவியு மசையா.

இ - ள். இனைய ஐம்மல பந்தமும் - இத்தன்மையவாய ஆணவம் மாயை கன்மம் மாயேயம் திரோதானம் என்னும் ஐந்து மலபந்தங்களும்,—இரண்டு எனும் பழைய வினையும் - இரண்டாகச்சொல்லப்படும் விருப்பு வெறுப்பென்னும் மூலகன்மமும்,—வல்மல வேரும் - வலிய ஆணவமலத்தின் வாதனையும்,—ஆன்மாவுக்கு அல்லால் தினையும் நந்தமக்கு இல்லை - பந்திக்கப்படுதற்குரிய இயைபுடைய ஆன்மாக்களுக்கேயல்லாமல் ஒரு சிறிதும் நமக்கில்லை;—நம் திரு அருள் ஒழிய அனைய மாயையுங் கருமமும் ஆவியும் அசையா - அங்ஙனமாயினும் நமது அருட்சத்தியையின்றி அத்தன்மையவாய மாயைகன்மங்களும் அவ்வான்மாக்களுங் கூடித் தொழிற்படமாட்டா. எ - ம். (௧௯)

இந்த மாயையுங் கருமமும் பந்தமே யிவற்றைத்
தந்த தாருயிர்க் கென்னெனிற் சாற்றுதுங் கேண்மோ
முந்து மாணவ முரண்கெட மூட்டின மாசு
சிந்த வேறுமா சறுவையிற் செறித்திடு மாபோல்.

இ - ள். இந்த மாயையும் கருமமும் பந்தமே - இந்தமாயை கன்மங்களும் மலமேயாம்.—இவற்றை ஆர் உயிர்க்குத் தந்தது என் எனில் - இவ்விருமலங்களையும் ஆன்மாக்களுக்குக் கொடுத்தது யாது காரணத்தாலென்னில்,—சாற்றுதும் கேண்மோ - சொல்லுவாம் கேட்பாயாக:—அறுவையில் மாசு சிந்த வேறு மாசு செறித்திடுமாபோல் - வஸ்திரத்திலே பற்றிய அழுக்கை ஒழிப்பதற்கு வேறு அழுக்காகிய சாணி உவர்மண் முதலியவற்றையும் சேர்த்துப் பிசைந்து வைப்பதுபோல,—மூந்தும் ஆணவ மூரண்கெட மூட்டினம் - அனாதியே அவ்வுயிர்களைப் பந்தித்த ஆணவமலத்தின் பந்த வலிமை நீங்குமாறு இவற்றையும் பந்தமாகச் சேர்த்தோம். எ - ம். (உ0)

படைத்த லும்புவ னங்களைப் பாதுகாத் தலும்பின்
றுடைத் தலுந்தக நிறுத்தலு மருடுறுத் தலுமென்
றடுத்த வைந்தொழி லயன்முத லைவரு மாய்நா
மெடுத்து நின்றன மாயினு மெமக்கிலை விகாரம்.

இ - ள். புவனங்களைப் படைத்தலும் பாதுகாத்தலும் - கன்மங் கழிந்து மலம் பரிபாகமாமாறு தனுகரண புவனபோகங்களை அவ்வுயிர்களுக்குத் தோற்றுதலும் அவற்றைப்போற்றுதலும்,—பின்றுடைத்தலும் தக நிறுத்தலும் அருள் துறுத்தலும் என்று - பின்பு அவற்றை ஒடுக்குதலாகிய சங்கரித்தலும் கன்ம ஒப்பு வருவித்து மலங்கள் முதிருமபடி அவற்றைத் தக்கவாறு நிறுத்தி வைப்பதாகிய திரோபவித்தலும் அவற்றின் றொடர்பொன்றுமின்றி விடுவித்து அருளினமுத்துதலாகிய அநுக்கிரகித்தலும் என்று,—அடுத்த ஐந்தொழில் - அவ்வுயிர்கட்கு வேண்டப்படுவனவாகிய ஐந்துதொழில்களையும்,—நாம் அயன முதல் ஐவருமாய எடுத்து நின்றனம் - நாம் நமது சத்தியினாலே பிரமன முதலிய ஐந்து மூர்த்தங்களுமாகிச் செயதுநின்றேம;—ஆயினும எமக்கு விகாரம் இலை - அஙஙனமாயினும் எமக்கு அவற்றானெயதுவதொரு விகாரமுமில்லை. எ - ம். (உக)

விரவு மாயையெம் முடைமையற் றாயினும் விடந்தா
னரவை யென்செய்யு மங்கியைச் சூடவன் செய்யும்
பரவு மிந்திர ஞாலம்பண் ணுநரையென் செய்யுங்
குரவ மாலையா யெமக்கது கொடாதுகாண் மயக்கம்.

இ - ள். குரவ மாலையாய் - குராமலர் மாலையையணிந்த குசுமவல்லியே,—விரவும் மாயை எம் உடைமை - அத்தனுவாதி

களை விரவிய மாயை எம்முடைய உடைமையாம்.—அற்றாயினும் - அங்ஙனமாயினும் நாம் அதனைத் தொழிற்படுத்து முறையிற்றோயத லினாலே விகாரமெய்தாமோவெனின்,—விடந்தான அரவை என் செயயும் - பாமபினுடைமையாயவிடம் அப்பாமபை யாதுசெய் யும்,—அங்கிடைச் சூடு எவன் செய்யும் - அக்கினியை அதன் சூடு யாதுசெயயும்,—பரவும் இந்திர ஞாலம் பண்ணுநரை என் செயயும் - பார்ப்போரான் மயங்கிப் புகழப்படும் செகசால வித்தை அதனைச்செயவோரை யாதுசெயயும். அவைபோல,— எமககு அதுமயக்கம கொடாது - சிவமாகிய எமக்கு உயிர்வருக் கத்தை மயக்கும் அம்மாயை மயக்கங்கொடாது. எ - ம். (உஉ)

அல்ல தூஉமிரு ளாணவ மயக்குவ வதனு
னல்ல மாயையுங கருமமு நாடிய வுயிரை
வல்ல வாறெலா மயக்குவ மயக்குமா ணவந்தேய்ந்
தில்லை யேலவை யுயிரையு மயக்குவ திலையே.

இ - ள். அல்லதூஉம - அதுவன்றியும்,—மயக்குவது இருள் ஆணவம - மயக்கததைசசெயவது இருளாகிய ஆணவமலமா கும—அதனால நல்ல மாயையும் கருமமும் நாடிய உயிரை வல்ல வாறு எலாம மயக்குவ - அவ்வாணவமலத்தோடுங கூடியவத னாலே நனமைபொருநதிய மாயாமலமும கனமமலமும தம்மை விரும்பிககூடிய ஆனமாக்களைத் தம்மான முடிந்தமட்டும் மயக்கு மியலபினவாம.—மயக்கும் ஆணவம் தேயநது இலலையேல் - அங ஙனம அவ்வுயிர்களை மயககும் ஆணவமலந தன சத்தி குனறி இலலையென்னும்படி அடங்குமாயின,—அவை உயிரையும மயககு வது இலை - அமமாயை கன்மங்கள் மயஙகுமியையபுடைய அவ வானமாககளைததாமும மயக்கஞ் செயவது இலலை (அஙஙன மாயின் எம்மை விகாரியாக்குவதெங்ஙனமெனறபடி). எ-ம. ()

தேங்கு பேரொளி யாகிய சிவமெனு நாமு
நீங்கு றாதநஞ் சத்தியாய் நிலைபெறு மருளுந்
தூங்கு மாவியுந தொடர்திரோ தாயியும் பிந்த
வோஙகு மாணவத் தெறும்வலி யுரைப்பரி தணங்கே.

இ - ள். அணங்கே - தேவியே,—தேங்கு பேரொளியாகிய சிவம் எனும் நாமும் - நிறைந்த சிறசொரூப சிவமாகிய நாமும்,— நீங்குறாத நம் சததியாய நிலைபெறும் அருளும் - நம்மினின்றும் பிரியாத நமது சத்தியாகி நிலைபெறற அருளும்,—தூங்கும் ஆவி யும் - நம்முள் வியாப்பியமாயடங்கும் ஆன்மாவும்,—தொடர்

திரோதாயியும் - ஆணவமாகிய தன்வழியே தொழிற்படுந்திரோத சத்தியும்,—பிந்த - பிற்பட,—ஓங்கும் ஆணவத்து எறும்வலி உரைப்பு அரிது - தனனிருண்மைமிகும் ஆணவமலத்தின மிககவலிமையை இவ்வளவென்று சொல்லுதல் கூடாது. எ-ம். (உச)

கரிய வாணவந் தேயுமா கலந்தநஞ் சத்தி
யுரிய தாஞ்சிவ புண்ணிய முடன்விரா யூட்டும்
பெரிய வாட்கணாய் பின்மல பாகமாம் பின்னர்
விரியுஞ் சத்திநி பாதம்பின் வினையொப்பு மேவும்.

இ - ள். பெரிய வாட்கணாய் - விசாலாட்சியே,—கரிய ஆணவம் தேயுமா கலந்த நம் சத்தி - பேரிருண்மயமாகிய ஆணவமலம் தன்சத்தி தேய்ந்து குன்றும்படி அதன்வழியே கலந்துநின்ற நமது ஆதிசத்தி,—உரியதாம் சிவபுண்ணியம் உடன் விராய் ஊட்டும் - அவ்வுயிர்களின் வினை பக்குவமாதற்குரித்தாகிய சிவபுண்ணியங்களை ஏனைவினைகளோடுங் கலந்து செய்தனுபவிக்குமாறு செய்யும்,—பின் மலபாகமாம் - அச்சிவபுண்ணிய முதிர்வினாலே பின்னர் மலபரிபாகமாகும்,—பின்னர் சத்திநிபாதம் விரியும் - அதன்பின்பு சிவசத்தி வீழ்ச்சியுண்டாகும்,—பின்வினை ஒப்புமேவும் - அதன் பின்பு இருவினை யொப்புணர்வுண்டாகும். எ-ம். ( -ரு)

ஆய வேலையின் மலமென வறைதிரோ தாயி
மாயி ரும்பொருள் யாவையும் மாறவே மாறித்
தூய வின்னரு ளாகியே நின்றிடுந் தோகாய்
ஏயு மிவ்வரு ளாலல திருதுயிர்க் கிருளே.

இ - ள். தோகாய் - மயிலம்மையே,—ஆய வேலையின - அவ்விருவினையொப் புண்டாயவிடத்து,—மலம் என அறை திரோதாயி - மலம் என்று சொல்லப்படும் திரோதசத்தி,—மாய இரும் பொருள் யாவையும் மாற மாறி - அழியுமியல்பினவாகிய பெரிய பிரபஞ்சப்பொருள்களெல்லாம் மாறிச் சிவமயமாகத் தானும் மாறி,—தூய இன் அருளாகியே நின்றிடும் - பரிசுத்தமாகிய இன்பம் பயக்கும் அருட்சத்தியாகியே நிற்கும்;—ஏயும் இ அருளால அலது உயிர்க்கு இருள் இருது - இங்ஙனம் பொருந்திய ஞானசத்தியால் அல்லாமல் ஆன்மகோடிகளுக்கு ஆணவமல மறைப்பாகிய இருள் நீங்குமாறில்லை. எ - ம். (உசு)

இச்சை ஞானமுங் கிரியையு மானவிவ் வருளே
துச்சி லாகிய கலாதியிச் சையுந்தொலைத் திட்டு

வெச்செ ளுணவம் விழுங்கிடப் பட்டவா ருயிரின்
இச்சை யாதியும் விளக்கியுள் ளிருத்திமே லாகும்.

இ-ள். இச்சை ஞானமும் கிரியையும் ஆன இ அருளே - இச்சாசத்தியும் ஞானசத்தியும் கிரியாசத்தியும் ஆகிய இந்த அருட்சத்தியே,—வெச்சென் ஆணவம் விழுங்கிடப்பட்ட ஆருயிரின் - கொடிய ஆணவமலத்தாற் கவளீகரிக்கப்பட்ட ஆன்மாக்களினது,—துச்சில் ஆகிய கலாதி இச்சையும் தொலைத்து - கஞ்சுகசரீரமாகிய கலை வித்தை அராகம் என்னுந் தத்துவங்களினாலே விளங்கும் ஏகதேச அறிவையும்போக்கி,—இச்சை ஆதியும் விளக்கி உள் இருத்தி மேல் ஆகும் - நேரே தன்னுபகாரத்தானே அவ்வான்மாவினது இச்சா ஞானக்கிரியைகளையும் விளக்கித் தன் வியாபகத்துள் அடக்கிப் போற்றித்தன் விளக்கமேயாய் நிற்கும். எ-ம். (உஎ)

பிறிவு றுதவெம் மருளினா லெம்மையும் பெயரா
மறிவி னீங்கிய தன்னையும் மலைவறத் தெரிந்த
அறிவு பானுவின் விழியென வெம்முளே யடங்கிச்
செறியு மானந்த மொன்றுமே திளைக்குநதே மொழியாய்.

இ - ள். தேமொழியாய் - வேதநாயகியே,—பிறிவு உறுத எம் அருளினால் - பிரித்தறிய வாராத சிவமாகிய எம்முடைய அருட்சத்தியினாலே,—எம்மையும் பெயரா மறிவின் நீங்கிய தனையும் மலைவு அறத தெரிந்த அறிவு - சிவமாகிய எம்மையும் எளிதின் அகறலில்லாத தடையாகப்பொருந்திய ஆணவமலத்தினின்றும் நீங்கிய ஆன்மாவாகிய தன்னையும் ஐயநதிரிவின்றித தெரிந்த மெயயுணர்வு,—பானுவின் விழி என எம்முள் அடங்கி - அருக்கனொளியினடங்கிய கண்ணொளியைப்போல எமது ஞானமேயாய அடங்கி,—செறியும் ஆனந்தம ஒன்றுமே திளைக்கும் - பிறிதொன்றையும் உணராது நிறைந்த எமதானந்த மொன்றைமாத்திரமே அநுபவிக்கும். எ-ம். (உஅ)

மருளி னான்முத லென்றலு மன்னுயி ரருள்கண்
டருளி னான்முத லென்றலு மருண்முத லென்றுந்
தெருளி லாததி லழுந்தலுந் தீர்ந்தெம்மோ டறிவா
யிருள்செய் கேவலம் போற்கலந் திருப்பதே முத்தி.

இ - ள். மன் உயிர் - நிலைபெற்ற ஆன்மாக்கள்,—மருளின் நான் முதல் என்றலும் - பசுவுணர்வான் மயங்கித் தன்னைத் தெரிக்கமாட்டாமையினாலே நான் முதலென்று நிற்றலும்,—அருளின் அருள் கண்டு நான் முதல் என்றலும் - அருளினாலே அவ்வருளைத்

தெரிசித்து நானே சிவசமமானேனென்று முனைத்தலும்,—அருள் முதல் என்றும் தெருளிலாது அதில் அழுந்தலும் - அருளாகிய முதல் எஞ்ஞான்றும் முனைப்புறுமாறு தெரியாவண்ணம் அவ்வருளிலே அடங்குதலுமாகிய முப்பாழும்,—தீர்ந்து - நீங்கி,—அறிவாய் - சிவமாகிய நாமேயாய்,—இருள்செய் கேவலம்போல் - அநாதி கேவலத்தே ஆணவத்தோடும் பிரிப்பின்றி யிருந்தவாறு போல,—எம்மோடு கலந்திருப்பதே முத்தி - எம்முடனே பிரிப்பின்றிக் கலந்திருக்கு மதுவே முத்தியாகும். எ-ம். (உகூ)

பேத மாகிய பாவனை பேணுவ தெல்லா
மேத மாகிய பந்தமே யெனதியா னெனுமால்
போத வாருயி ரபேதபா வனைபுரி வஃதே
மாத ராயுயர் முத்தியென் றுரைத்திடு மறையும்.

இ - ள். மாதராய் - சத்தியே,—பேதம் ஆகிய பாவனை பேணுவது எல்லாம் - வேறாகிய துவித பாவனையைப் போற்றுவதெல்லாம்,—ஏதமாகிய பந்தமே - பெருங்குற்றமாகிய மலப்புணர்ப்பினுளுண்டாயதேயாம்,—யான் எனது எனும் - அதனுனேயே நான்பிரமமெனவும் என்னுடையது ஐந்தொழிலெனவும் ஆன்மாச் செருக்குறும்;—ஆருயிர் மால் போத அபேத பாவனை புரிவு அஃதே - ஆன்மாக்கள் அம்மயக்கமாகிய ஞாதுரு ஞானஞேயப் பகுப்புணர்வு நீங்க அபேதபாவனையாகிய சிவோகம்பாவனையினுலே சிவமேயாயழுந்தி யின்புறுமதனையே,—மறையும் உயர் முத்தி என்று உரைத்திடும் - அபக்குவர்க்கு மெய்ப்பொருள் தோற்றாது மறைக்குமியல்பினவாகிய வேதங்களும் உயர்வாகிய முத்தி என்று யாம் ஈண்டுரைத்தவாறே உரைக்கும். எ - ம். (௩௦)

பரிதி முன்னிரு ளெனமலம் பரையிடை மாயுங்
கருவி முன்பகல் விளக்கொடு கடுக்குமூ மொன்றே
மருவு மன்னதுங் கருணையால் வாங்குவம் யாமே
பொருவில் சஞ்சித முன்னரே யழிந்தது பூவாய்.

இ - ள். பூவாய் - சிற்சத்தியே,—பரிதி முன் இருள் என மலம் பரையிடைமாயும் - இரவி முற்பட்ட இருளைப்போல ஆணவ மலம் சிவஞானத்தில் அடங்கி ஒழியும்,—கருவி முன்பகல் விளக்கொடு கடுக்கும் - கரணங்கள் முற்பகலிலே எரியுந்தீபத்தோடொத்து அந்த ஞானமே மயமாய்நிற்கும்,—பொருவில் சஞ்சிதம் முன்னரே அழிந்தது - தனக்குத்தானே சமானமாகிய சஞ்சிதவினை முன்பு யாம் தீக்கித்தபொழுதே அழிந்துபட்டது,—ஊழ் ஒன்றே மருவும் - உடம்புள்ளளவும் அதினளவாய் முகர்ந்த பிரா

ரத்தவினை ஒன்றுமாத்திரமே பொருந்தியிருக்கும்,—அன்னதும் கருணையால் யாமே வாங்குவம் - அப்பிராரத்த வினையின்காரியத்தையும் பெருங்கருணையினாலே சிவமாகிய நாமே என்றுகொள்வோம். எ - ம். (௩௧)

ஏன்ற வூழுட லிருத்தலி னேறும்வல் வினையுந்
தோன்று மேற்றிரு வெழுத்தினைச் சூழ்ந்திடி னழியுஞ்
சான்ற வீட்டினைச் சார்ந்தவர் தமக்குமா லயமுன்
மூன்று மார்வமோ டிறைஞ்சுதன் முறைமையா மணங்கே.

இ - ள். அணங்கே - அகிலாண்டநாயகியே,—உடல் ஏன்ற ஊழ் இருத்தலின் வல்வினையும் ஏறும் - உடம்பினளவாய் முகந்த பிராரத்தவினை இருத்தலினாலே அதனை அநுபவிக்குமிடத்து ஒரோவழி ஆகாமியந் தோன்றுதலுமுண்டு,—தோன்றுமேல் திருஎழுத்தினைச் சூழ்ந்திடின் அழியும் - அங்ஙனந் தோன்றுமாயின் திருவைந்தெழுத்தை விதிப்படி அறிவினாற் கணிப்பின் அவ்வாகாமியவினையும் அழிந்துவிடும்,—சான்ற வீட்டினைச் சார்ந்தவர் தமக்கும் - உயர்வாகிய முத்திநிலையை அடைந்தவர்களுக்கும்,—ஆலயம் முன் மூன்றும் ஆர்வமோடு இறைஞ்சுதல் முறைமையாம் - சிவாலயம் சிவகுரு சிவனடியவர் என்னும் முதன்மையாய மூன்று திருவடிவங்களையும் அன்போடு அவற்றிடை நின்று அருள் செய்யும் முறைமையையுணர்ந்து வழிபடுதல் விதிமுகத்ததேயாம். எ - ம். (௩௨)

தொடுத்த நின்பெருங் கடாவினுக் கவிர்பொலந் தொடியாய்
விடுத்த னம்விடை யறிகென விமலனா ரருள
மடுத்த வன்பொடு கேட்டமால் வரைமக ளோடுந்
தடுத்த வைம்பொறி நந்தியுஞ் சம்புமா முனியும்.

இ - ள். அவிர் பொலம் தொடியாய் - அகிலாண்ட நாயகியே,—தொடுத்த நின்பெருங் கடாவினுக்கு - பக்குவான்மாக்கள் முறையாற்கேட்டுய்யுமாறு வகையாற் றொடுத்துக் கேட்ட உன்னுடைய அரிய பெரிய மெய்ப்பொருள் வினாக்களுக்கெல்லாம்,—விடை விடுத்தனம் அறிகென விமலனார் அருள - விரியானே இறை இறுத்தாம் தேர்வாயாகவென்று தென்முகச்சிவனார் அநுக்கிரகஞ்செய்ய,—மடுத்த அன்பொடு கேட்ட மால்வரை மகளோடும் - நிறைத்த அன்புடனே முறையாகக்கேட்ட பார்ப்பதிதேவியாரோடும்,—ஐம்பொறி தடுத்த நந்தியும் சம்புமாமுனியும் - புலன்களைந்தையும் வென்ற வைதிக சைவத்திருநெறித் தவத்தோராகிய திருநந்திதேவரும் சம்புமகாமுனிவரும். எ - ம். (௩௩)

அருளெ லாமுளத் தழுத்தினர் தெளிந்தனர் நிட்டை
மருளெ லாந்தப மருவினர் மன்னுமுப் பாழு
மொருவி மேற்பெரும் பாழெனு முலப்பிலா னந்தப்
பொருளொ டேகமாய்ப் பொருந்திடு முத்தரா யிருந்தார்.

இ - ள். அருள் எலாம் உளத்து அழுத்தினர் - அங்ஙனங் கேட்டவாறே அவ்வருளுபதேசங்களையெல்லாம் உளத்துக்கொண்டு சிந்தித்து,—மருள் எலாம் தப தெளிந்தனர் நிட்டை மருவினர் - ஐயவிபரீதங்களின்றித் தெளிவடைந்து அவ்வாறே நிட்டையை யுமடைந்து,—மன்னும் முப்பாழும் ஒருவி - பொருந்தும் மாயைப்பாழ் சீவப்பாழ அருட்பாழ் என்னும் முப்பாழையும் நீங்கி,—மேல் - அதன்மேல்,—பெரும்பாழ் எனும் உலப்பில் ஆனந்தப் பொருளொடு ஏகமாயப் பொருந்திடும் முத்தராயிருந்தார் - பெரும்பாழ் எனகின்ற அளவிலாப் பெருக்கத்ததாகிய நிரதிசயானந்த சொரூப சிவமென்னும் பொருளோடு அநந்நியமாயக் கூடியநுபவிக்கின்ற சுத்தாத்துவித முத்தராயிருந்தார். எ - ம். (நச)

சீவன் முத்தியே திகழ்பர முத்தியே யென்ன
மேவு முத்தியோ ரிரண்டினு மேவின ராகி
மூவ ரும்பணி மூபன்றிருந தனரயன் மூயன்ற
தேவ ருநதொழுந திருவிழாத திறமினித் தெரிப்பாம.

ஞானோபதேசப்படல முற்றிற்று.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# சிவஞானத்தெளிவுபதேசத்திரயம்.

## இரண்டாவது

## திருப்பேரூர்ப்புராணத்துக்

# காலவர்வழிபடுபடலம்.

௪௬ - வது செய்யுண்முதல் ௬௬ - வது செய்யுள்வரை.

**விநாயகவணக்கம்.**

கங்கையும் பணிவெண் டிங்களும் விரைத்த கடுக்கையங் தொங்கலு மரவுந், தங்குபொற் சடையு முக்கணுந் தாதை தாணுவென் றுணர்த்தமென் மலர்க்கை, அங்குச பாச மணிந்துவெற் புயிர்த்த வாரணங் கன்னையென் றுணர்த்தி, வெங்கலி முழுதுந் துமித்தருள் பட்டி விநாயகன் சேவடி பணிவாம்.

---

திருப்பேரூர் என்னும் மேலைச்சிதம்பரத்திலே விண்டுவேமுதலாம் தேவர்தம்பதங்களையும் வெறும் பொய்யெனவே வெறுத்து, சச்சிதானந்த சொரூப சதாசிவ வழிபாடாற்றிச் சிவயோகத்தமர்ந்திருந்த காலவமுனிவரிடத்தே, கருணாநிதியாகிய சிவபெருமான் இடபாரூடராய் எழுந்தருளுதலும், முனிவர் அவர் சந்நிதானத்திலே வணங்கி வீழ்ந்தனர். சிவபெருமான் தமது வலப்பாகத்து நின்ற அம்முனிவர் [illegible]ட்டனாகிய பிரமாவையும் இடப்பாகத்து நின்ற அவர் பாட்டன்முறையாகிய விண்டுவையும் திருநோக்கஞ் செய்தருளினர். அவர்கள் சென்று காலவமுனிவரை இருமருங்கினும் கைகொடுத்துத் தாங்கி, பரமேஸ்வரன் அருளிப்பாடு என்று அழைத்துக் கொண்டு வந்தனர். அம்முனிவர் சிவபெருமானைத் துதித்து "சுவாமீ! தேவரீர்பால் தமியேனுக்குப் பத்திவேண்டும்; விரும்பத்தக்க உண்மைமுத்தி இஃதெனை அடியேற்கு உபதேசித்து

அம்முத்தியையுந் தந்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தனர். அம்முனிவருக்குச் செய்த உபதேசமே ஈண்டுக் கூறப்படுகின்றது.

---

## நூல்.

என்றனன் முனிவர் கோமா னிமயவில் வாங்கி நொச்சி
வென்றவன் கருணை பொங்க வேட்டநல் வரங்க ளீந்து
துன்றிய குழுவை நோக்கத் தொழுதவை யகலப் போக
நின்றவன் முடிகை வைத்து நிலையினை யுணர்த்தப் புக்கான்.

இதன்பொருள். முனிவர்கோமான் என்றனன் - முனிசிரேட்டராகிய காலவமுனிவர் இவ்வாறு பிரார்த்தித்தனர்,—இமயவில் வாங்கி நொச்சி வென்றவன் கருணை பொங்க வேட்ட நல் வரங்கள் ஈந்து - மேருவை வில்லாகவளைத்து மும்மதில்களையுந் திருப்புன்னகையாற்றகித்து வென்ற பரமசிவன் அருண்மிகுதியாலே காசிபகுமாரராகிய அக்காலவமுனிவர் விரும்பிய நல்ல வரங்களையெல்லாங்கொடுத்து,—துன்றிய குழுவை நோக்க - பக்கத்திலே நெருங்கி நிற்கின்ற தமது கணங்களின்மேல் திருக்கடைக்கண்சாத்தியருள,—அவை தொழுது அகலப்போக - அத்திருக்குறிப்பறிந்த அக்கணங்கள் வணங்கிக் கொண்டு அவ்விடத்தினின்றும் அகன்று செல்ல,—நின்றவன முடி கை வைத்து நிலையினை உணர்த்தப் புக்கான் - தெளிவுபதேசம் பெறும் பக்குவியாகத் தனியே நின்ற காலவமுனிவருடைய சிரசிலே ஸ்ரீ ஹஸ்தஞ்சேர்த்திச் செய்யக்கடவதாகிய தீக்கைக்குறையை முடித்து உண்மை நிலையாகிய முத்தியைத் தெளிவுபொருந்த உபதேசிக்குமாறு தொடங்கினார். என்பதாம். (க)

அகர மோடுறு மகரத்தின் வலிகெட வடுக்கும்
பகர மேவலும் பதிதன்ம முதலிய முறையான்
நிகழு மாவயி னீடருண் மலமற வுயிர்தான்
றிகழு நானென வதனையே சிவமென்பர் தெளியார்.

இ - ள். அகரமோடு உறும் மகரத்தின் வலிகெட - அகர உயிருடன் பொருந்திய மகரமெய்யினாலுணர்த்தப்படும் ஆணவமலத்தின் சத்திகுன்ற,—அடுக்கும் பகரம் மேவலும் - வரும் பக்குவம் பொருந்துதலும்,—முறையால் பதிதன்ம முதலிய நிகழும் - முறையே சிவபுண்ணியமும் அதனால் இருவினையொப்பும் நிகழும்,—ஆவயின் நீடு அருள் மலம் அற - அதனால் அவ்விடத்

துணையாகிய அருளினாலே பிரபஞ்சப்பற்று நீங்க,—உயிர்தான் நான எனத் திகழும் - உடனே அவ்வுயிர்தான் நானே பிரம மெனத்திரிவுறக்கண்டு நிற்கும்;—தெளியார் அதனையே சிவம் என் பர் - ஆன்ம லக்கணஞ் சிறிதுமுணராத மாயாவாதிகள் முதலி யோர் அப்பசுவுணர்வின் 'நிலையையே நான் சிவம் என்று தமது முத்திநிலையாகக் கூறுநிற்பர். எ - ம். (௨)

ஏக மேயெனு மிருக்கெனி னிருக்கினுட் பொருள்கே
ளேக மேபதி பலவல வெனுமது காண்டி
யேக மேயெனச் சுட்டுவா னொருவனிங் குளனவ்
வேகன் போலல னிருண்மலத் தோடுள னிவனே.

இ - ள். இருக்கு ஏகமே எனும் எனின் - அங்ஙனம் வேத சுருதி ஆன்மா ஒன்றே என்றுகூறும் என்பையேல்,—இருக்கின் உட்பொருள்கேள் - அவ்வேதவசன தாற்பரியத்தை யாம் உரைக் குதும் கேட்பாயாக,—பதி ஏகமே - பரமான்மா ஒன்றே,—அது பல அல எனும் - அப்பரமான்மா பலவல்லவென்றுரைக்கும் அத்துணையேயாம்,—காண்டி - ஈண்டு யாம் உரைக்குமுறைபற்றி நுண்ணுணர்வான் இதுவே பொருள் என்று ஆராய்ந்துணரக்கட வாய்,—ஏகமே எனச் சுட்டுவான ஒருவன் இங்கு உளன் - பர மான்மா ஒன்றே என்று சுருதி வாயிலாகச் சுட்டிச் சொல்பவன் ஒருவன் அப்பரமான்மாவின் வேறாக இவ்விடத்து உளன்,— இவன் அ ஏகன்போல் அலன் - இவன அச்சுருதியானுணர்வுதலைப் படுதலானும் அவ்வுணர்வும் சுட்டியுணரப்படுதலானும் இயற்கை யுணர்வினனாகிய அப்பரமான்மாவைப் போல்பவனல்லன்,— இருள் மலத்தோடு உளன - இருளில் விளக்கை விரும்புங்கண் போலச் சுருதியாதி வியஞ்சகங்களை விரும்பலால் அநாதி ஆணவ மலத்தோடுஞ் சம்பந்தப்பட்ட பசுவாய் அநாதியே உளன. எ - ம்.

மன்ற வேதமத் துவிதமென் றுரைத்திடு மரபா
லொன்ற லாற்பொரு ளிலையெனி னுணர்த்துதுந் தெளிநி
என்றும் வேறன்மை யுணர்த்துமிக் கிளவியே யிதனு
னின்ற வாருயிர் பலவுந்தா னாய்நிற்கு நிமலன்.

இ - ள். வேதம் மன்ற அத்துவிதம் என்றுரைத்திடும் மர பால் - அச்சுருதி ஒன்றென்றதேயன்றி அதனோடு அடைவுபொரு ந்த அப்பொருளை விளக்குமோர் மகாவாக்கியமாக அத்துவிதம் என்றும் மொழிகின்ற முறைமையினாலே,—ஒன்று அலால் பொ ருள் இலை எனின் - பிராந்தியான் வந்த பேதபாவம் நீங்கிய

ஒன்றேயல்லது வேறுபொருளே இல்லை என்பாயாகுல்;—உணர்த்துதும் தெளிதி - பிராந்தியுணர்வின்றலைப்பட்ட நின் பிராந்தி மூலம் முற்றும் நீங்குமாறும் அவ்வத்துவிதம் என்னும் மகாவாக்கியத்தின் மெய்ப்பொருள் இஃதே எனத் தெற்றென விளங்குமாறும் யாம் அறிவிப்போம் நீ தெளிந்துய்வாயாக,—இக்கிளவி என்றும் வேறன்மையே உணர்த்தும் - இவ்வத்துவிதம் என்னும் மகாவாக்கியம் சுருதிசிவாகமங்களாகிய எவ்விடத்தும் எந்நாளும் பூர்வாபர விரோதமின்றி ஆன்மா பரமான்மா விரண்டும் பொருண்மையால் வேறேயாயினும் கலப்பினுல் வேறன்மையேயாய சம்பந்தத்தையே உணர்த்தாநிற்கும்;—இதனுன் நிமலன் நின்ற ஆருயிர் பலவுந் தானாய் நிற்கும் - இவ்வத்துவித சம்பந்தமுண்மையானே ஒன்றாய பரமான்மா வினைக் கோட்பட்டுத் தன்னின்வேறாய் ஐந்தொழிற்படுமாறு நின்ற ஆன்மாக்கள் பலவுமாயும் தானாயும் பலவுந்தானாயும் நின்று அது செயயும். எ - ம். பலவுந்தானாய் நிற்கும் என்பதை இரட்டுற மொழிந்துகொள்க. இவ்விரு செய்யுளானும் "ஏகமே வாத்து விதீயம் பிரமம்" என்னுஞ்சுருதிப்பொருள் விளக்கியவாறு. இம்மூவகையாயும் இறைவன் நிற்றலை "ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய—மாறாமறை நான்காய்வரு பூதம்மவை யைந்தாய்—ஆறார்சுவை யேழோசையொ டெட்டுத்திசை தானாய்—வேறாயுடனானானிடம் வீழிம்மிழலையே" என்னுந் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவாரத்தானுமறிக. (சு)

சொன்ன தத்துவ மசியெனுஞ் சுருதியின் மொழியு
மன்னு காரணப் பதியுநா னெனவரும் பசுவு
மென்ன வேபொரு ளிருமைகண் டியைந்துவே றன்மை
தன்னை நாட்டிய தல்லது தனியென்ற தின்றே.

இ - ள். சொன்ன தத்துவமசி எனுஞ் சுருதியின்மொழியும் - இன்னும் மகா வாக்கியமாகச் சொல்லிய தத்துவமசி என்னும் வேத வசனமும்,—மன்னுகாரணப் பதியும் - "தத்" என்னும் பதப்பொருளால் அவ்வுயிர்கள் பலவுந்தானாய் நிலைபெற்ற நிமித்த காரணமாகிய பதிப்பொருளும்,—நான் எனவரும் பசுவும் என்ன - "துவம்" என்னும் பதப்பொருளால் பிரபஞ்சப்பற்று நீங்கிய விடத்து நானே முதல் என முனைத்துவரும் பசுப்பொருளும் என்று,—பொருள் இருமை கண்டு - பொருண்மையால் இரண்டாதலையுணர்த்தி,—இயைந்து வேறன்மை தன்னைநாட்டியது அல்லது - "அசி" என்னும் பதப்பொருளால் அம்முனைப்பினீங்குமுயிரும் சிவமுமாகிய இருபொருளும் கலப்பினுல் வேறன்மை என்

னும் சுத்தாத்துவித சைவசித்தாந்தப்பொருளையே முன்னொடு பின் முரணாது நிலைபெறக் கூறியதே யன்றி,—தனி என்றது இன்று - பிராந்தி வசப்பட்ட ஏகான்ம வாதிகள் முதலியோர் முன்னொடு பின் முரணிக்கூறும் ஒன்றென்னுங் கேவலப் பொருள்படக் கூறிற் றில்லை. எ - ம். (௫)

ஈண்டு நாமுரைத் திட்டதே பொருள்பொரு ளேகம்
வேண்டி னுருரைத் திட்டது வெற்றபொய் யாதல்
காண்டி ஞாதிரு ஞானஞே யமுங்கரைந் தன்றால்
நீண்ட வேதமற் றென்றென நிகழ்த்துமோ வதுதான்.

இ - ள். ஈண்டு நாம் உரைத்திட்டதே பொருள் - இவ்விடத்து யாம் கூறிய பொருளே பலகலையாகமவேதம் யாவையினும் நிகமனமாகிய கருத்தாம்,—பொருள் ஏகம் வேண்டினுர் உரைத்திட்டது வெறற பொய்யாதல் காண்டி - ஒன்றெனக் கேவலப் பொருள்கொண்ட மாயாவாதிகள் முதலியோர் அச்சுருதிகட்குக் கூறிய பொருள் வெறும்பொயயாமாதலை நன்குணர்ந்து கொள்ளக்கடவாய்.—நீண்ட வேதம் ஞாதிரு ஞான ஞேயமும் கரைந் தன்று - இன்னும், பல சாகைகளாக விரிந்த வேதமும் காண்பான் காட்சி காட்சிப்பொருள் என்னுந் திரிபுடியையுங் கூறிற்று,— அதுதான் மற்று ஒன்று என நிகழ்த்துமோ - அத்தகைய வேதந் தான் முன்னர்க்கூறிய தன்வசனத்தை மாற்றி அதனின் வேறாய முரணுமாறு ஒன்றே ஆன்மா என்று அறிவிலார்போன்று கூறுமோ கூருது. எ - ம். நிகமனம் முடிந்தது முடித்தல். (௬)

சத்தி யாலுயிர்க் கிருளறத் தனுகர ணாதி
யுய்த்து டஙகுநின் றசைப்பதை யுணர்கிலார் பதியே
மெத்து மாயையிற் பிணிப்புண்டு வீற்றுவீற் றாகி
முத்தி யெய்துமென் பார்மொழி விரோதநீ தெரிதி.

இ - ள். பதி - உயிர்களுக்குபகரித்தலினுலே கர்த்தாவாகிய பரசிவம்,—சத்தியால் உயிர்க்கு இருள் அறத் தனு கரணம் ஆதி உய்த்து - தனது சத்தியைக்கொண்டு உயிர்களுக்கு ஆணவமல மாகிய இருள்நீங்கும்படி தனுகரண புவனபோகங்களின் காரண மாகிய மாயையென்னும் விளக்கைக் கொடுத்து,—உடங்கு நின்று அசைப்பதை உணர்கிலார் - அவ்வுயிர்கள் கன்மபோகங்களைப் புசிக்குமாறு உடனுமாய் நின்று தொழிற்படுத்துமதை யுணரும் மதுகையற்றவர்களாகிய பரிணமவாதிகள் முதலியோர்,—பதியே மெத்துமாயையில் பிணிப்புண்டு-அப்பதிப்பொருளொன்றுதானே மிக்க மாயாமலத்தினுலே பந்திக்கப்பட்டு,—வீற்று வீற்றாகி முத்தி

எய்தும் என்பர் - தனித்தனியே பலவேறுயிர்களாகிப் பின்பு அப்பந்தத்தினின்றும் நீங்குமதுவே முத்தி என்று சொல்லுவார்கள்.—மொழி விரோதம் நீ தெரிதி - அவர்தம்வாயமொழியே அவர்க்கு முன்னொடு பின்முரணி அம்முத்தியும் அவ்வாறுதலை நீயே தெரிந்து கொள்ளக்கடவாய். எ - ம். (எ)

பொக்க மிக்கறப் புனலொடு புனல்கலந் தாங்குத்
தொக்கு நின்றிடு மறிவுட் னறிவெனச் சொல்லின்
ஒக்கு நற்பதி யுயிரென லாமொத்த தென்னிற்
றக்க தன்றுபா சத்துற லாதலிற் றவறே.

இ - ள். புனலொடு புனல் கலந்தாங்கு - நீருடனே நீர் கலந்தாற்போல,—பொக்கம் மிக்கு அற அறிவுடன் அறிவு தொகுநின்றிடும் எனச் சொலின் - பொயயாகிய பிரபஞ்சப்பற்று மிகுதியும் நீங்க, நீங்கிய ஆன்மா சுத்த மெய்ஞ்ஞான மயமாகிய சிவத்தோடும் ஒரினமாயொன்றுயக்கூடி நிறகுமென்று ஐக்கியவாதிகள் முதலியோர் சொல்லின்,—உயிர் நல்பதி ஒக்கும் எனலாம் - ஆன்மாவும் நல்லபதியும் ஒத்த தன்மையன வென்றுரைக்கலாம்,—ஒத்தது என்னில் - அங்ஙனமே ஒத்ததன்மையன வென்றே சொல்லின்,—தக்கது அன்று - ஆராயுங்கால் அவ்வுரை தகுதியுடைத்தன்று,—பாசத்து உறல் ஆகலில தவறு - அவ்வான்மா பந்தத்துட்பட்டுக் கருவிகளாகிய வியஞ்சகததானறிந்தும் அவ்வறிவு நிகழாமுன் அசத்தாயிருந்தும் அருளினுபகாரத்தால் ஆக்கருவிகளினீங்கி அருள்வியஞ்சகததானறிதலும் சத்தாய் நிற்றலுமாகிய தூலசித்தாமாதலினாலே சுத்தமெயஞ்ஞானமயமாகிய அதிசூக்கும சித்தாஞ் சிவத்தோடு ஒத்தல் எவ்வாற்றுன் ஆம்! ஆகலின அவ்வுரையும் பேறும் வெறும்போலியே யாமென்றொழிக. எ - ம. (அ)

ஆட்சி நற்கர ணங்கெட வாகுமுற் றுன்பங்
காட்சி யென்னக்கா ணுதமைமுத் தியேன் மரண
மாட்சி நித்திரை மரத்துயி ராதியு முத்தி
மூட்சி பெற்றன வாமத னுன்மொழி பிழையே.

இ - ள் ஆட்சி நல்கரணம் கெட - சகதுக்கானுபவததினையாகிய நல்லகரணங்கள் கெட்டொழிய,—ஆகும் முன் துனபம் காட்சி என்னக் காணுதமை முத்தியேல் - அதனுலுண்டாகும் பழைய சகதுக்கங்களை ஆன்மா உணர்வின் வேதனையாகக் காணுது பாடாணம்போற் கிடத்தலே முத்தியென்னில்,—மரண மாட்சி நிததிரை மரத்து உயிர் ஆதியும் முத்தி மூட்சி பெற்றனவாம் - மூர்ச்சை

யடைந்த உயிர் நித்திரையடைந்த உயிர் தாவரங்களின் உயிர் முதலி யனவும் முத்திப்பேறதை அடைந்தனவாகும்,—அதனான் மொழி பிழையே—ஆதலினாலே அவ்வுரையும் பேறும் பெரியதோரிழுக்கேயாம். எ - ம். (கூ)

குளிகை தாக்கலுஞ் செம்புறு கோதுமுற் றழிய
வொளிபெற் றாங்குறு மலமுயிர்க் கருளினா லொழியத்
தெளிவு சேர்வது முத்தியேற் செறிமலங் களிம்பின்
விளிவு றாதுநித் தியமத னாலிது வீணே.

இ - ள். குளிகை தாக்கலும் செம்பு உறு கோது முற்றழிய ஒளி பெற்றாங்கு - இரத குளிகையின் பரிசத்தினாலே செம்பிற் பொருந்திய களிம்பு முழுவதும் நீங்க ஒளிபெற்றுப் பொன்னானாற்போல,—உயிர்க்கு உறும் மலம் அருளினால் ஒழியத் தெளிவு சேர்வது முத்தியேல் - ஆன்மாவுக்குப் பொருந்திய ஆணவமலம சிவகிருபையினாலே நீங்க, சுத்த நித்தமுத்தராகத் தெளிவடைந்து பெறுவானும் பேறுமாய்ப் பேதமுற்றிருப்பதே முத்தியென்னப பேதவாத சைவர் முதலியோர் கூறின்,—களிம்பின் செறிமலம் விளிவுறாது நித்தியம - செம்பிற்களிம்பு நீங்குவதுபோல ஆன்மா விற கலந்த ஆணவமலம் நீங்காது, நித்தியமாகையால.—அதனால் இது வீணே - ஆகலின் இவ்வுரையும் பேறும் வெற்றுரையே யாம். எ - ம். (௪௦)

அருளெ டுத்தலு மெய்வகை யுணர்வுமைந் தொழிலும்
பெரிதெ டுத்திடு முயிரெனல் பிழைமறை பேசா
திருளெ டுத்தசிற் றறிவினுக் கைந்தொழி லெடாதாற்
பொருளெ டுத்ததண் புனரிநீர் முழுவது நாழி.

இ - ள். உயிர் அருள் எடுத்தலும் மெய்வகை உணர்வும் ஐந் தொழிலும் பெரிது எடுத்திடும் எனல் பிழை - ஆன்மா அருளைப் பெற்றதும் சர்வஞ்ஞத்துவத்தையும் பஞ்சகிருத்தியத்தையும் பெரி தும் எடுத்துக்கொள்ளும் என்று கூறும் சிவசமவாதியர் கொள் கையும் பெரியதோரிழுக்கேயாம்.—பொருள் அடுத்த தண்புனரி நீர் முழுவதும் நாழி எடாது - பலபொருள் நிறைந்த குளிர்ந்த சமுத்திரநீர் முழுவதையும் நாழி முகந்துவிடாது அதுபோல,— இருள் அடுத்த சிற்றறிவினுக்கு ஐந்தொழில் மறைபேசாது - அநாதி ஆணவமலத்திற் கட்டுண்டிருந்த சிற்றறிவினையுடைய ஆன் மாவுக்குச் சர்வஞ்ஞத்துவமும் ஐந்தொழிலும் உண்டென்று அநா தியே அமலனாய அறிவனால் கூறாது. எ - ம். (௪௧)

மாட்டத் தங்கிய காட்டத்தி னங்கியின் மலத்தை
யோட்டித் தங்கலுஞ் சிவமுயி ரேகமா மென்னிற்
காட்டத் தின்மையங் கியினுறுங் கரையிரு பொருளு
நீட்டித் தோர்ந்துபா ரேகமாய் நிற்குமோ நில்லா.

இ - ள். மாட்டத் தங்கிய காட்டத்தின் அங்கியின்-இடக்கிடந்த விறகிலே அதனையழித்து நின்ற அவ்விறகிற்றீயைப்போல,—சிவம் மலத்தை ஓட்டித் தங்கலும் உயிர் ஏகமாம் என்னில் - சிவபெருமான் உயிரின் பந்தமாகிய ஆணவமலத்தை நீக்கி அவ்வுயிரைத் தன்மயமாக்கிச் சங்கிரமித்தமாத்திரத்தில் அச்சிவமும் உயிரும் ஒன்றேயாமென்று சிவசங்கிராந்தவாதிய ருரைப்பாரென்னில்,—நீட்டித்து ஓர்ந்து பார் காட்டத்து இன்மை அங்கியின் உறும் - மிகவும் நுணுகி ஆராய்ந்து நீயே தெளிந்துபார்; அவ்விறகினது அபாவம் கொழுந்துவிட்டெரியும் அக்கினியினிடத்துக் காணப்படும்.—கரை இருபொருளும் ஏகமாய் நிற்குமோ நில்லா - அநாதியே அமலனுய அறிவனூல்களாலே வெவ்வேறு இலக்கணங்களுடையனவாகக் கூறப்பட்ட பதி பசு என்னும் இருபொருள்களும் ஒரே இலக்கியமாய் நிற்குமோ நில்லா. ஆகலின், அவ்வுரையும் பேறும் அங்ஙனமே நிலையற்றனவாமென ஒழிக. எ-ம். (௧௨)

வேனில் வெப்பிடை யுழன்றவர் மென்றரு நிழல்பெற்
றுன வெப்பினைத் துடைத்தல்போ லானடி நிழல்பெற்
றீன வல்வினை யிரித்துமென் பதும்பிழை மரம்போன்
ஞான வித்தக னவைநல நெரிதரா தவனே.

இ - ள். வேனில் வெப்பிடை உழன்றவர் மென் தரு நிழல் பெற்று ஆன வெப்பினைத் துடைத்தல்போல் - வேனிற்காலத்து நடுப்பகலிலே வெய்யில் வெப்பத்தில் வழிகடந்து வருந்தியவர்கள் மெல்லிய மரநிழலைப்பெற்று அவ்வெய்யிலினுலுண்டாகிய அடிச்சூட்டினை நீக்கி மகிழ்வதுபோல,—அரன் அடிநிழல் பெற்று ஈன. வல்வினை இரித்தும் என்பதும் பிழை - அவிகாரியாகிய பரமேசுவரனுடைய திருவடிநிழலை யடைந்து பிறவியாகிய இழிவைத்தரும் வலிய இருவினையையும் நீக்கி இன்புறுவோம் என்று கூறும் ஈசுரவவிகாரவாதிகளுரையும் இழுக்காம்;—மரம்போல் ஞான வித்தகன் நவை நலம் தெரிதராதவனே - மரத்தைப் போலச் சர்வஞ்ஞனாகிய பரமேசுவரனும் அவ்வுயிர்களின் தீமை நன்மைகளை அறியாதவரோ. எ - ம். (௧௩)

உலக மாய்ச்சிவம் பரிணமித் துயிருமாய் வினையுண்
டிலகு பேரொளி யதீதத்திற் றருமென்ப ரிதுபொய்
யுலகு காரண மாயையுண் ணுன்வினை யமல
னிலகு ருதொளி குருடனுக் கிருட்டறை யிடத்தே.

இ - ள். சிவம் உலகமாய்ப் பரிணமித்து - நிமித்தகாரண மாகிய சிவந்தானே பிரபஞ்சமாய உருவமாயுந் திரண்டு,—உயிருமாய் வினை உண்டு - ஆன்மாவாயும் வந்து வினைப்போகத்தை அநுபவித்து,—அதீதத்தில் இலகு பேர் ஒளிதரும என்பர் - பின்னர்த் துரியாதீதத்திலே இயற்கையாக விளங்குகின்ற ஞானத்தைக் காட்டும் என்று நிமித்தகாரண பரிணாமவாதிகள் கூறுகிற்பர்—இருட்டறை யிடத்தே குருடனுக்கு ஒளி இலகுறாது - இருட்டறையிலிருக்குங் குருடனுக்கு ஒருவன் தீவர்த்திகொண்டு சென்று தனனைக் காணுமாறு காட்டினும் அவன் கண் ஒளிபெற்றுக் காணுமாறில்லை அதுபோல,—இதுபொய - இவ்வுரையும் பேறும் புறச்சமயத்தவர் நூலினுங் காணப்படாத பெரும்பொய்யேயாம்:— உலகு காரணம் மாயை - இனி, பிரபஞ்சத்திற்கு முதற்காரணம் மாயையாகும்,—அமலன் வினை உண்ணான் - சிவபெருமான நிருமலராகையால் வினைபபோகத்தை அநுபவிக்கமாட்டார் ஆதலால் எ - ம். (கச)

வினையொப் பெய்துழிக் கருவியும் மலத்தையும் வீட்டி
முனைவ னல்கிய ஞானமு ஞானத்தின் முதலுந்
தனையு நோக்குறு தேகமாய்ச் சார்பய னுவப்பும்
புனைவ தின்றியே நிற்பது பொருளென்பர் சில்லோர்.

இ - ள். வினை ஒப்பு எய்துழி - சிவபுண்ணிய மேலீட்டினாலே இருவினையொப்பும் மலபரிபாகமும் சத்திநிபாதமும் வந்தவிடத்து,—கருவியும் மலத்தையும் வீட்டி - சிவபெருமான் அருட்டிருமேனிகொண் டெழுந்தருளிவந்து சரியைகிரியை யோகங்களைச் செய்வித்தலினாலே தத்துவங்களையும் ஆணவமலத்தையும் கேவல சகலங்களோடு நீக்கி,—முனைவன் நல்கிய ஞானமும் ஞானத்தின் முதலும் தனையும் நோக்குறுது - அந்தி சிவபெருமான் உபகரித்த உண்மைஞானத்தையும் அந்த ஞானத்தின் முதலாகிய ஞேயத்தையும் ஞாதிருவையும் பிரித்துச் சுட்டி யுணராமற்கூடி,—ஏகமாய் சார்பயன் உவப்பும் புனைவது இன்றியே நிற்பது பொருள் என்பர் சில்லோர் - ஒரே முதலாகி அதனுலடை

யும் பயனும் இன்பமும் அடைதலின்றி நிற்குநிலையே சிவசாயுச்சியமாமென்று கூறுவர் சைவருட் சிலராகிய சுத்தசைவர். எ - ம்.

அருவ வல்வினை தொலைந்திடா தழியினுங் கருவி
மருவி நிற்பினும் வாய்மையெய் தாதவை யொன்றாய்ப்
பொருவு மென்றிடி னபேதமாம் புணர்பய னுவப்பு
மொருவு மென்றிடி னெங்கய னுரைத்தமுத் தியினால்.

இ - ள். அருவ வல்வினை தொலைந்திடாது - அருவமாகிய வலிய இருவினையும் ஒத்து நீங்கமாட்டாது;—கருவி அழியினும் மருவி நிற்பினும் வாய்மை எய்தாது - கருவி முற்றும் நீங்கிக் கேவலமுறினும் அவை முற்றும் நீங்காத சகலமுறினும் மல நீக்கமும் சிவஞானவிளக்கமும் ஆகிய உண்மை உண்டாகாது;—அவை ஒன்றாய்ப் பொருவும் என்றிடின் அபேதமாம் - ஞாதிரு ஞானம் ஞேயம் என்னும் அவை மூன்றும் சென்று சென்று ஒன்றில் ஒன்று கூடி ஒன்றுமென்னின் முற்றும் அபேதவாதமாய் முடியும்.--புணர் பயன உவப்பும் ஒருவும் என்றிடில் உரைத்த முத்தியினால் என் பயன் - அங்ஙனங்கூடி ஒன்றுயதனால் உண்டாவதொருபயனும் இன்பமுமில்லையென்னில் நீ உரைத்த இம்முத்தியினாலே உனக்கு வந்த லாபமென்னை ஒன்றுமில்லையே. எ - ம். (கசு)

இன்ன பல்வகை யவரவ ரியம்புமா றெல்லா
நன்ன ரல்லன காட்டின நற்றவ வினிக்கேண்
முன்னும் வன்மலம் பசுபதி மூன்றுநித் தியமாய்
மன்னு மெங்கணு மாயினு மலமுயிர்ப் பதிவே.

இ-ள். நல் தவ-நல்ல சைவசித்தாந்தத்தவநெறியுடைய காலவமுனிவனே,--இன்ன பல்வகை அவரவர் இயம்புமாறு எலலாம் நன்னர் அல்லன காட்டினம் - இத்தன்மையனவாய்ப் பலவகைப்பட்ட அவ்வச்சமய வாதிகள் சொல்லும் முத்திலக்கணங்களெல்லாம் உண்மையல்லாமையை உனக்கு அறிவித்தனம்;—இனிக்கேள் - இனி வைதிகசைவ சுத்தாத்துவித சித்தாந்த உண்மையைத் தெளிவு பொருந்த உபதேசிப்பாம் கேட்பாயாக:—முன்னும் வன்மலம் பசு பதி மூன்றும் நித்தியமாய் எங்கணும் மன்னும் - வேதசிவாகமங்களினாலே உணர்ந்து கொள்ளப்படும் வலிய மலமும் ஆன்மாவும் பதியும் என்னும் முப்பொருள்களும் என்று முள்ளனவாய் எங்கும் வியாபகமாய் நிலைபெறும்;—ஆயினும் மலம் உயிர்ப் பதிவே - அங்ஙனமாயினும் மலமென்பது ஆன்மாவைப்பற்றியே யிருக்கும். எ - ம். (கஎ)

## வேறு.

சிற்றறிவாய்ச் சுதந்திரமின் மையுமா யன்றே
செறிந்தவுயிர் கேவலத்தி னிருள்விழிபோற் கிடப்பப்
பற்றுபரு வத்திறைவன் பரிந்துடல விளக்குப்
பணிப்பவது வாய்வினையிற் படர்ந்துபுரி காலை
யுற்றமருந் துறுபித்துக் கறிவறியா மையினு
மூட்டுதா யெனச்சிவபுண் ணியமுடனின் றுறுவித்
தற்றமிலா தியிற்பந்த மனாதியிற்பந் தமுமா
யடர்ந்தமல மூன்றினையுங் கிழாக்கி யறுத்து.

இ - ள். அன்றே செறிந்த உயிர் - அநாதியே மலத்தோடுங் கலந்த ஆன்மாவானது,—சிற்றறிவாய சுதந்திரமின்மையுமாய் கேவலத்தின் இருள்விழிபோற் கிடப்ப - சிற்றறிவினை யுடையதாய் ஒன்றனுபகாரத்தை யவாவியல்லது தனக்கெனச் செயலில்லாததுமாய் அநாதி கேவலத்திலே இருள்கொண்ட கண்போலச் செயலின்றிச் சடமனையதாயக் கிடக்க,—இறைவன் பரிந்து உடனின்று பற்று பருவத்து உடல் விளக்குப் பணிப்ப - முதல்வன் இரக்கங்கொண்டு உடனாய்நின்று கொள்ளத்தக்க பக்குவமடைந்த போது உடம்பாகிய விளக்கைக் கொடுக்க,—அதுவாய வினையிற் படர்ந்து புரிகாலை - அவ்வுடம்புமயமாய் இருவினைகளினாலே பிறந்திறந்து மீட்டும் மீட்டும் வினைகளை ஈட்டுங்கால்,—உறு பித்துக்கு உற்ற மருந்து அறிவு அறியாமையினும் ஊட்டு தாய் என - சிறுமகார்க்குப் பொருந்திய பித்தநோய்க்கு அந்நோய் மாறும்படி பொருத்தமாகியதொரு மருந்தை அந்நோயுடை மகார் அறியும்வகையானும் அறியாவகையானும் உண்பித்தொழிக்கும் நற்றாயைப்போல,—சிவபுண்ணியம் உறுவித்து - சிவபுண்ணியங்களைச் செய்வித்து,—அற்றம் இல் ஆதியிற் பந்தம் அநாதியிற் பந்தமுமாய் அடர்ந்த மலம் மூன்றினையும் கிழாக்கி அறுத்து - காலவெல்லையில்லாத ஆதிபந்தமாகிய மாயைகன்மங்களும் அநாதிபந்தமாகிய ஆணவமும் என்று அவ்வுயிரைத் துன்புறுத்தவந்த மும்மலநோயையும் தத்தஞ்சத்தி நிலை வலி குன்றி யடங்குமாறு நீக்கி. எ - ம். (௧௮)

தத்துவத்தி னுருக்காட்சி சுத்தியுற லோடுந்
தனைநோக்கி யுயிர்சிவமாத் தருக்கவிறை முன்னை
யித்தனைநாள் காறுமிடர்ப் பிறப்பிறப்பிற் படுநீ
யிருஞ்சிவமன் றனைக்காண வெடுத்தருளு முதலோன்

சுத்தவரு ளெனக்காட்டக் கண்டருளாற் றொழில்க
டோற்றுவலென் றெழவிரும்பி னெரிபோல வருளே
யத்தகைமை புரிவதுனக் கிலையெனத்த னுண்மை
யறிந்தருளே முதலென்ன வருளாயே விடுமால்.

இ - ள். தத்துவத்தின் உருக்காட்சி சுத்தி உறலோடும் - தத்துவரூபம் தத்துவதெரிசனம் தத்துவசுத்தி என்னும் பிரபஞ்சப் பற்றினீங்கின மாத்திரத்தில உடனே,—உயிர் தனை நோக்கிச் சிவமாத் தருக்க-ஆன்மா தன துருவைப்பார்த்துத் தானே சிவமாயினேனென்று அப்பிரபஞ்சவாசனையினாலே செருக்கடைய,—இறைமுன்னாய் இத்தனை நாள் காறும் இடர்ப் பிறப்பு இறப்பில் படும் நீ இரும் சிவம அன்று உனைக்காண எடுத்தருளும் முதல் தான் சுத்த அருள் என அருளால் காட்டக் கண்டு - சிவரூபம் முற்பட்டுவந்து இச்சுத்தாவத்தையை அடையும் நாள் வரையும் துன்புறுத்துவதாய பிறப்பிறப்பினை அடைந்த ஆன்மாவாகிய நீ ஒப்புயர்வற்ற சிவரூபமல்லை, உன்னை நீ அறியும்படி கருணைக்கையினாலே அபபவ மாயக்கடலினின்றுந் தூக்கியருளிய முதற்பொருள் சுத்தமாகிய அருளே என்று கிருபையினாலே அறிவிக்க அறிந்து,—தொழில்கள் தோற்றுவல் என்று எழ - பின்னர் அவ்வருளைத் தலைப்பட்டறிந்த ஆன்மா ஐந்தொழிலையுஞ் செய்வேனென்று முனைத்தெழாநிற்ப,—இரும்பின் எரிபோல அருளே அத்தகைமை புரிவது உனக்கு இலை எனத் தன் உண்மை அறிந்து அருளே முதல் என்ன - கொல்லனுலையிற் காய்ச்சிய இரும்பினிடத்தே தங்கிய அழருனே சுடுமதுபோல உன்னிடத்தே கலந்திருந்து உன்னை உணர்த்திய அத்திருவருளே அத்தொழிலைச்செய்வது ஆகலான் அத்தொழில் அவ்வைந்தொழிற்பட்டு வந்த உனக்கு எவ்வாற்றானுமில்லை என்று உணர்த்த,—அருளாயே விடும் - அதனானே தனையுள்ளவாறுணர்ந்து அவ்வருண் முதலே எல்லாஞ்செயவது நமக்கென வோர் செயலில்லை என்று தன் முனைப் பற்றத் துவண்டு அவ்வருளாயே யொழிவதாகிய சிவயோகமுறும். எ - ம். (௧௯)

அருளிதுமற் றணுதிமுத்தன் சத்தியவன் சத்தி
மான்கிரண மலரினைப்போ லறிகவென வறிந்து
பொருவில்சிவத் தினையருளுங் கழியவிழி கதிரைப்
புணர்ந்ததெனை வொன்றாகா திரண்டாயும் படாமற்
பெருகுபர மானந்த வெள்ளமொன்றே திளைக்கும்
பெற்றியிது முத்திநிலை பெற்றவுடல் பகவின்

மருவும்விளக் கெனமாயு மதற்கமைத்த வூழும்
வதிந்திறைவன் றனதாக வேற்றிடுவன் காணே.

இ-ள். அருள் இது அறுதி முத்தன் சத்தி - அங்ஙனம் ஆன்மா அழுந்திய இந்த அருள் அறுதிமுத்தசிவத்தின் நீக்கமற்ற சத்தியாகும்,—அவன் சத்திமான் - அச்சிவபெருமான் அச்சத்தியையுடையவர்,—கிரணம் அலரியைப்போல் அறிக என அறிந்து - அவ்வருளுஞ் சிவமும் கதிரும் கதிரவனும்போல நீக்கமற நிற்கு நிலைமையை உணரக்கடவாயென்று அறிவிக்க அறிந்து,—அருளுங் கழிய பொருவில் சிவத்தினை - அவ்வருளவத்தையும் நீங்க ஒப்பற்ற சச்சிதானந்த சொருப சிவமுதலை,—விழி கதிரைப் புணர்ந்தது என ஒன்றாகாது இரண்டாயும் படாமல் பெருகு பரமானந்த வெள்ளம் ஒன்றே திளைக்கும பெற்றி இது - கண்ணொளி கதிரொளியைக் கலந்தாற்போல ஏகமாயக் கூடியவதனாலே ஒரு பொருளாயே விடாதும் பொருணமையா லிரண்டேயாயினும் வேறாகாமலும் சுத்தாத்துவிதநிலை விளங்கப்பெறறு, கடன்மடை திறந்தாற்போலப் பெருகுகின்ற பரமானந்த வெள்ளம் ஒன்றையே அநுபவிக்கும் சிவபோகத்தன்மை இதுவாகும்,—முத்திநிலைபெற்ற உடல் பகலில் விளக்கு எனமாயும் - இம்முத்திநிலையைத் தலைக்கூடிய முத்தான்மாவின் உடம்பாகிய மாயை நடுப்பகலில் ஏற்றிவைத்த விளக்கொளிபோலத் தன்றன்மை சிறிதுமின்றி அச்சிவமயமாகியே விடும்.—அதற்கு அமைத்த ஊழும் இறைவன் வதிந்து தனதாக ஏற்றிடுவன் - அவ்வுடலினளவாயமைந்த பிராரத்த வினையையும் முதல்வனூர் அவ்வுடம்பே ஆலயமாகவும் முத்தான்மாவே திருமேனியாகவும் தங்கிநின்று தமதர்ச்சனையாக ஏறறு அருள்செய்வர்;—காண் - யாம் கூறிய இம்முறையே தெளிந்து நிட்டைகூடி யனுபவித்துணரக்கடவாய்.எ-ம்.

சஞ்சிதமுன் பேயழிந்த தேனும்வினை யுளதேற்
றயங்கருளி னிரியுமல மழியாது சத்தி
செஞ்சுடர்முன் னிருள்போலத் தேயுமுட லுலகிற்
றிரிதருகால் வாதனையிற் றிறம்புவது முளதா
மஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்கினது விலகு
மாண்டருளுந் தனிமுதலை மூன்றிடத்தும் வழிபட்
டெஞ்சலிலாச் சீவன்முத்தி பரமுத்தி யிரண்டு
மீண்டேபெற் றிடுவரிறை ஞானமுணர்ந் தோரே.

இ-ள். சஞ்சிதம் முன்பே அழிந்ததேனும் வினையுளதேல் தயங்கு அருளின் இரியும் - சஞ்சிதவினை முன்னமே தீக்கையான்

அழிந்ததாயினும், மேலே சஞ்சிதமாக வரக்கடவதாகிய ஆகாமிய வினை உண்டாகுமாயின், அவ்வினையும் விளங்கிய அருளினாலே அழிந்தொழியும்;—மலம் அழியாது சத்தி செஞ்சுடர் முன் இருள் போலத் தேயும் - ஆணவமலம் அங்ஙனம் அழியாது செஞ்ஞாயிற்றின் முற்பட்ட இருளின் சத்தி வலிகுன்றித் தேயந்தடங்கியவாறு போலத் தன்சத்தி வலிகுன்றித்தேய்ந்து அடங்கிநிற்கும்;—உடல் உலகில் திரிதருகால் வாதனையில் திறம்புவதும் உளதாம் - இம்முத்தர்தம் முடம்பு பூமியிற் சஞ்சரிக்கும்போது வாதனையினாலே கீழுள்ள அவத்தைகளை ஒரோவழி அடைதலும் உளதாகும்;—அஞ்செழுத்தை உச்சரிக்கின் அது விலகும் - ஸ்ரீ பஞ்சாக்கரத்தை அந்நிலைக்கு விதித்த விதிப்படி அறிந்து செபிக்கின அவ்வாதனையும் நீங்கும்;—இறைஞானம் உணர்ந்தோர் ஆண்டருளும் தனி முதலை மூன்றிடத்தும் வழிபட்டு எஞ்சல் இலாச் சீவன முத்தி பரமுத்தி இரண்டும் ஈண்டே பெற்றிடுவர் - திருவடிஞானத்தை உணர்ந்த மகான்கள் தம்மை அடிமையாகக் கொண்டருளும் ஒப்பற்ற சிவமுதலைக் குருலிங்க சங்கமம என்னும் மூன்றிடத்தினும் கண்டு வழிபட்டு மீளுதலில்லாத சீவன் முத்தி பரமுத்தி என்னும் இருநிலைகளையும் ஈண்டே பெறறிருப்பார்கள். எ - ம். (உக)

காலவர்வழிபடுபடல முற்றிற்று.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# சிவஞானத்தெளிவுபதேசத்திரயம்.

மூன்றாவது

## திருத்தணிகைத்தலபுராணத்து

# நந்தியுபதேசப்படலம்.

அகூ - வது செய்யுண்முதல் கநிச - வது செய்யுள்வரை.

### விநாயகவணக்கம்.

மும்ம தத்தனென் றொருபெயர் தனக்குமொய் கூந்தற்
கொம்மை வெமுலைக் கோற்றொடிக் கொடிச்சியை யிலைவேற்
கைம்ம லர்த்தனி யிளவற்குங் கஃஃறெனுங் கானத்
தம்ம முநதுபுக் குறுத்தவ னடிமலர் பணிவாம.

முன்னொருகாலத்திலே, திருநந்திதேவர் திருக்கைலாசபதியை வணங்கி, "அடியேன் தேவரீருடைய திருவருளினால் வேதாகமாதி சகலகலைகளையும் தெரிந்தும தேவரீர் திருவடியை அடைதலாகிய பேரின்பப் பெருவாழ்வில் அழுந்தப்பெற்றிலேன்; திரிபதார்த்த லக்ஷணத்தை உள்ளபடி அறிந்து, சிவாநுபவப் பெரும்பேற்றை அடியேன் அடையும்படி அநுக்கிரகித்தல்வேண்டும்" என்று பிரார்த்தித்து நின்றார். அக்கடவுள் அவர்மேற் கருணைகூர்ந்து "நமக்கும் ஞானோபதேசஞ் செய்த நமது இளைய குமாரன் பூமியிலே தணிகாசலத்தில் இருக்கின்றான். அவனிடத்தே ஞானோபதேசம் பெற்றுத் தெளிவடைந்து முத்தியின்பத்தழுந்தக்கடவாய்" என்றருளிச்செய்தார். அவ்வாறே திருநந்திதேவர் திருத்தணிகைக்கு வந்து ஸ்கந்தபரமாசாரியரை வழிபட, அவர் திருநோக்க தீக்ஷைபுரிந்து சிவாகமத்தின் ஞானபாதப்பொருளை பூரணறத் தெளிவுறும்படி உபதேசித்தருளினார். அவ்வுபதேசம் ஈண்டுக் கூறப்படுகின்றது.

## நூல்.

இனாத நூலின ரியம்புவ பலதிற மெண்ணிற்
கனாவெ னத்தலை மயங்குவ கழிகசை வத்த
மனாதி யாலறி வரியன நிறைவின வலிய
வனாதி சத்திநித் தியத்தன வைந்துமெய்ப் பொருளே.

இதன்பொருள். இனாத நூலினர் இயம்புவ பலதிறம் - நந்தியே, துன்பந்தருவனவாய முக்கூற்றுப் புறச்சமயத்தவராலும் தத்தம் மதநூலாராய்ச்சிகொண்டு சொல்லப்படுவனவாகிய பெத்த முத்தியின் இலக்கணங்கள் பலவேறு வகைப்படும்:—எண்ணில் - அளவைகளான் அவற்றை ஆராயின்,—கனா எனத் தலைமயங்குவ கழிக—கனவுக்காட்சிபோல் முன்னொடு பின் மலைவனவாமாகலானும் அவை அறிவான் மிக்க நினக்கு எடுத்துக்கூறி மறுக்கற்பாலனவல்ல வாகலானும் ஈண்டு எடுத்துக் கூறாது விடுத்தனம் அவைகிடக்க,—சைவத்த - சைவாகமங்களிற் கூறப்படுவனவாய்,—மனாதியால் அறிவு அரியன - மனவாக்குக் களால் அறிந்துகோடற்கரியனவும்,—நிறைவின - செறிந்த வியாபகத்தை யுடையனவும்,—வலிய - வன்மையை யுடையனவும்,—அனாதி சத்தி நித்தியத்தன - அனாதியாகிய சத்தியோடு நிலைபெறுவனவுமாகிய,—ஐந்து மெய்ப்பொருள்-இந்நான்கிலக்கணங்களையு முடைய ஐந்துபொருள்களும் உண்மைப் பொருள்களேயாம். எ - ம். இனாதநூல், பசுநூல். (௧)

பதியு மப்பதிக் கடிமையாம் பசுவுமப் பசுவின்
முதிரு மாணவப் பகையுமம் முழுப்பகை துமிப்பக்
கதிய மாயையுங் கருமமு மெனப்படு மவைதா
மதியு ளோர்கள்பின் னிரண்டையும் மலத்தொடு மொழிவார்.

இ - ள். அவை தாம் - அவ்வைந்து பொருள்கடாம்,—பதியும் அப்பதிக்கு அடிமையாம் பசுவும் அப்பசுவின முதிரும் ஆணவப் பகையும் அம்முழுப்பகை துமிப்பக் கதிய மாயையும் கருமமும் எனப்படும் - பதிப்பொருளும் அப்பதிப்பொருளுக்கு என்றும் மீளா அடிமையாகிய பசுப்பொருளும் அப்பசுப்பொருளின் அறிவை மறைத்தெழும் ஆணவமாகிய பகைப்பொருளும் அவ்வாதி பகையமைய மாற்றுமாறு வந்த மாயைப்பொருளும் கன்மப்பொருளும் என்று சொல்லப்படுவனவாம்;—மதி உளோர்கள் பின் இரண்டையும் மலத்தொடும் மொழிவார் - சிவாகம ஆராய்ச்சியிற் றெளிந்த அறிவுடையோர்கள் பின்னையவாகிய மாயை கன்

மங்களிரண்டையும் ஆணவமலத்தோடுஞ் சேர்த்துப் பாசம் ஒன்றெனவும் கூறுவர். எ - ம். (௨)

அறிந்து யிர்க்கறி விப்பது பதியறி வித்தா
லறிந்து நிற்பது பசுவது சிவத்தடை யாமைச்
செறிந்து வையகத் துய்ப்பதா ணவந்திரள் கருவித்
துறந்த மாயைமற் றாணது பஃறிறக் கருமம்.

இ - ள். பதி அறிந்து உயிர்க்கு அறிவிப்பது - அவைகளுள்ளே பதிப்பொருள் இயல்பாகவே அறிந்து உயிர்களினபக்குவத்துக் கேறப அறிவிப்பதாகிய அதிசூக்கும சித்தாயுள்ளது,—பசு அறிவித்தால அறிந்து நிறபது - ஆன்மா அப்பதிப்பொருள் அறிவித்தால் அறிந்து நிற்பதாகிய தூலசித்தாயுள்ளது,—ஆணவம் அது சிவத்து அடையாமைச் செறிந்து வையகத்து உய்ப்பது - ஆணவம் அவ்வான்மா நீங்காத்துணையாகிய சிவத்துடனே உணர்ந்து கலவாவண்ணம் அதன் அறிவோடும் சமவியாத்தியாகக் கலந்து அழுத்தி மறைத்துப் பிரபஞ்சத்திற் செலுத்துவது,—உறு அந்த மாயை திரள் கருவித்து-அதன்பின் வரும் அவ்வியல்புடைய மாயை அந்தப் பிரபஞ்ச ரூபமாகிய கருவிக்கொத்தையுடையது,—பல் திறக் கருமம் ஊணது - பலவேறுவகைப்படக் காரியப்பட்டு வந்த கன்மம் அந்தப்பிரபஞ்சத்திலே இன்பத்துன்ப வுணவாயுள்ளது. எ - ம். (௩)

உணர்வெ ழாச்செயிர் வலியினு லுறவினை யிழந்து
தணவு றாதவா ணவத்தினைத் தலைப்படு முயிர்கட்
கணவு தாயென விரங்கியா ரருளினுற் பருவப்
புணர்வு தேர்ந்துடல் கரணமும் புவனமும் பொருத்தி.

இ - ள். உணர்வு எழாச் செயிர் வலியினுல் - அறிவு தோன்றுவாறு அழுத்தி மறைத்த ஆணவமலசத்தி வலியினுலே,—உறவினை இழந்து - அவ்வறிவினைத் தோற்றுவிக்கும் சிற்சத்தியினுபகாரத்தை மறந்து,—தணவுறாத ஆணவத்தினைத் தலைப்படும் *உயிர்கட்கு - நீங்காத ஆணவமலத்தோடு கூடிக்கிடக்கும் கேவலாவத்தையையுடைய உயிர்களுக்கு—அணவு தாய் என இரங்கி - நீரினுள் வழீஇச் செல்லுஞ் சிறுமகவைத் தழீஇச் சென்று தூக்கும் நற்றாயைப்போல அவ்வுயிர்களோடுங் கலந்த முதல்வனது ஆதிசத்தி இரக்கங்கொண்டு,—ஆர் அருளினுல் பருவப் புணர்வு தேர்ந்து - நிறைந்த அருளினுலே அம்மலம் பரிபாகமாதலையுணர்ந்து,—உடல் கரணமும் புவனமும் பொருத்தி - அவ்வுயிர்கள் அக்

கேவலாவத்தையை நீங்கி அறிவு இச்சை தொழில்கள் மெல்ல மெல்ல வியாபரித்தற்குரிய காரணசரீரம் கஞ்சுக சரீரம் குண சரீரம் என்னும் மூன்றுமாகிய பரசரீரத்தையும் அதற்குரிய கரணங்களையும் புவனங்களையும் பொருந்தும்படிசெய்தது. எ - ம். (ச)

காரணசரீரம், அசுத்தமாயையின் கலக்குண்ட பாகம்; கஞ்சுக சரீரம், காலம் நியதி கலை வித்தை அராகம் என்னும் ஐந்து தத்துவங்கள்; குண சரீரம், முக்குணங்களும் விரியாது தொகையாகிய குணதத்துவம். பரம், முன். (ச)

உற்ற மாயையோ டாணவ மொழிந்தொளி ரறிவே
முற்றும் வானுரு வெனக்கொளும் முதலிலா முதல்வன்
பற்று மாயையிற் படர்வினைப் பாலவா முயிர்கட்
கிற்று ருவுட லொடுமிறு முடன்முத லியைத்து.

இ - ள். உற்ற மாயையோடு ஆணவம் ஒழிந்து ஒளிர் அறிவே- ஏகதேச அறிவைச் செய்யும்படி பொருந்திய மாயாமலமும் ஆணவமலமும் நீங்கி விளங்கும் அறிவினையே,—வான் உருவு முற்றும் எனக் கொளும் முதல் இலா முதல்வன - உயர்வாகிய வடிவம் முழுவதுமாகக்கொண்டு உணர்த்தும் சர்வசத்திமானாகிய பசுபதி,—பற்றும் மாயையில் படர்வினைப் பாலவாம உயிர்கட்கு- போக நுகர்ச்சியைப் பெறுமாறு தமக்கிடமாகக்கொள்ளும் மாயா புவனங்களிலே போக்கு வரவு செய்தனுபவிக்கின்ற வினைப் பகுதியினையுடைய உயிர்களுக்கு,—இறறுரு உடலொடும் இறும் உடல் முதல் இயைத்து - அப்போக்கு வரவு செயதற்குரிய சூக்கும உடம்புடனே அநுபவித்தற்குரிய தூல உடம்பையும் ஆதியிலே கூட்டி. எ - ம்.

மாயையில் பற்றும் படர்வினைப்பாலவாம் உயிர்கட்கு என மாற்றி, மாயையிற் கட்டுண்டு கிடக்கும் விரிந்த வினைப்பகுதியினையுடைய உயிர்களுக்கு என்று உரைத்தலுமொன்று. இற்றுரு உடல் - சூக்குமவுடம்பு. இதனை வடநூலார் ஆமோதஸூதாயி என்பர். (ரு)

அருவு ருத்திறத் துடனுயி ருலகமாய் வேறாய்
மருவு மற்றவற் றுடனுமாய் வல்வினைக் கேற்பக்
கருவி முற்றவுந் தொழிற்படுத் துணவினைக் காட்டிப்
பொருவி னற்பதம் புகுத்துவான் புகர்மலங் கழிக்கும்.

இ - ள். உடல் உயிர் உலகமாய் - அப்பசுபதி மீட்டுஞ் சிருட்டி செய்யுமிடத்து உடலும் உயிரும்போல் கலப்பினால் அவ்

வுயிர்களேயாயும்,—வேறாய - பொருட்டன்மையினாலே வேறாய சிவமேயாயும்,—மருவும் அவற்று உடனுமாய் - அவ்விருமைக்கும் பொதுவாய இருவினைக்கேற்ப ஐந்தொழிறபடும் அவ்வுயிர்களோ டுடனாயும் அத்துவிதமாய நின்று,—அரு உருத்திறத்து - அருவம் அருவுருவம் உருவம் என்னும் தடத்த வடிவைக்கொண்டு,—வல்வினைக்கு ஏற்பக் கருவி முற்றவும் தொழிறபடுத்து—தமது ஆணையினாலே அவ்வுயிர்களின் வலிய இருவினைக் கேற்குமாறு தத்துவத் தொகுதி முழுவதையும் தொழிற்படுத்தி,—உணவினைக் காட்டி - அவ்விருவினைப்பயனை நுகர்வித்து,—பெர்ரு இல் நல்பதம் புகுத்துவான் புகர் மலம் கழிக்கும் - ஒப்பற்ற நல்ல திருவடி எனப்படும் சிவசாயுச்சியத்திற சேர்த்தற் பொருட்டு அவ்வுயிர்களின் குற்றம் பொருந்திய ஆணவமலத்தை நீக்கியருளுவர். எ - ம்.

அருவுரு என்பதனை இரட்டுற மொழிந்து கொள்க.        (௬)

இரும்பு சேர்ந்தெரி யழற்றினு மெரியுடைத் தொழிலே
யிரும்பி னுக்கழற் றுவதிலை யிரும்படைப் பாதி
விரும்பு நான்முக னாதியோ ரிடை விளைத் துழியு
மரும்பி யாங்குமீட் டொடுக்குமவ் வரனுடைத் தொழிலே.

இ - ள். இரும் படைப்பு ஆதி விரும்பு நான்முகன் ஆதியோரிடை விளைத்துழியும் - படைத்தல் காத்தல்களை விரும்பித் தவமியற்றிய பிரமன் மால் முதலியோரிடத்து நிலைகளாக நின்று செயதுழியும்,—அரும்பி யாங்கு மீட்டு ஒடுக்கும் அ அரனுடைத் தொழிலே - அத்தொழில்கள் தோன்றியவாறுபோல மீட்டும் சங்கரித்தலைச்செயயும் அம்மகாசங்காரக் கடவுளுடைய தொழில்களேயன்றி அவ்வயன்மான் முதலியோர் தொழில்களல்ல:—எரி சேர்ந்து இரும்பு அழற்றினும் - அழலைப்புணர்ந்து இரும்பு சுடுதற்றொழிலைச் செய்யினும்,—அழற்றுவது இரும்பினுக்கு இலை - அச்சுடுதற்றொழில் இரும்புக்கு இயல்பானில்லை;—எரி உடைத் தொழிலே - அவ்வழலின் றொழிலேயாம் அதுபோல. எ - ம். (௭)

அனாதி பந்தமோ டனுபந்த மாவது மலமே
யனாதி பந்தமோ டனுபந்த முறுவது முயிரே
யனாதி பந்தமோ டனுபந்த மிரண்டுமில் லாதா
னனாதி முத்தனு மனாதியே கலந்தரு ளமலன்.

இ - ள். அனாதிமுத்தனும் அனாதியே கலந்தருள் அமலன் அனாதி மலமுத்தராய் அனாதியே அவ்வுயிர்களோடுங் கலந்

ளிய நிருமலசிவனார்,—அனாதி பந்தமோடு அனுபந்தம் இரண்டும் இல்லாதான் - அனாதிபந்தமாய ஆணவமலத்துடனே பினாதிபந்தமாய மாயை கன்மங்களிரண்டையும் இயல்பாணில்லாதவரேயாம்;—அனாதி பந்தமோடு அனுபந்தம் உறுவதும் உயிரே - அவ்விருவகைப்பந்தங்களையும் பொருந்துவதும் ஆன்மாக்களேயாம்;—அனாதி பந்தமோடு அனுபந்தம் ஆவதும் மலமே - அவ்விருவகைப் பந்தமாவதும் மலமேயாம். எ - ம். (௮)

விதந்த யாவையும் புரிந்துமோர் விகாரமின் மையினாற்
சுதந்த ரத்தினா லொருவழி குணங்கலப் பதனா
லிதநதொ லாருயிர்க் கேற்றுசீர்த் திறமுத லானு
முதிர்ந்த பேரொளி முதல்வனை யொப்பதொன் றிலையே.

இ - ள். விதந்த யாவையும் புரிந்தும் ஓர் விகாரம் இன்மையினால் - மேலே எடுத்துக்கூறிய ஐந்தொழிலையுஞ் செய்தும் ஒரு விகாரமுமின்மையானும்,—சுதந்தரத்தினால் - சுவதந்திரமுண்மையானும்,—ஒருவழி குணம் கலப்பதனால் - ஒரு பெற்றித்தாயே அறிவு விளங்குவதனானும்,—தொல் ஆருயிர்க்கு இதம் ஏற்று சீர்த்திறம் முதலானும் - அனாதியாகிய நிறைந்த உயிர்களுக்கு இன்பந் தந்தருளும் சிறப்புவகை முதலியவற்றானும்,—முதிர்ந்த பேரொளி முதலை ஒப்பது ஒன்று இலையே - சிற்சத்தி சொரூபனாகிய சிவ முதல்வனை ஒக்கும் பொருள் யாதுமில்லை. எ - ம்.

இதனுள் யாவையும் புரிந்தும் என்றதனானே அளவிலாற்றலும், விகாரமின்மையினால் என்றதனானே இயல்பாகவே பாசங்களினீங்குதலும், சுதந்தரத்தினால் என்றதனானே தன்வயத்தனாதலும், ஒருவழி குணங் கலப்பதனால் என்றதனானே இயற்கையுணர்வினனாதலும், இதமேற்று சீர் முதலானும் என்றதனானே வரம்பிலின்பமுடையனாதலும், முதிர்ந்த பேரொளி முதல்வன் என்றதனானே முற்றுணர்வுடையனாதலும் என்னும் இறைவனார் முதன்மைக்குணங்களாறுங் கூறினார். இன்னும் ஆருயிர்க்கு இதமேற்று சீர் என்றதனானே பேரருளுடைமையும், பேரொளி முதல்வனென்றதனானே தூய வுடம்புடைமையும் தெளிந்து கொள்க. (௯)

பரவு மிப்பொரு ளொன்றலாற் பதியில்லை வேறு
விரவு மாருயிர் சிற்றறி விற்பல விதத்த
விருண்ம லத்தினை வீண்டுறு சகலத்த வசிப்ப
வரும்வி யாபகத் தனைமலந் தபமுத்தி யடைவ.

இ - ள். பரவும் இப்பதிப்பொருள் ஒன்று அலால் வேறு இல்லை - உயர்வொப்பில்லாத பதிப்பொருள் ஒன்றேயென்று வேதாகமாதிகளால் உயர்த்துக் கூறப்படும் இந்தப் பரசிவப பொருளேயல்லது வேறு பதிப்பொருளில்லை.

உணர்வெழா என்பது முதல் இதுகாறும் பதியிலக்கணங்கூறி இனிப் பசுவிலக்கணங்கூறுவா னெடுத்துக்கொண்டார்.

விரவும் சிற்றறிவின் ஆருயிர் பலவிதத்த - இனி, அப்பதிப் பொருளின்வேறாய அதனோடு கலந்த உயிர்கள அனேகவிதத் தன:—இருள் மலத்தின - அவை இருள்போல மறைத்தலைச்செய யும் ஆணவமலத்தோடுந் தழுவிக் கிடத்தலினுற கேவலாவத் தையை யுடையனவும்,—ஈண்டுறு சகலத்த - கருவிகளோடுங் கூடிப் பொருந்துவதனுற் சகலாவத்தையை யுடையனவும்,— வசிப்ப வரும் வியாபகத்தன - அதுவதுவாய்ப பொருநதுவத னால் வசித்திட வரும் வியாபகத்தையுடை யனவும்,—மலம் தப முத்தி அடைவ - மலபநதம நீங்க வீடுபெறுவனவுமாயுள்ளன வாம். எ - ம். (௧௦)

தொகையி றந்தன வாயினுந் தொல்லையா ணவநோய்
தகைய நின்றன வதனொடு கருமமுந் தகையும்
வகையி னின்றன வவற்றொடு மாயையு மருவு
மிகையினின்றன வென்னமூ வகையின விதப்பின்.

இ - ள். தொகை இறந்தன ஆயினும் - இனி, அவ்வுயிர்கள் எண்ணளவைக் கடந்த அனேகமானுலும்,—விதப்பின் - வகையா னெடுத்துக்கூறின்,—தொல்லை ஆணவநோய தகைய நின்றன - அனுதி ஆணவமலபந்தத்தின் மயக்கமாத்திரமே பந்திக்கநின்ற விஞ்ஞானகலரெனவும்;—அதனொடு கருமமும் தகையும் வகை யில் நின்றன - அம்மலபந்தத்துடனே கருமமலமும் பந்திக்கும் வகையில் நின்ற பிரளயாகலரெனவும்,—அவற்றொடு மாயையும் மருவும் மிகையில் நின்றன என்ன மூவகையின - அவ்விருமலத் துடனே மாயாமலமும் பந்திக்கும் மிகுதியால் நின்ற சகலரென வும் மூவகைப்பேதமுடையனவாம். எ - ம். (௧௧)

சத்து நேர்தனக் கெனவறி விலாதன தணவா
மெத்த சத்தென வறிவுமே வாதவு மல்ல
வொத்த நிந்தவுங் கனவத்திற் கலங்குமூக் கத்த
சுத்த சத்தையு மறிதலிற் சதசத்தா வனவே.

இ - ள். சத்து நேர் தனக்கு என அறிவிலாதன - அவ்வுயிர்கள் வியஞ்சகத்தானறிதலினாலே சிவசத்தைப்போல இயல்பாகவே அறியும் அறிவு இல்லாதனவும்,—தணவா மெத்து அசத்து என அறிவு மேவாதவும் அல்ல - பிரபஞ்சா நுபவ முண்மையினாலே நீங்காத முறாஉம் அசத்தாகிய பிரபஞ்சத்தைப்போல அறிவே இல்லாதனவும் அல்ல,—ஒத்து அறிந்தவும் கனவத்தில் கலங்கும் ஊக்கத்த - அப்பிரபஞ்சாநுபவத்தின்பொருட்டுக் கருவிகளோடுங் கூடி அறிந்தனவற்றையும் நூல்களானறிந்தனவற்றையும் கனவு கண்டாறபோலக் கலங்கி மாறியுணருந் தன்மையினவாம்;—சத்து அசத்தையும் அறிதலில் சதசத்து ஆவனவே - ஆதலால் அச்சிவசத்தின்றன்மையும் அசத்தின்றன்மையுமின்றி அவ்விரண்டனோடுங் கூடி நின்று அதுவதுவாய் அறிதலினாலே அவ்விரண்டினும் வேறாய சதசத்து என்னுமியல்பினவேயாம். எ-ம்.

மூல வாணவ மயக்கலின் முதல்வனைப் பின்னிட்
டேனும் வான்றரை நரகத்தி லின்பத்துன் பருந்தும்
வேலை நோய்முத லடுத்துழி வெறுப்பன வெறுக்கை
கோல மாதர்மற் றடுத்துழிக் குளிர்வன நாளும்.

இ - ள். மூல ஆணவம் மயக்கலின் முதல்வனைப் பின் இட்டு - அநாதி ஆணவமலம் முயங்கி மயக்குதலினாலே தமக்குற்ற துணையாகிய சிவமுதலை மறந்து பிறவியிற்பட்டு,—ஏனும் வான் தரை நரகத்தில் இன்பத் துன்பு அருந்தும் - தாம் பொருந்துதற்குரிய மேலுலகம் நிலவுலகம் கீழுலகம் என்னும் மூன்றுலகத்தினும் சென்று சென்று முறையே இன்பத்தையும் இன்பத்துன்பத்தையும் துன்பத்தையும் அநுபவிக்கும்.—நாளும் வேலை நோய் முதல் அடுத்துழி வெறுப்பன - அவ்வநுபவம் எங்ஙனமெனின் எந்நாளும் முயற்சியும் நோயும் முதலியன வந்தவிடத்துத் துன்புறுவனவும்,—வெறுக்கை கோல மாதர் மற்று அடுத்துழிக் குளிர்வன - மிக்க செல்வங்களும் அழகிய பெண்களும் கிடைத்தவிடத்து இன்புறுவனவுமாம். எ - ம்.

இன்பத்துன்பு என்றதனை இரட்டுற மொழிந்துகொள்க. ()

தனைநி கர்ப்பருஞ் சத்தசத் துறுதசத் தறியா
தனைய தாகலி னதற்கொன்றும் வேண்டுவ தில்லை
வினையும் பல்வகைக் காரணமும் வேறுவே றுடலும்
வனையு மண்டமும் யாவையு முயிர்க்கென மதியாய்.

இ - ள். தனை நிகர்ப்பு அரும் சத்து அசத்து உறாது - தன்னை ஒப்பதும் மிக்கதும் இல்லாத சிவமாகிய சத்து அசத்தாகிய பிர

பஞ்சத்தை அறிந்தனுபவியாது,—அசத்து அறியாது - பிரபஞ்ச மாகிய அசத்து அறிவற்றசடமாம்,—அனையது ஆகலின் அதற்கு ஒன்றும் வேண்டுவது இல்லை-அத்தன்மையதாதலின் அதற்கு அநுபவிக்குமாறு யாதும் வேண்டப்படுவதில்லை.—வினையும் பல்வகைக் கரணமும் வேறு வேறு உடலும் வனையும் அண்டமும் யாவையும் உயிர்க்கு என மதியாய் - ஆகலின் பாரிசேடத்தானே இருவினையும் அவ்விருவினையை நுகர்தற்குரிய பலவகைப்பட்ட கருவிகளும் அக்கருவிக்கொத்துக்களாலாய பலவேறு உடம்புகளும் அவ்வுடல்களுடனே வசித்தற்குரித்தாயச் சிருட்டிக்கப்பட்ட பல புவனங்களும் அவையிற்றுக் கங்கமான பிறவனைத்தும் அதுவதுவாயுணர்ந் தநுபவிக்கும் இயைபினையுடைய உயிர்களுக்கே வேண்டப்படுமென்றறிந்து கொள்வாயாக. எ - ம்.

இது காறும் பசுவிலக்கணங்கூறி, மேல் அப்பசுத்தன்மையைச்செய்யும் ஆணவமலத்தினிலக்கணங் கூறுவான் ஞெடங்குகின்றார். (கச)

கலாதி யிச்சையா திகள்வந்து கலாவுமா றன்றே
நிலாவி நெல்லுறு முளையென வாணவ முயிரிற்
குலாவு மிச்சையா திகளொரீஇக் குளிர்பதி மாட்டுச்
சுலாவு மிச்சையா திகளையுந் தோற்றுறு தணவும்.

இ - ள். நெல் உறு முளை என - நெல்லிற்பொருந்திய முளைத் தற்சத்தி தோன்றுதற்கு நிமித்தகாரணமாகிய உமியைப்போல,—ஆணவம் - ஆணவமலமானது,—இச்சை ஆதிகள் கலை ஆதி வந்து கலாவு மாறு நிலாவி - ஆன்மாவின் இச்சா ஞானக்கிரியைகளை கலை வித்தை அராகம் என்னுந் தத்துவங்கள் மாயையினின்றுந் தோன்றிவந்து கலந்து போகந் துய்ப்பிக்குமாறு தனது சத்தியை நிறுவி,—குளிர் பதி மாட்டுச் சுலாவும் இச்சை ஆதிகளையும் தோற்றுறுது - இன்பந்தரும் முதல்வன்கட்கலந்த இச்சாஞானக்கிரியைகளையுந் தோன்றவிடாமல்,—உயிரில் குலாவும் இச்சையாதிகள் ஒரீஇ அன்றே அணவும் - உயிரின்கட்கலந்த இச்சாஞானக்கிரியைகளையும் விளங்கவொட்டாது அநாதியே அவற்றைத் தகைந்து மறைக்கும். எ - ம்.

முளையென்றது முளைத்தற்குக் காரணமாகிய உமியை. (கரு)

விழிப்பு ணர்ப்புறு மிருளென விராவிய தன்னை
யழிப்ப முற்றிய சத்தியுந் தன்வழி யாக்கி
யொழிப்பின் மூன்றிடத் திருதிறத் தவத்தையோ டைந்துங்
கழிப்பி லாதுயி ருறப்பல சத்தியிற் கதுவும்.

இ - ள். விழிப்புணர்ப்புறும் இருளென விராவிய தன்னை - கண்ணொளியைக் கலந்து நிற்கும் பூத விருளைப்போல ஆன்மசத்தியைக்கலந்து நிற்கும் ஆணவமலமாகிய தன்னை,—அழிப்ப முற்றிய சத்தியுந் தன்வழியாக்கி - அழித்தற்பொருட்டு முறறுகைசெய்த ஆதிசத்தியையும் தன் வசப்படுத்தி,—ஒழிப்பில் மூன்று இடத்து இருதிறத்து அவத்தை ஓர் ஐந்தும் கழிப்பு இலாது உயிர் உறப் பல சத்தியில் கதுவும் - தன்னை ஒருவாற்முன் அவ்வாதிசத்தி ஒழிக்குமையில், கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூன்று காரணவத்தைகளிலும் மேலாலவத்தை கீழாலவத்தை என்னும் இருவகையினுலும் வரும் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் ஐந்தவத்தைகளையும் தவறுது உயிர் பொருந்தும்படி தான் பலவேறு சத்திகளினுலே பற்றுநிற்கும். எ - ம். (௧௬)

வே று.

உறுதி பயக்குங் காரியங்க ளொருகா லத்துஞ் செயவொட்டா
திறுதி பயக்குங் காரியமே யெக்கா லத்து நிகழ்விக்குஞ்
செறியு முயிரி னல்லறிவை யெக்கா லத்துஞ் சிதைத்துவரும்
மறிய வுயிர்க்குப் புகரறிவை யெக்கா லத்தும் வளர்ப்பிக்கும்.

இ - ள். செறியும் உயிரின் நல் அறிவை எக்காலத்தும் சிதைத்துவரும் - அங்ஙனம் ஐந்தவத்தைகளைப் பொருந்தும் உயிரினது ஞானசத்தி வியாபாரத்தையுஞ் எந்நாளும் தடைசெய்து கீறித்து வரும் அதனுல்,—உறுதிபயக்கும் காரியங்கள் ஒருகாலத்தும் செய ஒட்டாது - அவ்வுயிர் நற்பிரயோசனக்காரியங்கள் ஒன்றையும் ஒருநாளும் செய்யவிடாது. அம்மட்டோ,—மறிய உயிர்க்குப் புகர் அறிவை எக்காலத்தும் வளர்ப்பிக்கும் - மேலும் அவ்வுயிர்க்கு அஞ்ஞானத்தையே எந்நாளும் வளர்வித்துவரும் அதனுல்,—இறுதிபயக்கும் காரியமே எக்காலத்தும் நிகழ்விக்கும் - தீமைபயக்குங் காரியங்களையே எந்நாளுஞ் செய்விக்கும். எ - ம். (௧௭)

தூய நினைவைத் தூமொழியைத் தூய தொழிலைத் தோற்றுது
தீய நினைவைத் தீமொழியைத் தீய தொழிலைத் தவத்தோற்று
மாய தனியா ணவப்பகையி னரட்டைத் தணிப்ப வுயிரடுக்கு
மாயை யிரண்டு திறனுகுஞ் சுத்த மசுத்த மெனமாதோ.

இ - ள். தூயநினைவைத் தூமொழியைத் தூயதொழிலைத் தோற்றுது - நல்லெண்ணத்தையும நன்மொழியையும் நற்றொழிலை தோன்றவிடாதும்,—தீய நினைவைத் தீமொழியைத் தீயதொழி

லைத் தவத்தோற்றும் - அவற்றின் மறுதலையாய தீயெண்ணத்தை யும் தீமொழியையும் தீச்செயலையும் மிகவுந் தோன்றுவிக்கும்.

இது காறும் ஆணவமலத்தினிலக்கணங் கூறி மேல் அவ்வாண வத்தின் பொல்லாங்கெல்லாந் தவிர்த்தற் கடுத்த மாயைகன்மங் களினிலக்கணங் கூறுவான் றொடங்குகின்றார்.

ஆயதனி ஆணவப்பகையின் அரட்டைத் தணிப்ப - இத்தன் மைத்தாய ஒப்பறற ஆணவமலப்பகையினாலே உளதாகும் பெரும் பொல்லாங்கை அடக்கும்பொருட்டு,—உயிர் அடுக்கும் மாயை - அவ்வுயிர் துணையாகச் சம்பந்திக்கும் மாயாமலமும்,—சுத்தம் அசுத்தம் என இரண்டு திறன் ஆகும் - சுத்தமாயையும் அசுத்த மாயையும் என இரண்டுவகைப்படும். எ - ம். (கஅ)

வேறு.

சுத்ததத் துவமோ ரைந்துநால் வாக்குந்
தொக்கவைம் பத்தொரக் கரமுங்
கொத்துறு மெண்பத் தொருபதஞ் சத்த
கோடிமா மந்திரப் பகுப்பு
மெய்த்தநா லேழா கமமிரு நூற்றே
ழுபாகமம் விரி[illegible]நால் வேத
மொய்த்தமு வாறு புராணமு மிருசாத்
திரமறு பத்துநாற் கலையும்.

மேதகு சிவமே சத்தியே நாதம்
விந்துவே சதாசிவ மகேச
பேதமே யரனென் றிவர்க்கும்விஞ் ஞான
கலரொடு பிரளயா கலர்க்குந்
தீதறு சரியை கிரியையோ கத்திற்
செறிந்தவர் தமக்குநற் றனுக்க
ளோதுறு கரண புவனபோ கமுமைங்
கலையுமற் றுயிர்ப்பது சுத்தம்.

இ - ள். சுத்தம்-அவ்விருவகை மாயையினுள்ளே சுத்தமாயை யானது—சுத்த தத்துவம் ஓர் ஐந்தும் - சிவம் சத்தி சதாசிவம் ஈசுரம் சுத்தவித்தை என்னும் ஐந்து தத்துவங்களையும்,—நால்வாக் கும் - சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என்னும் நான்கு வாக்குக்களையும்,—தொக்க ஐம்பத்தொர் அக்கரமும் - அவ்வாக் கின் காரியமாகத் தொகுக்கப்பட்ட அகரமுதல் க்ஷகரமீறாகி

ஐம்பத்தொரு அக்கரங்களையும்,—கொத்துறும் எண்பத்தொருபதம் சத்தகோடி மாமந்திரப் பகுப்பும் - அவ்வக்கரங்கள்கூடிய ஓம் வியோம வியாபி என்பதுமுதல் நமோநம: என்பது முடிவாகக் கூறப்படும் எண்பத்தொருபதங்களையும், நம: சுதா சுவாகா வௌஷட் பட் உம்பட் என்னும் அந்தங்களினாலே ஏழுகோடியாக வழங்கப்படும் மகாமந்திரபேதங்களையும்,—மெய்த்த நாலேழ் ஆகமம் இருநூற்றேழ் உபாகமம் - உண்மைபொருந்திய சிறப்புநூலாகிய காமிகம் முதல் வாதுளாந்தமாகிய இருபத்தெட்டு மூலாகமங்களையும், அவற்றின் வழித்தோன்றிய நாரதீயம்முதல் விசுவான்மகமீறாய இருநூற்றேழு உபாகமங்களையும்,—விரிந்த நால்வேதம் மொய்த்த மூவாறு புராணம் மூவிருசாத்திரம் அறுபத்துநாறகலையும் - பொதுநூலாயப் பல சாகைகளாக விரிந்த இருக்கு யசுர் சாமம் அதர்வணம் எனனும் நானகு வேதங்களையும், அவ்வவ்வேதசாகைகளின் பொருள்களை எடுத்து விளக்கும் உபப்பிருங்கணங்களாயுள்ள பிரமம் முதல் பிரமாண்ட மீறாகிய பதினெண் புராணங்களையும், சிக்ஷை வியாகரணம் சந்தசு நிருத்தம் சோதிடம் கற்பம் என்னும் ஆறுசாத்திரங்களையும், எழுத்திலக்கணம் முதல் அவத்தைப் பிரயோகமீறாகிய அறுபத்துநான்கு கலைகளையும்,—மேதகு சிவமே சத்தியே நாதம் விந்துவே சதாசிவ மகேச பேதமே அரன் என்று இவர்க்கும் - மேன்மை பொருந்திய சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவம் மகேசபேத மிருபத்தைந்து அரன் என்று கூறும் எழுவகைச் சிவபேத வடிவங்களையும் விரும்பிச் சரியையாதி நான்கு நெறியானும் வழிபட்டு அவற்றின் பயனாய சாலோகமாதி நான்கையும் அடைந்து அவ்வச்சிவ பேதங்களின் பெயருடனே கூடி எழுந்தருளியிருக்கும் அபரமுத்தர்களுக்கும்,— விஞ்ஞானகலரொடு பிரளயாகலர்க்கும் - விஞ்ஞானகலர்களுடனே பிரளயாகலர்களுக்கும்,—தீது அறு சரியை கிரியை யோகத்தில் செறிந்தவர் தமக்கும் - குற்றமற்ற உண்மைச் சரியை உண்மைக்கிரியை உண்மையோகம் என்னும் நெறிகளில் வழுவாது நின்றவர்களுக்கும்,—நல் தனுக்கள் ஓது அறு கரண புவன போகமும் ஐங்கலையும் மற்றும் உயிர்ப்பது - நல்ல திருமேனிகளையும் அவற்றிற்குச் சொல்லப்பட்ட கருவி கரணங்களையும் அவற்றிற்குரிய இடமாகிய புவனங்களையும் அவற்றால் அநுபவித்தற்குரிய போகங்களையும் அப்போகநுகர்வில் செலுத்துகின்ற சிவசத்தி நிற்றற்குரிய தானங்களாகிய சாந்தியாதீதை சாந்தி வித்தை பிரதிட்டை நிவிர்த்தி என்னும் ஐந்துகலைகளையும் பிறவற்றையும் தோன்றுவிப்பதுவாம். (௧௧) (௨௰)

காலமே நியதி கலையொடு வித்தை
கதித்தெழு மராகமே புருடன்
சாலநா லாறு தத்துவந் தன்பாற்
றரும்பிர கிருதியோ ரேழு
மாலயன் வலாரி தேவர்கண் முதலா
மன்னிய சகலருக் கெல்லாங்
கோலநற் றனுக்க ளாதிய நான்குங்
கொடுப்பதா லசுத்தமா மாயை.

இ - ள். அசுத்தமாம்மாயை - இனி அசுத்தமாயையானது,— காலம் நியதி கலையொடு வித்தை கதித்து எழும் அராகம் புருடன் சால நாலாறு தத்துவம் தன்பால் தரும் பிரகிருதி ஓர் ஏழும் - காலம் நியதி கலை வித்தை இச்சைமிக்கெழுதற்குத் துணைக்கருவியாய அராகம் புருடன் என்னுந் தத்துவங்களுடனே ஆன்மதத்துவம் இருபத்துநான்கையுந் தன்னிடத்துத் தோன்றுவிக்கும் பிரகிருதி தத்துவமுமாகிய ஏழையும்,—மால அயன் வலாரி தேவர்கள் முதலா மன்னிய சகலருக்கு எல்லாம் - திருமால் பிரமன் இந்திரன் ஏனைய தேவர்கள் முதலாக நிலைபெற்ற சகலவர்க்கத்தவர்களுக்கெல்லாம்,—கோல நல் தனுக்கள் ஆதியநான்கும் கொடுப்பது - அழகிய நல்ல தனுகரண புவனபோகமாதிய நான்கையும் தோன்றுவிப்பதுவாம். எ - ம். (உக)

மயக்கிடு மாயா காரிய மிலையேல்
வல்வினை நுகர்ச்சியு மில்லை
துயக்குமவ் வினையின் கழிவுமாங் கெய்தா
தொல்லையே சூழ்ந்தவா ணவத்தின்
முயக்குமற் றொழித லரிதரி தாகு
முதுயிர் மாயைகா ரியத்தி
னியக்குற லன்றி யிருவினை யீட்டா
திவையின்றி யவையுமெய் தாவால்.

இ - ள். மயக்கிடும் மாயாகாரியம் இலையேல் வல்வினை நுகர்ச்சியும் இல்லை - ஏகதேச அறிவைச்செய்யும் மாயாகாரியம் இல்லையாயின் வலிய இருவினைநுகர்ச்சியும் இல்லையாம்; அஃதில்லையாகவே,—துயக்கும் அவ்வினையின்கழிவும் ஆங்கு எய்தா - நுகர்ந்தே ஒழிக்கும் பகுதியினவாகிய சேர்வினைச்செய்யும் அவ்விருவினையின் நீக்கமும் ஆண்டெய்தப்பெறாது; பெறாதாகவே,—தொல்லையே சூழ்ந்த ஆணவத்தின் முயக்கும் ஒழிதல் அரிது அரிதாகும்.

அநாதியே பந்தித்த ஆணவமலத்தின் புணர்ப்பும் நீங்குதல் மிகவும் அரியதாகும்; ஆகலினவ்வுயிர்கட்கு மாயைகன்மங்களின் சம்பந்தமும் இன்றியாமையாத்துணையாக வேண்டப்படுவதாயிற்று.—மூதுயிர் மாயை காரியத்தின் இயக்குறல் அன்றி இருவினை ஈட்டாது - அநாதியாய ஆன்மாக்கள் அம்மாயை காரியத்தினாற் றொழிற்பட்ட வழியல்லது இருவினைகளையுங் காரியப்படுத்தமாட்டாவாம்;—இவையின்றி அவையும் எய்தா - இவ்விருவினையின் காரியங்களையில்லாது அம்மாயாகாரியங்களும் புணரமாட்டாவாம்; ஆகலின் அவ்விரண்டும் ஆணவமலத்தைப்போல அநாதி உள்பொருள்களேயாம்.

மலங்கள் மூன்றும் உள்பொருளாதலை "உள்ள மலமூன்றும் மாயவுகு பெருந்தேன் - வெள்ளந்தரும் பரியின் மேல்வந்த-வள்ளல் - மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக் - கருவுங்கெடும் பிறவிக்காடு. என்னுந் திருவாசகச் சுருதியானு மறிக. (உஉ)

இருவினை யென்ப மனமுதன் மூன்றி
னியற்றுறு மிதமகி தங்கள்
பெருவினைப் பயன்கள் புண்ணிய பாவம்
பேசுமிக் கருமத்தின் பயன்கண்
மருவிடு மின்பத் துன்பமா மவைதா
மாய்வினவ் விருவினை தோற்று
மொருதனு விளைப்ப மற்றொரு தனுவி
னுணப்படுங் கெடுங்கே டிலவாய்.

இ - ள். மனம் முதல் மூன்றின் இயற்றுறும் இதம் அகிதங்கள் இருவினை என்ப - ஆன்மாக்கள் மனம் வாக்குக்காயம் என்னும் மூன்றினாலும் செய்யப்படுவனவாகிய இதம் அகிதம் என்பனவே இருவினை எனப்படுவன;—பேசும் புண்ணியபாவம் பெருவினைப் பயன்கள் - சொல்லப்படுகின்ற புண்ணியபாவங்கள் அவ்விருவினையின் காரணமும் காரியமுமாயிருக்கும்.—இக்கருமத்தின் பயன்கள் மருவிடும் இன்பத்துன்பம் ஆம் - இப்புண்ணியபாவங்களின் பயன்கள் ஆன்மாக்களினிடத்தே அநுபவமாகப் பொருந்தும் இன்பமுந்துன்பமுமாம்.—அவை தாம் மாய்வின் அவ்விருவினை தோற்றும் - அவ்வின்பத்துன்பங்கள் அநுபவிக்கப் பட்டொழியும்போது மேலும் அவ்விருவினைகளும் உண்டாகும்.—ஒருதனு விளைப்பக் கெடும் கேடிலவாய் மற்றொருதனுவின் உணப்படும் - அவ்வநுபவமும் ஒருதூல உடம்பினின்றுஞ்

செய்யப்பட்டு அச்செயலழியவும் அதன் பயன் அழியாது சூக்கும மாய் நின்று வேறொரு தூலவுடம்பிலே காரியப்பட்டு அநுபவிக் கபபடும். எ - ம். (உரு)

மனமுதன் மூன்று மசைவற நின்று
வநதிடு நல்வினை பலவே
மனமுதன் மூன்று மசைவற நின்று
வந்திடுந் தீவினை பலவே
மனமுதன் மூன்றும் புடைபெயர்
வுற்று வநதிடு நல்வினை பலவே
மனமுதன் மூன்றும் புடைபெயர் வுற்று
வநதிடுந தீவினை பலவே.

இ - ள். மனம் முதல் மூன்றும் அசைவற நின்று வந்திடும் நல்வினை பலவே - மனம் வாக்குக்காயம் என்னும் மூன்றுகரணங் களும் தொழிறபடாது நிறறலினாலே வரக்கடவனவாகிய நல் வினைகளும் பலவாம்;—மனம்முதல் மூன்றும் அசைவு அற நின்று வநதிடும தீவினை பலவே - அங்ஙனமே அம்மூன்றுந தொழிற் படாது நிறறலினாலே வரக்கடவனவாகிய தீவினைகளும் பல வாம்;—மனம் முதல மூனறும் புடைபெயர் வுற்று வந்திடும் நல்வினை பலவே - இனி அம்மூன்றும் தொழிற்படுதலினாலே வரக் கடவனவாகிய நல்வினைகளும் பலவாம்;—மனம் முதல் மூன்றும் புடைபெயர் வுறறு வநதிடும் தீவினை பலவே - அங்ஙனமே அம் மூன்றுந் தொழிற்படுதலினாலே வரக்கடவனவாகிய தீவினைகளும் பலவாம். எ - ம். (உச)

தூயவா யமைக்கப் படும்வினை யெவர்க்குந்
தூயவா யிருப்பன பலவே
தீயவாய் விலக்கப் படுவன வெவர்க்குந்
தீயவா யிருப்பன பலவே
தூயவா யொருவர்க் கொருவருக் கொழியுந்
தீயவா யிருப்பவும பலவே
தீயவா யொருவர்க் கொருவருக் கடுக்குந்
தூயவா யிருப்பவும் பலவே.

இ - ள். தூயவாய் அமைக்கப்படும் வினை எவர்க்கும் தூய வாய் இருப்பன பலவே - நல்வினையாக விதிக்கப்பட்டவினை எல் லார்க்கு மொப்ப நல்வினையாக இருப்பனவும் பலவாம்;—தீய

வாய் விலக்கப்படுவன எவர்க்கும் தீயவாய் இருப்பன பலவே தீவினையாக விலக்கப்பட்டவினை எல்லார்க்கு மொப்பத் தீவினை யாக இருப்பனவும் பலவாம்;—ஒருவர்க்குத் தூயவாய் ஒருவருக்கு ஒழியும் தீயவாய் இருப்பவும் பலவே - ஒருவருக்கு நல்வினையாக விதிக்கப்பட்டவினைதாமே மற்றொருவருக்கு அந்நியமமின்றி நீக்க வேண்டிய தீவினையாக இருப்பனவும் பலவாம்;—ஒருவர்க்குத் தீயவாய் ஒருவருக்கு அடுக்கும் தூயவாய் இருப்பவும் பலவே - ஒருவருக்குத் தீவினையாக விலக்கப்பட்ட வினைதாமே மற்றொரு வருக்கு அவற்றின் வேறாய்வரும் நல்வினையாக இருப்பனவும் பல வாம். எ - ம். (உ௫)

நல்வினை திறம்பித் தீயவாய்த் தீய
நல்லவாய் வருபவு முளவே
வல்வினை மெலிய வினைகளாய் மெலிய
வலியவாய் வருபவு முளவே
நல்வினை செயுமபோ ததன்பயன் போலத்
தீயவு நணுகலு முளவே
புல்வினை செயும்போ ததன்பயன் போல
நல்லவும் புணர்தலு முளவே.

இ - ள். நல்வினை திறம்பித் தீயவாய்த் தீய நல்லவாய்வரு பவும் உளவே - நல்வினை என்று செய்யும் வினையே மாறித் தீவினையாகவும் தீவினை என்று செய்யும் வினையே மாறி நல்வினை யாகவும் வருவனவும் பல உளவாம்;—வல்வினை மெலியவினை களாய மெலிய வலியவாய் வருபவும் உளவே - செயற்கரியவினை கள் செயற்கெளிய வினைகளாகவும் செயற்கெளியவினைகள் செயற் கரியவினைகளாகவும் மாறி வருவனவும பல உளவாம;—நல்வினை செயும்போது அதன் பயன்போலத் தீயவும் நணுகலும் உளவே - நல்வினையைச் செய்யுங்கால் அவ்வினையின் பயன்போலத் தீவி னைப்பயன் வருதலும் பலவுளவாம்;—புல்வினை செயும்போது அதன் பயன்போல நல்லவும் புணர்தலும் உளவே - தீவினையைச் செய்யுங்கால் அவ்வினையின் பயன்போல நல்வினைப்பயன் வருத லும் பல உளவாம். எ - ம். (உ௬)

புரிதரு முறையிற் பிறழ்ந்துயிர் தெய்வம்
பூதமென் றிவற்றினு ளொன்றான்
மருவுழி விழைந்த விழைந்தில விழைந்த
வன்றிவே றுவன வென்னத்

திரிவிதப் படுவ பயனிழி வினைக
டீர்வுசெய் யினுநுகர்ந் தன்றி
யிரிதரா முழுது மிதுவிலை யானு
மியையும்பண் ணுமையும் பலிக்கும்.

இ - ள். பயன்-இனி, அவ்விருவினைப்பயன்களும்,—புரிதரு முறையிற் பிறழ்ந்து - அநுபவத்திறகு வரும்போது பக்குவபேதத்தால் செடதமுறைமையினின்றும் மாறுபட்டு,—உயிர் தெயவம் பூதம் என்று இவற்றினுள் ஒன்றால் மருவுழி - ஆதியான்மிகம் ஆதிதெயவீகம் ஆதி பௌதிகம் என்னும் இவ்வாயில்களினொன்றினானே வரும்போது,—விழைந்த விழைந்தில விழைந்தவன்றி வேறுவன என்னத் திரிவிதபபடுவ - அவ்வான்மாக்கள விரும்பினவும் விரும்பாதனவும் விருமபினவன்றி வேறுவனவுமாக மூன்றுவகைப்பட்டு வருவனவாம்;—இழிவினைகள் தீர்வுசெயயினும் நுகர்ந்து அன்றி முழுதும் இரிதரா - தீவினைகளாகிய அதிபாதகாதிகளின் பயனகள் அநுபவித்தாலன்றி முழுவதும் நீஙகா;—இது விலையானும இயையும் - இபபிராயச்சித்தம தானேயன்றி விலைகொடுத்துப் பிறராலுஞ செயயப்படும்;—பண்ணுமையும் பலிக்கும - ஒரோவழி இவ்விருவகையுஞ் செயயாதிருககவும் நீங்குவதும் உண்டு. எ - ம். (உஎ)

இன்பமே பயக்கும் புண்ணிய மெல்லா
மிழிதரு பாவங்க ளெல்லாந்
துன்பமே பயக்கும் புண்ணிய பாவந்
தொக்கதம் பயன்றரா தொழியா
கொன்படு வினைக ளொழியிரு வினையுங்
குலாவுறு புண்ணிய பாவ
வன்புறு பயனை யபாயன் போல
வழங்குறு தொழிவகை யிலையே.

இ - ள். புணணியமெலலாம் இன்பமேபயக்கும் - புண்ணியங்களெல்லாம் இனபத்தையே கொடுக்கும்;—இழிதரு பாவங்கள் எல்லாந் துன்பமே பயக்கும் - இழிக்கப்படும் பாவஙகளெல்லாம் துன்பத்தையேகொடுக்கும்,—புணணிய பாவம் தொக்க தம் பயன் தராதொழியா - புண்ணியம் பாவம் என்னும் இருவினைகளும் தமக்கெனத் தொகை செய்யப்பட்ட பயனாய இன்பத்துன்பங்களைத் தராதொழியாவாம்;—கொன்படு வினைகள் ஒழி இருவினையும் - அஞ்சத்தகும் இவ்விருவினைகளையும் ஒழிக்கின்ற சிவ

நல்வினை தீவினைகளும்,—குளாவுறு புண்ணியபாவ வன்புறு பயனை அப்பயன்போல வழங்குறாது ஒழிவகை இலை - தம்பயனாகப்பொருந்தும் புண்ணியபாவங்களை வலிய பயனாய இன்பத் துன்பங்களையும் அப்பசு விருவினைப் பயன்போலத் தாராதே நீங்கும் வகையும் இல்லையாம். எ - ம்.

இதுகாறும் மாயையிலக்கணமும் இருவினையிலக்கணமுங் கூறி மேல் அவ்வினைத்தொடரறுத்துய்தற்கு உபாயங் கூறுவான் றொடங்குகின்றார். (௨௮)

ஈண்டுநாற் பிறப்பி னெழுவகைத் தோற்றத்
தெண்பத்து நான்கெனு மிலக்க
மாண்டபல் பவத்திற் பன்முறை வினையான்
மறிதரு முயிர்களை யெடுப்ப
வாண்டரு ளமல னாதியி னுலக
மாக்குழி யருந்தலந் தீர்த்தங்
காண்டகு மூர்த்தி யென்னமூன் றுருவாய்க்
கண்ணக னுலகெலாங் கதித்து.

இ - ள். ஈண்டு நாற்பிறப்பின் எழுவகைத் தோற்றத்து - இவ்விடத்து அண்டசம் சுவேதசம் உற்பிச்சம் சராயுசம என்னும் நால்வகைப் பிறப்பினாலே மனிதர் தேவர் விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வன தாவரம் எனனும் எழுவகை வடிவ பேதத்தினை யுடைய,—எண்பத்துநான்கு இலக்கம் எனும மாண்ட பல்பவத்தின் மறிதரும் உயிர்களை - எண்பத்துநான்கிலக்கம் எனனும் தொகை மிக்க பலவேறு பிறவிகளிலே பலதரமும் இருவினைக் கீடாக மாறி மாறிப் பிறந்திறந்துழலும ஆன்மாக்களை,--அருள அமலன் ஆண்டு எடுப்ப - அநுக்கிரகஞ்செயயும் நிருமலசிவனார் அச் சுழலினின்றுங் கருணைக்கையினாலே எடுத்தற்பொருட்டு,—அநாதியில உலகம் ஆக்குழி அரும் தலம் தீர்த்தம் காண்டகு மூர்த்தி என்ன மூன்றுருவாயக் கண்ணகன் உலகு எலாம் கதித்து - அநாதியே இப்பிரபஞ்சத்தைச் சிருட்டிக்குமபொழுது அரிய தலம் தீர்த்தம் காணத்தக்க மூர்த்தி எனனும் மூன்று வடிவங்களாக இடமகன்ற உலகமெல்லாம் தமது சத்தியினாலே வெளிவந்து தோன்றி. எ - ம். (௨௯)

அறிதரா வகையிற் புண்ணிய முற்ற
வடுத்தறி தரப்பணித் ததற்பிற்
செறிதரு மகத்துச் சரியைமுன் னான்கு
நிகழ்தர மென்மேலச் செலுத்தி

நெறிதரு முண்மைச் சரியைமுன் மூன்று
நிரப்பியே தன்வலி தேய்ந்து
பறிமல பாகம் பயிற்றுபு சத்தி
பதித்திரு வினைச்சம மாக்கி.

இ - ள். அறிதராவகையிற் புண்ணியம் முற்ற அடுத்து - அவ்வினைத் தொடருட்பட்ட அவ்வான்மாக்கள் அறியாதவகையி னாலே சிவபுண்ணியத்தைச் செயதடையும்படி கூட்டிவைத்து,— அதன்பின் அறிதரப்பணித்து - அப்புண்ணிய விசேடத்தினாலே அதன்பின்னர் அச்சிவபுண்ணியத்தை அறிந்து செயயும்படி செய் வித்து,—(அதன்பின்) செறிதரும் அகத்துச் சரியைமுன் நானகும் திகழ்தர மெல்மெலச் செலுத்தி - அதன்பின்னர் அதனால வருதற் குரிய அகச்சமயமாறினுக்கும் பொதுவாகிய உபாயச் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நாற்பாதங்களையும் அறிந் தொழுகுமாறு மெல்ல மெல்ல ஒழுகுவித்து,—நெறிதரும் உண் மைச் சரியை முன் மூன்றும் நிரபபி - அவ்வொழுக்கநெறி நின்று ரடைதற்குரிய சித்தாந்த சைவத்துட் கூறிய சிறப்பாகிய உண் மைச் சரியை கிரியை யோகம் மூன்றனையும் முறையே ஒழுகு வித்து,—தன்வலி தேய்நது பறிமலபாகம் பயிற்றுபு சத்தி பதித்து இருவினைச் சமம் ஆக்கி - அச்சிறப்பியல்பு பொருந்திய தவத்தி னாலே தன்சத்தி குன்றி நீங்குவதாகிய ஆணவமல பரிபாகம வரச்செய்து அதனாலடையத்தக்க சத்தி நிபாதத்தை விளக்கி அவ் விளக்கத்தினாலே இருவினையும் சமமாக அறிவிலே ஒப்பக் காணு மாறுசெய்து. எ - ம். (௩௦)

பாசமும் பசுவுங் கீழுற மேலாம்
பசுபதி நீருறு கூர்ப்புத்
தேசுறத் திரண்டா லெனவருட் குருவாய்த்
திருவுரு வெடுத்தெழுந் தருளி
மாசறு மனுக்கள் பதங்களக் கரங்கள்
வதிபுவ னங்கடத் துவங்க
ளாசறு கலைக ளென்னுமோ ராறு
மரிறபத் தூய்மைசெய் தருளி.

இ - ள். பாசமும் பசுவும் கீழுற மேலாம் பசுபதி - பாச ஞானமும் பசுஞானமும் கீழ்ப்பட்டு வியாப்பியமாயடங்க அவற் றின் மேற்பட்டு வியாபகமாய் விளங்கும் ஞானரூபியாகிய ஆன்ம நாயகர்,—நீர் உறு கூர்ப்புத்தேசுறத்திரண்டால் என்ன - நீரிற்

ரேன்றாது பொருந்திய கூர்ப்பென்னுஞ்சுவை பிரகாசம் பொருந்தத் திரண்டு தோன்றினாற்போல,—அருள் குருவாய்த் திருவுரு எடுத்து எழுந்தருளி - தமது அருளே திருமேனியாக ஞானசாரியராயத் திருவுருக்கொண்டெழுந்தருளி,—மாசு அறு மனுக்கள் பதங்கள் அக்கரங்கள் வதி புவனங்கள் தத்துவங்கள் ஆசு அறு கலைகள் என்னும் ஓர் ஆறும் அரில்தபத் தூயமை செய்தருளி - ஆணவமல மாசைக்கழுவுதற்பொருட்டுப் பொருந்திய மந்திராத்துவா பதாத்துவா வர்ணாத்துவா தங்குதற்கிடனாகிய புவனாத்துவா தத்துவாத்துவா குற்றமற்ற கலாத்துவா என்னும் ஆறத்துவாக்களையும் அவற்றிடையே அவ்வான்மா அநுபவிக்கக்கடவனவாகக்கிடந்த வினைக்குற்ற மனைத்தும் நீங்கும்படி சுத்தி செய்தலாகிய நிருவாண தீக்கையைச் செயதருளி. எ - ம்.

ஆசறு கலைகளென்னும் ஒராறும் தூயமைசெய்து அரில் தப பாசமும் பசுவும் கீழற அருளி எனக் கூட்டி உரைத்தலுமொன்று.

இதுகாறு மவ்வினைத தொடரறுக்கும் வகை கூறி மேல் அத தொடரறற ஆன்மா அடைதறகுரிய சாதனமாகிய உண்மை ஞானத்தைத் தொகையின் வைத்துணர்த்துகின்றார். (௫௧)

கூட்டமே பொதுவே தன்னியல் பென்னக்
குறித்திடு முத்திற வுணர்வா
லூட்டுமுப் பொருளு மொன்பது தரமா
நாடிடப் படுமவை யெல்லாங்
காட்டுபு காட்டுந் தானுங்கா ணறிவுங்
கதிர்விழி யெனக்கலப் பாகு
மீட்டரும் பயனுந் தெரிந்தறி னழுத்து
மிவற்றையுங் கிளக்குதுங் கேட்டி.

இ - ள். கூட்டமே பொதுவே தன்னியல்பு என்னக் குறித்திடும் முத்திற உணர்வால - அத்தகைய சுத்தியையுறற ஆன்மாக்கள தொகையாகவே பெயர் சாதி குணங் கன்மம் பொருள் என்பவற்றைப் பகுத்துணராது இஃதொன்று தோன்றுநின்றதென்றுணரும் நிருவிகற்பக்காட்சியும், பொதுவகையானே அங்ஙனங்கண்டவற்றை ஒன்றிற்றுணிவு பிறவாது அதுவோ இதுவோ என்றுணரும் இரட்டுறுகாட்சியும், சிறப்புவகையானே பெயர் முதலிய வைந்தனையுமுணரும் தெளிவுகாட்சியும் என்று குறிக்கப்படுகின்ற மூவகைய ஞானசத்தியின்றொழிற் பாட்டினாலே,—நாட்டும் முப்பொருளும் ஒன்பதுதரமா நாடிடப்படும் - சித்தாந்த உணர்வால் வலியுறுத்தப்படும் மூன்று பொருள்களையும் அவற்றுள் தனித்தனி

ஒவ்வொன்றும் மும்முறை மும்முறையாக ஒன்பதுதரம் ஆராய்ந்துணரப்படும்;—அவை எல்லாம் காட்டுந்தானும் காட்டுபு காண் அறிவுங் கதிர்விழி எனக் கலப்பு ஆகும் - அவ்வுணர்வு பேதங்களையெல்லாம் உணர்ந்துணர்த்துஞ் சிவஞானமும் உணர்த்தவுணரும் ஆன்மஞானமும் சூரியனொளியுங் கண்ணொளியும்போலக் கலந்த சுத்தாத்துவிதமாயிருக்கும்;—ஈட்டரும் பயனும் தெரித்து அதின் அழுத்தும் இவற்றையும் விளக்குதும் கேட்டி - தேடுதற்கரிய பெரும்பயனாகிய சிவப்பேற்றையும் உணர்த்தி அதிலே அழுத்தி அநுபவிப்பிப்பதாகிய சிவபோகமுமென்னும் இவ்வீரைந்து காரியங்களையும் தெளிவுபெற உபதேசிப்பாம் நந்தியே கேட்பாயாக. எ - ம்.

என்றிங்ஙனந் தெளிந்தார் தமையுந் தெருட்டுதல் சான்ற தெளிவினராகிய கந்த பரமாசாரியர் தசகாரிய வகையின்வைத்து உபதேசிப்பாராயினார். (௧௨)

மண்முத லாகச் சிவமுடி வாக
மலிதரு தத்துவ மெல்லா
நண்ணிய தொழிலைத் தனித்தனி காண்ட
னவைதரு மதனுரு வாகுந்
திண்ணிய வவைதாஞ் சடமெனக் காண்ட
றெரிசன மிடையிவை நீங்கு
முண்மையைக் காண்டல் சுத்தியா மூன்று
முற்றன பாசத்தின் மாட்டு.

இ - ள். மண் முதலாகச் சிவம் முடிவாக மலிதரு தத்துவ மெல்லாம் நண்ணிய தொழிலைத் தனித்தனி காண்டல் நவைதரும் அதன் உருவாகும் - பிருதுவிதத்துவ முதலாகச் சிவதத்துவமிறுதியாகப்பொருந்திய முப்பத்தாறு தத்துவங்களும் ஆன்மாவாகிய தன்னோடுங் கூடியவிடத்துப் பொருந்திய தொழிற்பாட்டையெல்லாம் அவ்வத் தத்துவங்களினிடத்தும் வேறுவேறாக இஃது இஃது இதனை இதனைச்செய்கின்றதெனத் தன்னின் வேறாய்வைத்து ஆன்ம சிற்சத்தியுணர்தல் குற்றத்தைச்செய்யும் அத்தத்துவரூபமாகும்; திண்ணிய அவை தாம் சடமெனக்காண்டல் தெரிசனம் - வலியமைந்த அத்தத்துவங்களெல்லாம் பிரேரிப்பானையின்றித் தொழிற்படுதலின்மையாற் சடப்பொருளென்று ஆன்மசிற்சத்தியுணர்தல் தத்துவதரிசனமாகும்;—இவை இடைநீங்கும் உண்மையைக் காண்டல் சுத்தியாம் - இத்தத்துவங்கள் ஒருபொருள் போற்றோன்றி நின்று இடையே தன்னின்னீங்கி தம்முதற்காரண

மாகிய மாயையிலே அடைவே ஒடுங்குமுண்மையைத் தன்வியாபகத்தைத் தலைப்பட்ட ஆன்ம சிற்சத்தியுணர்தல் தத்துவ சுத்தியாகும்;—பாசத்தின் மாட்டு மூன்றும் உற்றன - பாசபதார்த்தத்தின் கண்ணே ஈண்டுக் கூறிய உருவம் தரிசனம் சுத்தி என்னும் மூன்று காரியமும் பொருந்தினவாம். எ - ம். (ருரு)

இன்னணம் பாச மகறலு முறவு
மிகலுறு பகையுநா டாது
மன்னிய தானே முதலென நிற்றன்
மாசுயிர்க் குருவிது காறு
மன்னியத் தழுங்கு நினக்குயி ரருளென்
றகற்றவவ் வருளினான் முதலென்
றுன்னுதல் காட்சி யுதுகொடு செயநேர்ந்
தொழிந்தரு ளாய்விடல் சுத்தி.

இ - ள். இன்னணம பாசம் அகறலும் - இவ்வாறு தத்துவ சுத்தியாதலும்,—உறவும் இகலுறு பகையும் நாடாது - உடங்குப் புணர்ந்திருந்துணர்த்தும் அருளாகிய உறவையும் தம்சத்தி வலியினாலே பொல்லாங்கென்பவை யெல்லாஞ்செய்த தம்மலப்பகையையும் அறியமாட்டாது,—மன்னியதானே முதல் என நிற்றல் மாசு உயிர்க்கு உரு - கேவல சகலங்களிற் பொருந்தியிருந்த ஆன்மாத்தானே தத்துவங்களினீங்கியமாத்திரத்தில் தன்னைப் பிரமப் பொருளென்றுணர்ந்து நிற்றல் மலமுடைய ஆன்மாவுக்கு உருவமாகும்;—இது காறும் அன்னியத்து அழுங்கும் நினக்கு உயிர் அருள் என்று அகற்ற அவ்வருளின நான் முதல் என்று உன்னுதல் காட்சி - இச்சுத்தாவத்தையை அடையும்வரையும் நின்னின் வேறாகிய பாசத்தொகுதியோடு அதுவதுவாயழுந்தியிருந்த நினக்கு உயிராயிருந்துணர்த்தி வந்தது அருள என்றுணர்த்தி அவ்வகம்பிரமத்தை நீக்க அவ்வருளைப்போல நானும் சிவசமமேயென்று முனைத்தல் ஆன்மதரிசனமாகும்;—உது கொடு செய நேர்ந்து அருளாய்விடல் சுத்தி - உந்தவருளின்குணங்களைத் தன்குணமாகக் கொண்டு ஐந்தொழிலையுஞ் செய்யவெண்ணிப் பின்னரும் அவ்வருடானே பெருங்கருணையினாலே என் செயலை நின்செயலாக்கொள்ளுமது நன்றென இழித்துணர்த்தியவழி மீட்டுமம் முனைப்பை விட்டுத் தவண்டடங்கி அவ்வருளிலேயே அழுந்திவிடுதல் ஆன்ம சுத்தியாகும். எ - ம். (ருச)

மேதகு மருளான் முதலென நினைத்தல்
விழுத்தகு மருளினா லதுசெய்

தீதறு தொழில்கள் செய்வலென் றெண்ணுஞ்
 செயலற றிகழருண் மயமாய்ப் -
போதமுற் றொடுக்க லென்னமுன் கிளந்து
 போந்தவற் றடங்கிய மூன்று
மாதித னுருவந் தெரிசனம் யோகமா
 மினிப் போகமு மருள்வாம்.

இ - ள். மேதகும் அருளான் முதல் என நினைத்தல் (அறல்) - மேன்மைபொருந்திய அருளினாலே ஆன்மா தன்னையே பிரமமாகக் கருதுகின்றதழி அந்நிலை மாறும்படி உணரநிற்பதும்,—விழுத்தகும் அருளினால் அது செய் தீது அறு தொழில்கள் செய்வல் என்று எண்ணுஞ் செயல் அறல்,—அவ்வுயர்வாகிய அருளினாலே அவ்வருள்செயயுங் குற்றமற்ற ஐந்தொழில்களையும் யானே செய்வேனென்று எண்ணி மீட்டுமெவ்வருளான் உண்மையுணர்ந்து அவவெண்ணந் துவண்டடங்குமிடத் துணரநிறபதும்,—திகழ் அருள்மயமாயப் போதம் முற்றொடுக்கல் என்ன - பிரகாசிக்கின்ற அவவருளின்மயமேயாகித்தன்போத முழுவதும் சிவபோதமாய் அடங்கிநிறகும் அநநிலையில் உணரநிறபதும் என்று,—முனகிளாதுபோந்தவற்று அடங்கிய மூன்றும் ஆதி தன் உருவம் தெரிசனம் யோகமாம் - முன்னரே கூறிப்போந்த ஆனமதரிசனம் ஆனமசுத்தி ஆன்மலாபம் என்று சொல்லிப் போநதவறறொடும் உடனிகழ்வாய் விளங்கிய மூவகையுணர்வும் முறையே சிவரூபமும் சிவதரிசனமும் சிவயோகமுமாகும் அதுநிற்க,—இனிப் போகமும் அருள்வாம் - இனிச் சிவபோகவியல்பையும் உனக்கு உபதேசிப்பாம. எ - ம. (௩௫)

ஒன்றுறு மதனா லொருபொரு ளாகா
 திரண்டினால் வேறுமா காது
தோன்றுறு நிலையே நிலையதாய்ச் சேர்ந்து
 துன்னலுந் துன்னுறா மையுமற்
றன்றுமா னவத்தி னழுந்தியாங் கறிவா
 யறிவினு ளழுந்தியங் கறிவு
பொன்றியும் பொன்றா தவசமா யின்பப்
 புணரிவாய் மடுப்பது போகம்.

இ - ள். ஒன்றுறும் அதனால் ஒருபொருள் ஆகாது - அவ்வான்மாச் சிவத்தோடும் ஒன்றாய் யோகமுற்றவதனாலே நீரும் நீரும் கலந்தாற்போல ஒரேபொருளாயும் விடாது,—இரண்டி

னால் வேறும் ஆகாது - பொருட்டன்மை பேதமுற்றவதனாலே (இருளும் ஒளியும்போல) வேறாயும்விடாது,—தோன்றாநிலையே நிலையதாய்ச் சேர்ந்து - அநாதி அத்துவிதநிலையே நிலையாமாறு பெற்று,—தன்னலும் தன்னுருமையும் அற்று - அதனாலே வந்து சேர்தலும் வந்து சேராமையுமின்றி,—அன்றும் ஆணவத்தின் அழுந்தியாங்கு அறிவாய் அறிவினுள் அழுந்தி - அநாதி கேவலத்தும் ஆணவமலத்திலே அவ்விருள்மயமாயக் கலந்தாற்போல இம்முத்திக்காலத்தும் ஞானமேமயமாய அச்சிவஞானத்துள்ளே அழுந்தி,—அங்கு அறிவு பொன்றியும் பொன்றாது - அழுந்துமதனாலே அவ்விடத்து ஆன்மபோதமாகிய சுட்டுணர்வு நீங்கப்பெறினும் சிவஞானத்தானே சிவத்தையுணரும் உண்மையுணர்வு நிலை பெற்று,—அவசமாய இன்பப்புணரிவாய மடுப்பது போகம் - அவ்வுண்மை யுணர்வும் அச்சிவத்தினவசமேயாய்ப் பேரின்ப சாகரத்தைத் தனதனுபவமாகவே அநுபவிப்பது சிவபோகமாகும். எ - ம். (௩௬)

இந்நிலை தனக்கு மேலொரு நிலையு
மில்லையீ தொழிதரா தென்று
மன்னுயிர் மற்றை யொன்பதுங் கண்டு
மாற்றுமால் வகுத்தவீ ரைந்துந்
துன்னிய வுண்மை ஞானமென் றுரைப்ப
சுத்தவைந் தவத்தையு ளடங்கும்
பின்னிலை நான்கி னொன்பது மடங்கும்
பெருநிலை போகமே யடங்கும்.

இ - ள். இந்நிலை தனக்கு மேல் ஒருநிலையும் இல்லை - இச்சிவபோக நிலைக்குமேலே ஆன்மா பெறத்தக்கது யாதோர் நிலையுமில்லை,—என்றும் மன்னுயிர் ஈது ஒழிதராது - எக்காலத்தும் இச்சிவபோகமடைந்த முத்தான்மா இந்நிலையை விட்டு நீங்கவே மாட்டாது,—மற்றை ஒன்பதும் கண்டு மாற்றும் - ஏனைய ஒன்பதுகாரியத்தையு முணர்ந்த ஆன்மா ஒரோவழி கீழும் மேலுமாக மாறி மாறி யுணர்தலும் உண்டு,—வகுத்த ஈர் ஐந்தும் துன்னிய உண்மை ஞானம் என்று உரைப்ப - இங்ஙனம் வகுத்துக்கூறிய தசகாரியத்தையும் உண்மைஞானமென்று சிவசாத்திர உணர்வான் நிட்டை கூடப்பெற்ற சிவாசாரியர்கள் போதிப்பார்கள்,—ஐந்து சுத்த அவத்தையுள் அடங்கும் - இவ்வீரைந்து காரியமும் ஓரைந்து சுத்தாவத்தை யுள்ளுமடங்கும்; அடங்கு மாறியாங்ஙன மெனின்,—பின்னிலை நான்கின் ஒன்பதும் அடங்கும் - பிறபட்ட

சுத்தசாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் என்னும் நான்கவத்தைகளிலும் தத்துவரூபம் முதல் சிவயோகமீறாகிய ஒன்பது காரியமும் அடங்கும்,—பெருநிலைபோகமே அடங்கும் - முற்பட்ட துரியாதீதத்திலே சிவபோகம் ஒன்றுமே அடங்கும். எ-ம்.

இதுகாறும் தசகாரிய உண்மைஞான முணர்த்தி மேலிந்நிலையடைந்தோர் செயலையும் உணர்த்துவான்றொடங்கினார். (௩௭)

இரிதரா வுடலின் வினைவரும் வருங்கா
லிலகிய சாக்கிரா தீதந்
துரியமென் றிரண்டி னின்றிடி னேறா
சுழுத்திசொப் பனத்திற்சாக் கிரத்தின்
மருவினும் வளருஞ் சகலத்தின் விரவின்
வளர்திறங் கிளப்பதென் மீட்டும்
பெருநிலை யழுந்த வவையெலா மழியும்
பின்புபே துறுத்துவ தின்றே.

இ - ள். இரிதரா உடலின் வினைவரும் - இவ்வுண்மைஞானத்தை அடைந்தோருக்கும் எடுத்த உடம்பினளவாய முகந்துகொண்ட பிராரத்தவினை அநுபவத்திற்கே வரும்,—வருங்கால் இலகிய சாக்கிராதீதம் துரியம் என்று இரண்டின் நின்றிடின் ஏறா-அவ்வினை அநுபவமாகவரும்பொழுது பூரண ஞானம் விளங்கிய துரியாதீதம் துரியம் என்னுமிரண்டவத்தைகளிலும் நின்றால் அவ்வநுபவத்தால் வரக்கடவதாய ஆகாமியவினை ஏறாது,—சுழுத்தி சொப்பனத்தில் சாக்கிரத்தில் மருவினும் வளரும் - சுத்த சுழுத்தி சொப்பனம் சாக்கிரம் என்னும் அவத்தைகளைப் பொருந்தினும் அவ்வாகாமியம் ஏறும்,—சகலத்தின் விரவின் வளர் திறம் கிளப்பதென் - சகல சாக்கிராவத்தை யாதி யவற்றிலே பொருந்தின அவ்வாகாமியமேறு மென்பதைப் பகரவும் வேண்டுமோ?,—மீட்டும் பெருநிலை அழுந்த அவையெலாம் அழியும் - பின்னரும் தந்நிலை தவறியதுணர்ந்து அவ்வவத்தைகளினீங்கித் துரியாதீதந்தழுவியழுந்தப்பெறின் அவ்வவத்தைகளினீட்டிய வினையெல்லாம் "விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழல்—உண்ணிய புகிலவை யொன்றுமில்லையா" மாறு அழிந்தொழியும்,—பின்பு பேதுறுத்துவதின்று - அதன் பின்பு வருந்த வருத்துவது யாதுமே இல்லை. எ - ம். (௩௮)

மருண்மல மொழிய மாயையும் வினையும்
வயங்கரு ளாகியே நிற்கு

1266



மிருண்மல மூலகோர்க் கிரித்திட வவற்றை
யெம்பிரா னென்றுகொண் டருளுஞ்
சுருதியான் மொழியாற் சுவானுபூ திகத்தைத்
தோற்றிய வமலனை யாங்கு
மிருபகுப் பிறநின் றேத்தியின் புறுப
வினையசன் மார்க்கமுற் றவரே.

இ - ள். மருள் மலம் ஒழிய - மயக்கந் தருவதாகிய ஆணவ மலம் நீங்கவே,—மாயையும் வினையும் வயங்கு அருளாகியே நிற்கும் - மாயாமலமும் கருமமலமும் அவ்வுண்மை ஞானிகட்குப் பிரகாசிக்கின்ற அருண்மயமாகியே நிலைபெறும்,—அவற்றை உலகோர்க்கு இருள் மலம் இரித்திட எம்பிரான் என்றுகொண்டருளும் - அம்மாயை கன்மங்களைப் பெத்தான்மாக்களின் ஆணவமலத்தை நீக்கற்பொருட்டுச் சிவபெருமான் சுவீகரித்துக்கொண்டருளுவர்;—சுருதியான் மொழியான் சுவானுபூதிகத்தைத் தோற்றிய அமலனை - தெளிவுபதேசகலையினாலும் தெளிந்த வாக்கினாலும் சிவானுபவர் தமதனுபவமாக அனுபவிக்கும் சிவபோகத்தை விளக்கியருளிய நிருமலராகிய சிவகுருவை,—இனைய சன்மார்க்கம் உற்றவர்-இத்தன்மைத்தாய சிவஞானத்தைப் பெற்றுச் சீவன்முத்தி பரமுத்தி நிலையைத் தலைப்பட்டோர்,—இருபகுப்பு இற யாங்கும் ஏத்தி நின்று இன்புறுப-அகம்புறமென்னாது எவ்விடத்தும் சிவன் வேற்றமொன்றுமேகண்டு தோத்திரித்து வழிபட்டு நின்று இன்ப மிக்கடைவார்கள். எ - ம். (௫௯)

என்றுவேற் றடக்கைச் செம்மலார் பெத்த
முத்தியென் றிரண்டினுந் தன்மை
யொன்றலா தின்மை பொருடொறுங் காட்டி
யுரைத்தரு ளறிவெலாங் கேட்டு
நன்றுசிந் தித்துத் தெளிந்துட னிட்டை
நண்ணிய நந்திமா தவத்தோன்
துன்னிய மகிழ்ச்சி மீக்கொள வாண்ட
தோன்றருள் பழிச்சுத லுற்றான்.

இ-ள். என்று-உண்மை ஞானமும் அஃதணைந்தோர் தன்மையும் இத்தன்மையவென்று,—வேல் தடக்கைச் செம்மலார் - ஞான சத்திதரராகிய கந்த பரமாசாரியர்,—பெத்தம் முத்தி எனலும் இரண்டினும் தன்மை ஒன்று அலாது இன்மை பொருள் தொறும் காட்டி - பந்தம் வீடெனனும் ஈரிடத்தும் முப்பொருள்களின்றனு

மையும் ஒரே பெற்றித்தேயன்றி ஏனைச் சமயவாதிகளைப்போன்று
முன்னொடு பின் முரணிக்கூறுந் தன்மையின்மையை ஒவ்வொரு
பொருளினும் உத்தேசம் இலக்கணம் பரீக்ஷை என்னும் மூவகை
யானும் நன்குணர்த்தி,—உரைத்தருள் அறிவு எலாம் - உபதேசித்
தருளிய உண்மை ஞானங்களையெல்லாம்,—கேட்டு நன்று சிந்தித்
துத் தெளிந்து உடன் நிட்டை நண்ணிய நந்தி மாதவத்தோன் -
முறையாற் கேட்டுக் கேட்டவாறே ஐயந்திரிவின்றி நன்றாகச் சிந்
தித்து அங்ஙனமேதெளிந்து உடனே நிட்டை கை வரப்பெற்ற
மாதவ சிரேட்டராகிய நந்திதேவர்,--துன்றிய மகிழ்ச்சி மீக்கொள
ஆண்டதோன்றல் தாள்பழிச்சுதல் உற்றான் - தாமடைந்த சிவா
னந்தம் மேலிடமேலிடத் தம்மை அடிமையாகக் கொண்ட சிவா
சாரிய ரத்தினமாகிய சிவகுருநாதருடைய திருவடிகளைத் தோத்
திரஞ் செய்யத்தொடங்கினார். எ - ம். (௪௦)

வேறு.

அருளிறை தோத்திரம்.

இயல்புவே றுடைமை கற்றோ ரெண்ணிய பலவே றாகப்
பயில்வுறு முலக மெல்லாம பாற்றியு மீட்டு மாயோ
னயனொடுந் தோற்றிப் போற்றி யடர்மல வாற்றல் காற்றுஞ்
செயறலை நின்ற வின்பத் திருவுரு முதன்மை போற்றி.

இ - ள். கற்றோர் இயல்பு வேறு உடைமை எண்ணிய - சிவா
கம நூன்முறையே கேட்டுத் தெளிந்தோர் தம்மிலக்கணம் அவய
வ பகுப்புடைமையானே இல்லாநெறித்தெனத் துணிந்தபடி,—
பலவேறாகப பயிலவுறும் உலகம் எல்லாம் பாற்றியும் - பற்பல
வெவ்வேறு அவயவங்களாகக் காணப்படும் பிரபஞ்சமனைத்தையும்
ஒடுக்கியும்,—மீட்டும் மாயோன் அயனொடும் தோற்றிப் போற்றி -
பின்னரும் அப்பிரபஞ்சத்தை ஒடுக்கிய தாமே விண்டு பிரமரு
டனே தோற்றுவித்தும் போற்று வித்தும்,—அடர்மல ஆற்றல்
காற்றும் - ஆன்மாக்களின் சத்தியோடு சமவியாத்தியாகக் கலந்து
பம்பிய ஆணவமலத்தின் வலிய சத்தியைக் கெடுக்கும்,—தலை
செயல் நின்ற இன்பத் திரு உரு முதன்மைபோற்றி - தலை
யாய அநுக்கிரகத்தொழிலை மேற்கொண்ட பேரின்பமயமான
சிவாசாரியத் திருவடிவத்தினிறைமைத்தன்மை போற்றப்படு
வது. எ - ம். (௪௧)

ஒண்குண மில்லா நாயே னுறுமட மன்றி யில்லாத்
திண்குண மலத்திற் பண்டு சிவனுற வாளா நின்ற

வெண்குணத் தலைவன் மற்றுங் கிரும்பரு வத்தை யெய்த்து
வண்கலை யாதி தந்த வரம்பில்வள் ளன்மை போற்றி.

இ - ள். ஒண் குணம் இல்லா நாயேன் - சார்ந்ததன்வண்ணமேயன்றித் தனக்கென நல்லறிவற்ற நாய்போன்ற அடியேன்,—உறு மடம் அன்றி இல்லாத் திண்குணமலத்திற பண்டு சிவணுற - பொருந்துவதொரு அறியாமையேயனறி வேறோர் குணமுமில்லாத வலிய சத்தியையுடைய ஆணவமலத்தினலே அனாதியே பந்திக்கப்பட,—எண்குணம் ஆளாநின்ற தலைவன் - அளவிலாற்றல் முதலிய மங்கலகுணம் எட்டையும் இயல்பாகவே யுடைய முத்துக்குமாரனார்,—ஆங்கு இரும்பருவத்தை ஏய்த்து - அவ்வனாதிகேவலத்திலே பெரியதோர் பக்குவம வரச்செயது,—வண்கலை ஆதிதந்த வரம்பில வள்ளன்மைபோற்றி - வளம்பொருந்திய கலைமுதலிய தத்துவங்களைத் தந்து அடியேனது அறிவிச்சை தொழில்கள் வியாபரிக்குமாறுசெயத அளவுகடந்த பேரருளாகிய வள்ளற்றன்மை போற்றப்படுவது. எ - ம். (௪௨)

இருண்மல மொன்றே பற்று மிருவினை யுடையேற் கந்தோ
மருண்மலி மாயை கன்மந் திரோதான கிரியை மல்கும்
பொருண்மலி தருமா மாயைப் புகர்மல நான்குந தநது
மருண்மலி யருளிற் றீரா வற்புதத் தொழின்மை போற்றி.

இ - ள். இருள் மலம் ஒன்றே பற்றும் இருவினை உடையேறகு - இருள்போன்று மறைக்கும் ஆணவமலம ஒன்றனையே பற்றுமதனால் விருப்பு வெறுப்பெனனும மூலகனமமுடைய அடியேனுக்கு,—அந்தோ-ஐயோ!,—மருள மலிமாயை கனமம் திரோதானகிரியை - மயக்கம் நிறைந்த மாயாமலம் கன்மமலங்களோடு திரோதகிரியையைச் செயயுஞ் சத்தியையும்.—மலகும பொருள் மலிதரு மா மாயைப் புகர் மலம் நான்கும் தநதும - தம்மினுந் தூலமாகக் காரியப்படும் தாத்துவீகங்களைத் தரூஉ தத்துவங்களாகிய மாமாயையும் என்னும் குற்றம்பொருந்திய நானகு மலத்தையும் தந்தும்,—அருள் மலி அருளில் தீரா அறபுதத்தொழின்மை போற்றி - அநுக்கிரகம் நிறைந்த அருட்டன்மையிற சிறிதும் நீங்காத ஆச்சரியகரமான ஐந்தொழிற்றன்மை போற்றப்படுவது. எ - ம். (௪௩)

நெருப்பிடை யழற்றி வாளி னிமிருடல் பிளந்து கண்வாய்
குருப்பொலி சோரி தூங்கக் குடைந்தடு நரகத் திட்டுங்
கருப்பொலி புவியி னுய்த்துங் காமரு துறக்கத் தேய்த்தும்
விருப்பொடு வெறுப்பு மின்றி யினிரவி காரம் போற்றி.

இ - ள். நெருப்பு இடை அழற்றி வாளின் கிமிர் உடல் பிளந்து - ஆன்மாக்களாகிய எம்மை வினைக்கேற்றபடி நெருப்பிலே வாட்டியும் வாளினாலே நீண்ட உடம்பைக் கிழித்தும்,—கண்வாய் குருப்பொலிசோரி தூங்கக்குடைந்து அடுநரகத்து இட்டும் - கண்ணும் வாயும் செந்நிறத்த விரத்தங்கக்கும்படி அகழ்ந்தும் இங்ஙனம் வருத்துகின்ற வெறுப்பைத்தரும் நரகத்திலே செலுத்தியும்,—காமரு துறக்கத்து ஏய்த்தும் - விருப்பைத்தரும் சுவர்க்கத்திலே செலுத்தியும்,—விருப்பொடு வெறுப்பும் இன்றி மிளிர் அவிகாரம் போற்றி - விருப்பத்துடனே வெறுப்பும் இல்லாது விளங்குகின்ற தேவரீரது நிர்விகாரத்தன்மை போற்றப்படுவது. எ-ம். (சச)

பூதமோ பூதத்தான பொறையுடல் பொறிக டாமோ
மேதகு கரணந் தானோ விரிதரு மாயை கொல்லோ
யாதுதா னுணர்வ தென்றென் றினைதரா வண்ண நீதாழ்
போதம்வே றென்று தநத பொங்கொளிப் போதம் போற்றி.

இ - ள். பூதமோ பூதத்து ஆன பொறை உடல் பொறிகள் தாமோ - ஐம்பெரும் பூதங்களோ? அல்லது அப்பூதங்களாலாகிய சுமையான உடமபிலே நிற்கும் ஐம்புலன்களோ?,—மேதகு கரணம்தானோ - அல்லது அவறறினும் மேன்மைபொருந்திய அந்தக்கரணங்களோ?,—விரிதரு மாயை கொல்லோ - மாயையின் விரிவாய காரியங்களின் சமுதாயமோ?,—யாது தான் உணர்வது என்றென்று இனைதராவண்ணம் - இவற்றுள் யாது தான் உணாதலைச் செய்வதாகிய உயிர் எனறு என்று வருந்ாதவாறு,—நீவேறு தாழபோதம் என்று தநத - நீ அவைகளின் வேருய் அதுவதுவாயுணரும் துலசித்தாவை என்றுணர்த்தியருளிய,—பொங்கு ஒளிப் போதம் போறறி - அதிசூக்கும சித்தாய சர்வ ஞானத்தனமை போற்றப்படுவது. எ - ம். (சரு)

கேவல சகல சுத்த முயிரெலாங் கெழுமு மென்றுந்
தாவரு மாயை யில்லா ரிருதிறத் தார்க ளென்று
மாவயின் மாயை யின்றி யடாவிரு கருமமென்று
மேவர விதித்து மாலா விழுத்தகு வாய்மை போற்றி.

இ - ள். கேவல சகல சுத்தம் உயிர் எலாம் கெழுமும் என்றும் - கேவலம் சகலம் சுத்தம் என்னுங் காரணவத்தை மூன்றையும் உயிர்களெல்லாம் அடையுமென்றும்,—தாவு அரும் மாயை இல்லார் இருதிறத்தார்கள் என்றும் - அவ்வுயிர்களுள்ளே சூற்றமற்ற மாயாமலமில்லாதவர்கள் விஞ்ஞானகலர் பிரளயாகலர் என இருவகையினர்களென்றும்,—ஆவயின் மாயை இன்றி இரு

கருமம் அடா என்றும்-அவ்விடத்து அவர்களுக்கும் மாயாமலமின்லாது இருவினைகளும் வந்து பொருந்தமாட்டா என்றும்,—மேவர விதித்து - பொருந்துமாறு கூறி,—மாலா விழுத்தகு வாய்மை போற்றி - முன்னொடு பின் முரணிமயங்கவிடாத உயர்வாகிய முற்றறிவாய உண்மைத்தன்மை போற்றப்படுவது. எ - ம்.

மாயையின்றென்றது அம்மாயையானுண்டாவதாகிய மயக்கமின்மையான் எனவும்; மாயையுண்டென்றது உடம்புண்மையான் எனவும் தெரியக்கிடத்தலின் முனனொடு பின்மலையாமை அறிக.

சாக்கிர வவத்தைக் குள்ளாஞ் சகலத்தி லென்னை யன்றோ
வாக்கிடுந் தோறு நீங்கி யடரிருட் கேவ லத்தின்
வீக்குறும் பிழையுட் கொண்டு விடாதுளஞ் சலியா மீட்டுங்
காக்குமத் தோலாச் சூழ்ச்சி கைக்கொளுங் காதல் போற்றி.

இ - ள். சாக்கிர அவத்தைக்கு உள் ஆம் சகலத்தில் - கருவிகளோடும் நின்றுணர்வதாகிய சாக்கிராவத்தைக்கு உட்பட்ட சகலாவத்தையில்,—அன்றோ என்னை ஆக்கிடுந்தோறும் நீங்கி - ஐயோ! அடியேனைச் சேர்க்குந்தோறும அவ்வவத்தையினீங்கி,—அடர் இருள் கேவலத்தின் வீக்குறும் பிழை உட்கொண்டு விடாது - பம்பிய இருண்மயமாகிய கேவலாவத்தையிலே போய்க் கட்டுண்ணும் பெருங்குற்றத்தை அறிந்தும் கைவிடாது,—உளம் சலியா மீட்டும் காக்கும் அத்தோலாச் சூழ்ச்சி கைக்கொளும் காதல் போற்றி - திருவுளம் இரக்கத்தினின்றும் வேறுபடாது மென்மேலும் அச்சகல சாக்கிரத்திற சேர்த்துக் காக்கின்ற அத்தகைய குறைவற்ற உபாயத்தைத் தமதிச்சையாகக் கைக்கொண்ட பூரத்தியெனப்படும் விருப்பம் போற்றப்படுவது. எ - ம். (சஎ)

வினைத்திற மூளு மாறு மெலியுமென் மெலிவை யாற்றி
யனைத்துக ளனுங்கு மாற்றா னறிவுறுத் தனைத்து மாற்றிக்
கனைத்துவண் டிமிருந் தேந்தார் கமழ்மலர்க் கமல பாத
நினைத்துறுழ் வாழ்வு தந்த நின்மலக் கொழுந்து போற்றி.

இ - ள். வினைத்திறம் மூளுமாறு மெலியும் என் மெலிவை ஆற்றி - இருவினைகளும் மீளவுமுண்டாமாறு பிராரத்தவினை வருத்த வருந்துகின்ற அடியேனது வருத்தத்தை ஒழித்து,—அனைத்துகள் அனுங்கும் ஆற்றால் அறிவுறுத்து - மும்மலங்களானும் உண்டாவதாகிய வாசனாமலம் நீங்கும் வகையினாலே அறியச்செய்து,—அனைத்தும் மாற்றி - மலமும் மலவாசனையும் ஆகிய எல்லாவற்றையும் மாற்றி,—கனைத்து வண்டு இமிரும் தேம் தார் கமழ் மலர்க்

கமலபாதம்-அடியவர்கள் இடையறாப் பேரன்போடு வழுத்தி யறா பவித்தலால் இன்னிசைசெய்து வண்டுகள் மொய்க்கின்ற தேனொழுகும் புட்பங்கள் கமழும் தாமரைமலரென்று உபசரிக்கத்தகும் திருவடிகளை,—நினைத்து உறும் வாழ்வுதந்த நின்மலக்கொழுந்து போற்றி - இடைவிடாது சிந்தித்துப் பொருந்தும் பெரியதோர் இன்பவாழ்வை அடியேனுக்குத் தந்தருளிய தூயவுடம்பாய சிவக்கொழுந்து போற்றப்படுவது. எ - ம்.

அனைத்து துகள் அனைத்துகளென நின்றது. அஃது அனைத்தாலாகிய துகளென விரியும். அனைத்து என்றது ஈண்டு மும்மலங்களை. (சஅ)

கேவல சகல முத்திச் சகலமும் கிளர வுய்த்தக்
கேவல சகல நீக்கக் கெழுமுறு சுத்தந் தன்னிற்
கேவல மாயி னேனைக் கேவலந் தணித்து மேலாங்
கேவல முறுத்த நாடுங் கேவலப் பொருண்மை போற்றி.

இ - ள். கேவல சகலம் முத்திச் சகலமும் கிளர உய்த்து - கேவலசகலம் சகலசகலம் சுத்தசகலம் என்னும் மூவகைச் சகலாவத்தையையும் பொருந்துமாறு செலுத்தி நுகர்வனவற்றை நுகாவித்து,—அக்கேவல சகலநீக்கக் கெழுமுறு சுத்தந் தன்னில் - அம்மூவகைச் சகலாவத்தையையும் நீக்குமாறு சிவத்தொடுங் கூடும்படி பொருந்துஞ் சுத்தாவத்தையிலே,—கேவலம் ஆயினேனை - கருவிகளினீங்கி வியாபகத்தைத் தலைப்பட்டுத் தனிமையின் முனைத்த அடியேனை,—கேவலம் தணித்து - தன்னருளுபகாரத்தை யுணர்த்தி அத்தனிமையினின்றும் முனைக்கும் முனைப்பைத்துவளுமாறு செயுது,—மேலாம் கேவலம் உறுத்த நாடும - உயர்வாகிய சிவவியாபகத்தைப்பெற்றழுந்தி அவ்வியாபக உணர்வையன்றிப் பிறிதியாதனையும் நாடாத்தனிமையாய சுத்த கேவலத்தைப் பொருத்துமாறு சங்கற்பிக்கும்—கேவலப் பொருண்மை போற்றி - ஒப்புயர்வற்ற அநாதிமுத்தத் தனமையாய பரபிரமத்துவம் போற்றப்படுவது. எ - ம். (சகூ)

ஆணவத் தன்றே பட்டா யடுத்துறு மாயை பெட்டாய்
பூணுறு வினைக்கோட் பட்டாய் போக்கொடு வரவும் பட்டா
யேனுற வறிந்தாய் நீயே போதுமென் றிழித்து மேலாம்
மாணுருத் தோற்றி யென்னைக் காட்டிய வடிவம் போற்றி.

இ - ள். மேலாம் மாணுருத்தோற்றி - நித்த முத்த சுத்தசித்தாகிய தானே உயர்வாகிய குருவுருக்கொண்டு,—அன்றே ஆண

வத்துப்பட்டாய் - அநாதியே ஆணவமலத்தொடுங்கலந்தாய்,— அடுத்தாறு மாயை பெட்டாய் - அம்மட்டோ பின்னுதியாய மாயா மலத்தையும் விரும்பிப்புணர்ந்தாய்,—மூன்றாறு வினைக்கோட்பட்டாய் - அது முன்னிலையாகப் பொருந்தும் வினையுள்ளுமகப்பட்டாய்,—போக்கொடு வரவும் பட்டாய் - அவ்வினைவழியே பிறப்பிறப்பினையுமடைந்து உழன்றாய்,—நீயே எனாற அறிந்தாய்போலும் என்று இழித்து - இப்பந்தமெல்லாம் உறஉழன்ற நீதானே வலி பொருந்தப் பெரிதும் உண்ருஞ் சித்தாணுயபோலும் என்று எள்ளி,—என்னைக் காட்டிய வடிவம் போற்றி - அடியேனை உள்ளவாறு உணரும்படி அப்பந்தமெல்லாந் துடைத்துணர்த்தியருளிய அந்தச் சிவகுரு வடிவம் போற்றப்படுவது. எ - ம். (௫௦)

ஒன்றுகே வலத்தி னையைந் துறழைந்து சகலத் தொன்று
மூன்றவிர் சகலத் தைந்து முதிரொளிச் சுத்தந் தன்னி
லென்றரு ளெழுத்தின் பேத மிசைத்துறு முறையுங் காட்டி
நன்றெனக் கருளி யாண்ட நலத்தகு பெருமை போற்றி.

இ - ள். ஒன்று கேவலத்து இனை ஐந்து - தன்னுண்மையெனப்படும் கேவலத்திலே வருத்துதற் காரணமாகிய ஐந்தெழுத்தெனவும்,—சகலத்து உறழ் ஐந்து - சகலத்திலே திரோதானம் மலம் என்னும் இவ்விரண்டும் மாறிப் பின்னிடத்தமைந்த ஐந்தெழுத்தெனவும்,—ஒளி முதிர் சுத்தம் தன்னில ஒன்று மூன் தவிர் சகலத்து ஐந்து என்று - சிவஞானம் முதிர்கின்ற சுத்தத்திலே கேவலத்தின்கண் முன்னின்ற திரோதம் மலம் இரண்டும் நீங்கச் சகலாவத்தைக்குக் கூறிய ஐந்தெழுத்து எனவும்,—அருள் எழுத்தின் பேதம் இசைத்துறு முறையும் காட்டி - இங்ஙனம் அருள விளங்கும் குறிவடிவாகிய ஐந்தெழுத்தின் பேதத்தையும் அவற்றை அவ்வவ அவத்தைகளில் நிற்கு நிலைக்கேறப மாறி மாறி உச்சரிக்கு முறைமையையும உணர்த்தி,—நன்று எனக்கு அருளி ஆண்ட நலத்தகு பெருமைபோற்றி - நன்றாகத் தமியேனுக்கு அநுக்கிரகஞ்செய்து அடிமைக்கொண்ட நனமைபொருந்திய பெருந்தன்மை போற்றப்படுவது. எ - ம். (௫௧)

யானென தென்ன நின்ற விருண்முழு திரித்திட் டெல்லாந்
தானென வென்னை வல்லே தன்னடி யிருத்திப் பொன்முன்
மீனென விளக்கே யென்ன விரவிய மாயை மாய்த்தங்
கூனுறு நுகர்ச்சி யெல்லா மேற்றரு ளுரிமை போற்றி.

இ - ள். என்னை வல்லே தன்னடி இருத்தி - சிவஞானத்தினால் ஞேயத்தைக்கண்ட அடியேனை விரைவாகவே தமது ஞானத்

UMDANUVAVA

தோறும் ஏகனாக்கி,—யான் எனது என்ன நின்ற இருள் முழுது இரித்திட்டு - தானல்லாததொன்றைத் தான் எனவும் தனதல்லாத தொன்றைத் தனதெனவுங் கருதி நிறகச்செய்த ஆணவமலகாரியம் முழுவதையும் போக்கி,—எல்லாம் தான் என - எப்பணியுந தன் பணியே யென்று இறைபணியினிற்க,—பொன்முன் மீன் என விளக்கே என்ன விரவிய மாயை மாயத்து - கதிரொளி முற் பட்ட தாரகைகளும் விளக்கும் அதனொளியாயடங்கியவாறு போல் மாயாமலத்தையும போககி,—அங்கு ஊன் உறு நுகர்ச்சி எல்லாம ஏறறு அருள் உரிமை போறறி - அவ்விடத்து உடம்பி னளவாய அநுபவிக்கக்கடவ வினைகளை யெலலாம் தானே ஏன றநுக்கிரகம புரியும உரிமைத்தன்மைம போற்றபபடுவது. எ - ம.

என்வழி யின்று காறு மிருந்தரு டன்னைப் போலத்
தன்வழி யெற்றை ஞானறுந தங்குமந் நிலைமை தோன்றத்
தன்னையு மெனையுந் தந்து தனதென தறமுப் பாழ்மேற்
பின்னிய முழுப்பா ழான பெருகுபே ரின்பம் போற்றி.

இ - ள். இன்று காறும் என்வழி இருந்தருள் தனனைப் போல - முத்திபெறுமிக்காலம் வரையும் அடியேன சென்ற கரு மத்துறைவழியே அடியேனைவிட்டு அடியேனொடும் விரவியிருந தும வெளிவராது நின்றருளிய தன்றனமையைப்போல,—தன் வழி எற்றை ஞான்றும தங்கும் அநநிலைமை தோன்ற-தன்செயலி னவழியே எக்காலத்தும் மீளாது அடியேன் வியாப்பியமாயடங்கி நிற்கும் அநநிலைமை விளங்கும்படி,—தன்னையும் எனையும் தந்து - தன்யோகமாகிய சிவபேற்றையும் தன ஞானத்தினாலே தனனை யுணரு முறையின் வைத்துத் தமியேனை யுணருமு ஆனமலாபத்தை யுந தநது.—தனது எனது அற - தனது அருடசெயலும் அடியே னது ஞாதுரு ஞானஞேயய பகுபபுணாவும நீங்கும்படி,—முப பாழமேல் பினனிய முழுபபாழான பெருகு பேரினபம் போறறி- அசுத்தம் மிச்சிரம சுத்தம் எனனும் மூவகைப் பிரபஞசததினின் றும நீங்குமிடத்து ஆனமா வியாபகத்தைத தலைப்பட்டு முனைத் தடங்கலும் அருளிற றலைப்பட்டு ஐந்தொழில் செயக்கருதித் துவள லும் அவ்வருளில வியாபபியமாயடங்கலும் என்னும் மூவகைப் பாழினமேலே அத்துவித சம்பந்தமாய முழுப்பாழாகியுள்ள மிக்க பேரினபம் போற்றப்படுவது. எ - ம்.

முழுபபாழ் ஆனந்தாதீதம். (௫௩)

அருள்பொழி விழியீ ராறு மலர்தரு முகமோ ராறுந்
திருவரு ளினிது தந்த செங்கனி வாயுங் கையு

மருமலர்ப் பதமும் வாய்ந்த வள்ளற னுருவ மெல்லாம்
பெருகிய சுகத்துக் கப்பாற் பிறங்குமப் பிறக்கம் போற்றி.

இ - ள். அருள் பொழி விழி ஈராறும் - அநுக்கிரகத்தைச் செய்கின்ற திருக்கண்கள் பன்னிரண்டும்,—அலர்தருமுகம் ஓராறும்-பிறவி வெப்பநீங்குமாறு தண்ணளிபுரிந்து மலருந் திருமுகங்கள் ஓராறும்,—திருவருள் இனிது தந்த செங்கனிவாயும் - சிவஞானத் தெளிவுபதேசத்தை அடியேனுக்கு இனிமையாகத்தந்த சிவந்த கனிபோன்ற திருவாயும்,—கையும் - அவ்வுபதேசப்பொருளைச் சின்முத்திரையானே விளக்குந் திருக்கரமும்,—மரு மலர்ப் பதமும் வாய்ந்த வள்ளல் தன உருவம எல்லாம்—அடியேன் சிரமேற சூட்டுதலினுலுணர்ந்தும் வாசனை தங்கிய மலர்போன்ற திருவடிகளும் வாயக்கப்பெற்ற பெருவளளலாகிய கந்த பரமாசாரியரின் வடிவமனைத்தும,—பெருகிய சுகத்துக்கு அப்பால் பிறங்கும் அப்பிறக்கம் போறறி - மிக்க சிவபோகத்துக்கு மேலும் மேலாக விளங்கும் அவ்விளக்கம போற்றப்படுவது. எ - ம். (௫௪)

அருளிறை தோத்திரம் முற்றிற்று.

---

என்றிருந் துதிகள் சால வியம்பியாட் டயர்ந்து முன்னே
நின்றமெய்க் குரிசி றன்னை நின்மலக் குமர னோக்கி
யின்றுநின் கருத்து முற்றிற் றினிக்கயி லாயத் தெந்தை
மன்றலங் கழற்றுள் போற்றி வதியென வருண்மேல் கொண்டு.

இ - ள். என்று இரும் துதிகள் சால இயம்பி - என்றிங்ஙனம் அரிய பெரிய தோத்திரங்களை மிகவும் சொல்லித் துதித்து,—ஆட்டு அயர்ந்து முனனே நின்ற மெய்க்குரிசில் தன்னை - ஆனந்தமேலீட்டினுலே குப்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் தமது சந்நிதியிலேநின்ற உண்மைஞானம் விளங்கிய திருநந்தி தேவரை,—நின்மலக் குமரன் நோக்கி - நிருமலராகிய கந்த பரமாசாரியர் திருவருட்பார்வை செயது,— நின்கருத்து இன்று முற்றிற்று - பனனுட்டவயிழைத்த உன்கருத்து இற்றைத்தினம் நிறைவேறிற்று,—இனிக் கயிலாயத்து எந்தை மன்றலம் கழற்றுள் போற்றி வதி என - இனித் திருக்கைலாசத்திலே எமது ஆசாரியராகிய பரமசிவனுடைய மணங்கமழும் மலர்போலும் வீரக்கழலணிந்த திருவடிகளை வழிபட்டு ஆண்டே அக்குரவர்பணியினிற்பாயென்று கட்டளையிட்டருள,—அருள் மேல் கொண்டு - திருநந்தி தேவர் அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு. எ - ம். (௫௫)

பன்முறை வணங்கி மீட்டும் பல்துதி நிரப்பி மெய்யிற்
புன்மயிர் பொடிப்பக் கண்கள் பொழிமழைத் தாரை வாக்கச்
சினமயன் றாளிற் சூழ்ந்த சிந்தையைப் புய்க்க லாற்றான்
மென்மெலப் பிந்திப் பிநதி விண்ணெறி முன்னு கின்றான்.

இ - ள். பன்முறைவணங்கி மீட்டும் பல்துதி நிரப்பி - பலதரமும் நமஸ்கரித்துத் திரும்பவும் பற்பல தோத்திரங்களைச் செய்து,—மெய்யில புன்மயிர் பொடிப்பக் கண்கள் பொழிமழைத் தாரை வாக்க - திருமேனியின்கண் மயிர்கள் சிலிர்க்கக் கண்கள் பொழியும் நீர்த்தாரையையொழுகக,—சினமயனதாளிற் சூழநத சிந்தையைப் புயக்கல் ஆற்றான் - ஞானசொரூபியாகிய கந்த பரமாசாரியரது திருவடிகளிலே பதிந்த சிந்தையை மீட்டுக்கொள்ள மாட்டாராய்,—மெல்மெலப் பிந்திப பிநதி விண்ணெறி முன்னுகினறான் - மெல்ல மெல்லப் பிந்திப் பிந்தி ஆகாயமார்க்கமாய்ச் செல்லுகின்றவர். எ - ம்.

புயக்கல் - பெயர்த்தல். (௫௬)

கோயிலை வணங்கி யப்பாற் குன்றினை வணங்கித் தான்றோய்
பாயிருந் தீர்த்த மான படர்நதி வணங்கி யவ்வூர்
மேயின வெல்லை தாழ்ந்து வெற்பது மறையுங் காறுஞ்
சேயொளி விழிநே ராகச் சென்றுபின் றிரும்பிச் சென்றான்.

இ - ள். கோயிலை வணங்கி - திருக்கோயிலை வணங்கி,—அப்பால் குன்றினை வணங்கி - அதன்மேல் திருத்தணிகாசலத்தை வணங்கி,—தான் தோய பாய் இரும் தீர்த்தமான படர்நதி வணங்கி - தான் முழ்கிப் பரிசுத்த மடைந்த பரமபெரிய தீர்த்தமாகி ஓடுகின்ற நந்தி நந்தினி என்னும் நதியை வணங்கி,—அவ்வூர் மேயின எல்லை தாழ்ந்து - அத்தலத்தின திருவெல்லையை வணங்கி,—வெற்பது மறையும் காறும் சேய் ஒளி விழி நேராகச் சென்று - திருத்தணிகாசலம் கட்புலனுக்கெட்டாது மறையும் வரையும் தூர ஒளிவகையானும் கட்புலனுக்கு நேராகுமாறு சென்று,—பின் திரும்பிச் சென்றான் - அதன்பின் திருக்கயிலாயத்தை நோக்கி நேராகச்சென்றார். எ - ம்.

சேய் ஒளி விழி என்றதற்கு அழுதலாற் செந்நிறமடைந்த திருக்கண்கள் என்பது மொன்று. (௫௭)

விலங்கலுந் தலமு மாண்ட வித்தக னுருவு மெல்லா
நலங்கிள ரறிவிற் றோய்த்து நயத்தகப் பொறித்து வைத்த

வலங்குபொற் கிழியே யான வகத்தினுன் கயிலை சார்ந்தங்
கிலங்கருட் குரவற் போற்றி யேவலி னிருக்கின் றனல்.

இ-ள். விலங்கலும் தலமும் ஆண்ட வித்தகன் உருவும் எல்லாம் - திருத்தணிகை மலையும் அத்தலமும் தம்மை அடிமைக் கொண்ட ஞானசாரியராகிய குமாரக்கடவுளின் திருவடிவுமாகிய எல்லாவறறையும்,—நலம் கிளர் அறிவில தோயத்து - நன்மை மிக்க தமது ஞானமாகிய மசியிலே தோயத்து,—நயம் தகப பொறித்துவைத்த - ஆன்மலாப முறும்படி சிநதிக்கும் சிந்தையாகிய கோலினலே எழுதிவைத்த,—அலங்கு பொற்கிழியே ஆன அகத்தினை கயிலை சார்ந்து - பிரகாசிக்கினற பொறபடமேயாகிய திருவுளத்தினையுடைய திருநந்திதேவர் திருக்கைலாசமலையை அடைந்து,—அஙகு இலங்கு அருள குரவற்போற்றி - அவ்விடத்தே அருட் பிரகாசத்தோடும் எழுநதருளியிருக்கின்ற பரம குரவராகிய சிவபெருமானை வழிபட்டு,—ஏவலின இருககின்றான் - அருளினற பணிவழுவாதியறறிக்கொண்டு ஆண்டே இருககினறார். எ-ம். (௫௮)

இன்னணஞ் சகச நிட்டை யெய்திய நந்திப் புத்தே
டன்னருட் குரவ னேவற் றலைநிற்கு மியல்புந் தேரா
ரன்னவ னூலை யாய்ந்து மாக்கைநின் றுளதேன் முத்தி
மன்னல ரென்ப ரன்னோர் மம்மர்நோய்க் கொழிவு முண்டே.

இ-ள். இன்னணம் சகச நிட்டை எயதிய நந்திப் புத்தேள் - இவ்வாறு சகசநிட்டையை அடைந்த திருநந்திதேவர்,—தன அருள் குரவன் ஏவற்றலை நிறகும் இயல்பும் தேரார் - தமது ஞானசாரியர் பணித்தருளியபடியே பரமாசாரியராகிய சிவபெருமானுக்குத் திருத்தொண்டுசெய்து ஒழுகுந் தன்மையையும் உணரமாட்டாதார்,—அன்னவன் நூலை ஆயநதும் ஆக்கை நின்றுளதேல முத்தி மன்னலர் என்பர் - அத்திருநந்திதேவர் தாம் கேட்டவண்ணமே தமது சந்தானவழியாய உலகுக்குதவிய சிவஞானபோதத்தை ஆராய்ந்துகொண்டும், உடம்போடிருக்கின் அவர் முத்தியடைந்தவராக மாட்டாரென்று சொல்வார்.—அன்னோர் மம்மர் நோய்க்கு ஒழிவும் உண்டே - அத்தகைய மந்த மதியுடையோரின் மயக்கமாகிய பித்து நோயினுக்கு நீக்கமும் உண்டுகொல்லோ! எ-ம். (௫௯)

நூலினை யுணர்ந்தார் போன்று நுண்ணறி வுடையார் போன்று
மாலினைத் தவிர்ந்தார் போன்றும்வழியறிந் தடைந்தார்போன்று

மேலெனத் தத்தங் கோளே விதந்தலை கின்றார் நந்தி
சாலவன் றருளு நூலிற் றலைப்படா வுள்ளத் தாரே.

இ - ள். நந்தி அன்று அருளும் நூலில் சால தலைப்படா உள்ளத்தார் - திருநந்திதேவகுரவர் பரமாப்தகுரவரிடத்தே கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டைமேவிய அக்காலத்தே சற்சீடருக்கு உபதேசித்துச் சற சந்தானமுறையில் உலகுக்கருளிய சிவஞான போத நூலின்வழியே அறிவு சாலும்படி உண்மைநெறியைத் தலைப்படாத கற்பித நூல்களைப் படைத்திட்டு மொழியும் மந்த வறிவினர்,—நூலினை உணர்ந்தார் போனறும - ஞானநூலை நன்குணர்ந்தவர்போலவும்,—நுண்ணறிவு உடையார் போன்றும் - அதனாலே நுண்ணுணர்வடைந்தவர்போலவும்,—மாலினைத் தவிர்ந்தார் போனறும் - அதனாலே மயக்கந்தரும் மும்மலங்களின் நீங்கினவர்போலவும்,—வழி அறிந்து அடைந்தார் போன்றும் - அதனாலே உண்மையை உணர்ந்து முத்தி கைவந்தவர்போலவும்,—தத்தம் கோளே மேல என விதந்து அலைகின்றார் - தங்கள் தங்கள் மதக்கோட்பாடுகளையே மேலானவை என்று கூறி உழிதருகின்றார்கள்; இவரறியாமை யிருந்தபடி யென்னவிபரீதம்! எ - ம்.

சத்திய நிருவா ணத்தாற் றனுகர ணாதி தம்பாற்
பொத்திய வோட்டி னொட்டாப் புளிம்பழம் போற றேற்றா
ரத்தினா லுடல்போ மென்ப ரதுபுரி முறையுந் தேற்றார்
பித்தென மயங்கி நிற்பர் பெரிதிவ ருணர்ந்தார் போலும்.

இ - ள். சத்திய நிருவாணத்தால் தனுகரணாதி தம்பால் பொத்திய ஓட்டின் ஒட்டாப் புளிம்பழம் போறல் தேற்றார் - சத்திய நிருவாண தீக்கையினாலே உடல் கரணாதிகள் தம்மிடத்தே மூடிய ஓட்டிலே யொட்டாத புளியம்பழம்போலக் கூடியுங் கூடாதிருத்தலை உணரு மதுகையில்லாதார்,—அத்தினால் உடல் போம் என்பர் அது புரிமுறையும் தேற்றார் பித்து என மயங்கி நிற்பர் - அத் தீக்கையினாலே உடனேயே உடம்பொழிந்து விடுமென்பர் அதனைச் செய்யும் முறையையும் அறியாதவராய்ப் பித்துண்டானரைப்போல மயங்கிநிற்பர்.—இவர் பெரிது உணர்ந்தார் போலும் - இவர் மிக்குணர்ந்தவர்போலும்! எ - ம். (௯௧)

பிறவுயிர்க் கருள நிற்கும் பெற்றிமை யோரார் தேகத்
துறும்வினை யுடல்போங் காறு முயிருண் ணுமென்பா ரென்னி
னறிவொடு கலத்த லின்றா யாம்வினை வளரத் தேக
மறுவலு மெடுப்ப தோரா ரிவர்களு மலமற் றாரே.

இ - ள். பிற உயிர்க்கு அருள நிற்கும் பெற்றிமை ஓரார் - அச்சத்திய நிருவாண தீக்கையை முத்தராய அவ்வாசாரியர்கள் பக்குவான்மாக்களுக்கு அநுக்கிரகஞ் செய்யும்பொருட்டு அவவுடம்போடும் அங்ஙனம் நிற்குந் தன்மையை அறியு மதுகையிலலாதவர்கள்,—தேகத்து உறும் வினை உடல் போம் காறும் உயிர் உணணும் என்பார் என்னின் - உடம்பிற் பொருந்திய பிராரத்த வினையை அவ்வுடம்பு நீங்குமளவும் அவ்வான்மாவே அநுபவிக்கு மென்றுரைப்பாரேல்,—அறிவொடு கலத்தல் இன்றாய ஆம் வினை வளர - சிவஞானத்தோடும் பிரிப்பின்றிக் கலத்தலில்லையாகி அவ்வினை நுகர்ச்சியாற் பிற்செய்வினை வளர்ந்துவர,—மறுவலும் தேகம் எடுப்பது ஓரார் - அவ்வான்மா அவ்வினைக்கீடாகப் பின்னரும் பிறப்பிற் சென்றுழிதருவதன்றி அஃதொழியு மாறில்லையென பதை உணரமாட்டார்கள்.—இவர்களும் மலம் அற்றாரே - இத்தகையோர்களும் மும்மலங்களின நீங்கினவராவரோ? எ - ம். ()

ஆங்கவன் போல யானு மறுகுண முடையே னென்பா
ரோங்கவன் றொழில்க ளெல்லா முஞற்றுவல் யானே யென்பார்
தேங்கிய பிரமம் யானே தெளிவுறின் வேறின் றென்பா
ரீங்கிவ்வா றுரைப்போ ரெல்லா முயிரியல் புணரா தோரே.

இ - ள். ஆங்கு அவன்போல யானும் அறுகுணம் உடையேன் என்பார் - சைவருளொருசாரார் முத்தியின்கண்ணே அபரமனுர் போல ஆன்மாவாகிய நானும் மங்கலகுணமாறும் உடையேன் என்பார்,—ஓங்கு அவன் தொழில்களெல்லாம் யானே உஞற்றுவல் என்பார் - மற்றொருசாரார் சமானரகிதராகிய சிவ பரம்பொருளினது ஐநதொழிலையும் சிவசாமியம் அடைந்த ஆனமாவாகிய நானே செயவேனென்பார்,—தெளிவுறின் யானே தேங்கிய பிரமம் வேறு இன்று என்பார் - புறச்சமயதொருசாரார் பிராந்தியினீங்கித் தெளியப்பெறின் ஆன்மாவாகிய நானே அகண்ட பரிபூரணப் பிரம சொரூபம்; எனனைத்தவிர ஏனையவாகக் காண்பனவெல்லாம முக்காலத்து மில்லாதனவே யாமென்பார் — ஈங்கு இவ்வாறு உரைப்போர் எல்லாம் உயிர இயல்பு உணராதோரே - இங்கே இவ்வாறு தந்தம் முத்தியிலக்கணங்களைக் கூறுமிவரெல்லாம் ஒரு குடியிற்கொண்டாரைபபோல ஆனம இலக்கணமுணராமையின் ஒத்த பிராந்தரே யாவர். எ - ம். (௯௫)

வரிகழற் குமா னல்க மாதவ னந்தி பெற்றுங்
கரிறப விளக்கு றூவி னமைதராப் பொருள்க ளில்லை
கரிசிலந் றூவி னுண்மை கேட்டிலார் கல்வி சான்றும்
விரியுமுப் பொருளின் றன்மை தன்னமும் விளங்கக் காணூர்.

இ - ள். வரிகழல் குமரன் நல்க மாதவ நந்தி பெற்றாங்கு - வீரக்கழலையணிந்த பாசச்சேதராகிய கந்தபரமாசாரியர் அனுக்கிரகிக்க மாதவசிரேட்டராய திருநந்திதேவர் தாம் பெற்றாற்போல,— அரில் தப விளக்கு நூலின் அமைதராப் பொருள்கள் இல்லை - சந்தேக விபரீதக் குற்றம்நீங்கத் தம் சந்தானத்து அடியவர்களுக்கு உபதேசித்து உலகுக்குதவிய முதன்மையாய சிவஞானபோத நூலிலே அடங்காத மதப்பொருள்கள் இல்லை.—கரிசு இல் அந்நூலின் உண்மை கேட்டிலார் - குற்றமில்லாத அத்தகைய சிவஞானபோத நூலின்கட் கூறப்படும் உண்மைப்பொருளாகிய முப்பொருள்களின் பொதுவியல்பு சிறப்பியல்புகளை அகச்சந்தான முறைமையிலே நல்லாசிரியரிடத்தே கேட்கப் பெறாதவர்கள்,—கல்வி சான்றும் - பிறநூற்கல்விகளான் மிகுந்தும்,— விரியும் முப்பொருளின் தன்மை தன்னமும் விளங்கக் காணார் - விரிந்த திரிபதார்த்த உண்மையை ஒருசிறிதுந் தெளிவு பெறவுணராதவரேயாவர். எ - ம். (௬௪)

மந்திர கலைகண் மற்றைத் தந்திர கலைவான் வேத
மந்தமி லேனை யெண்ணெண் கலைமுத லுவர வாய்ந்த
நந்தியுந் தணிகைச் செவ்வே ணல்கிடப் பெற்றா னென்றான்
மூந்துநூன் மாத்தி ரத்தான் முப்பொரு டெளிய லாமே.

இ - ள். தந்திரகலை - கர்மகாண்டப் பொருளை விளக்கும் தந்திரகலையையும்,—மற்றை மந்திரகலை - ஏனைய உபாசனாகாண்டப்பொருளை விளக்கும் மந்திரகலையையும்,—வான் வேதம் - உயர்வாகிய வேதங்களையும்,—அந்தமில் ஏனை எண்ணெண் கலைமுதல் - அளவில்லாத ஏனைய அறுபத்துநான்கு கலைகண் முதலியவற்றையும்,—உவர ஆய்ந்த நந்தியும் - நன்காராயந்துணர்ந்த திருநந்திதேவரும்,—தணிகைச் செவ்வேள் நல்கிடப் பெற்றான் என்றால் - திருத்தணிகாசலத்திலே எழுந்தருளியிருக்கும் கந்த பரமாசாரியர் உபதேசகலையை உபதேசிக்கப்பெற்றே உண்மைநெறியைத் தலைப்பட்டாரெனனில்,—மூந்து நூல் மாத்திரத்தால் முப்பொருள் தெளியலாமே - மும்மல வசப்பட்டு முறை மறந்துழலும் நம்மனோர்கள் முதன்மையாய நூல்களை ஓதியதனான்மாத்திரம் தம்மின் வேறல்லாத எண்குணமுடைய முதல்வனியல்பையும் தம்மின்வேறாய மலத்தொடுபட்ட தம்மியல்பையும் அம்மலவியல்பையும் தேர்ந்துணர்ந்து கொள்ளுதல் கூடுமோ! எ - ம்.

இன்னணஞ் சகசநிட்டையெய்திய நந்திப்புத்தேள் என்பது முதல் இதுகாறும் குரவன்சிறப்பும் நூற்சிறப்பும் அது கேட்குமுறையும் எதிர்மறை முகத்தான் விளக்கியவாறறிக. (௬௫)

வேறு.

ஞானநூ லோத லோதுவித் திடுத
னற்பொருள் கேட்டல் கேட்பித்த
லானவப் பொருளைச் சிந்தனை செய்த
லைந்துஞா னத்துறு பூசை
தானெனி லந்நூன் முப்பொரு டெளிக்குந்
தலைப்பொரு ளாகிய தணிகை
வானவன் மலர்த்தாள் வணங்குந ரெய்தும்
வரத்தினை யென்னென மொழிகேன்.

இருவினைச் சமத்தி னெய்திய முனிவீ
ரெறிதிரை நதிநந் தினியை
வரவழைத் தயில்வேல் வள்ளன்மா தவத்து
நந்தியை யாடுறப் பணித்துப்
பொருவிலா கமத்தி னுயருப தேச
கலையினைப் புகன்றவா புகன்றும்
விரவிய புகழா னகத்திய னண்மி
மெய்யருள் பெற்றது மொழிவாம்.

சிவஞானத்தெளிவுபதேசத்திரயம் முற்றிற்று.

மெய்கண்டதேவன் திருவடிவாழ்க.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.